உலகின் பண்டைய நாகரீகம் என்று கண்டுபிடிக்கப்பட்ட சிந்து நதி நாகரீகத்தின் கண்டுபிடிப்பு மிகவும குநூகலமானது. 1920 இல் தயாராம் சஹான் ஹரப்பா மற்றும் 1921 இல் ஆர்.டி. பானர்ஜி அவர்கள் மொஹஞ்சாதாராவிலும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு பண்டைய சிந்து நதி நாகரீகத்தின் புதைபொருடிகளை தேடினர். இவற்றின் அடிப்படையில் இந்திய தொல்லியல் துறையின் அன்றைய தலைவரான சர் ஜான் மார்ஷர் 1924 செப்டம்பர் மாத 'தி இல்யூஸ்சேரட் லண்டன் நியூஸ்' என்ற ஆங்கில இதழில் இந்திய பண்டைய நாகரீக ஆராய்ச்சி பற்றி வெளியிட்டிருந்தார். இதனால் உலகிற்கு இந்தியாவின் சுமார் 5000 ஆண்டு பண்டைய கலாச்சாரம் அறிமுகமானது. இந்தியாவின் வடமேற்கு எல்லையிலுளிள சிந்து நதி பகுதிகளில் இதற்குமுன்பும் ஆராய்ச்சிகள் நடைபெற்றன. 1826 இல் சார்லஸ் மியாசன் அவர்கள் ஹரப்பா குடியிருப்புகளுக்கு சென்று அங்குள்ள பண்டைய புதைபொருட்களடிப் படையில், அவை மு.பொ.ச 4 ஆம் நூற்றாண்டின் அலெக்சாண்டர் போரஸை தோற்கடித்த இடமாக குறிப்பிட்டப்பட்டது. மற்றொரு பயணி அலெக்சாண்டர் பர்னஸ் என்பவர் ஹரப்பா குடியிருப்புகளை பார்வையிட்டார். தொல்லியல் துறையின் முதல் இயக்குனர் ஜெனரல் அலெக்சாண்டர் கன்னிங் ஹாம் என்பவர் சிறிய அளவில் அகழ் வாராய்ச்சி மேற்கொண்டாலும், பண்டைய நாகரீகத் தடயங்கள் இவை என்று குறிப்பிட இயலவில்லை. 1924 யில் ஜான் மார்ஷல் அவரின் தலைமையில் முதன் முறையாக இந்திய பண்டைய நாகரீகத்தின் ஆராய்ச்சி உலகிற்கு அறிவிக்கப்பட்டது. இந்நாகரீகத்தின் விரிவாக்கம் மிகவும் பரந்து விரிந்துள்ளது. அது சிந்து நதி மற்றும் குப்தகாமினி என்று அழைக்கப்படும் சரஸ்வதி நதி குறும்பள்ளத்தாக்குகளைக் கொண்டுள்ளது. ஆகையால் இந்நாகரீகம் சிந்து-சரஸ்வதி நாகரீகம் என்றழைக்கப்படுகிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

**நகர்ப்புற கட்டுமானம்:-**

நாம் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பகுதிகளை ஹரப்பா நகரங்களில் காணமுடிகிறது. மேற்குப் பகுதியானது குறுகிய உயரமான பகுதியாகும், இதனை தொல்பொருள் ஆய்வாளர்கள் கோட்டை என்று கருதுகின்றனர். கிழக்குப் பகுதி தாழ்ந்தும் அகன்றும் உள்ளது. இது தாழ்வான கிராமம் என அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு பகுதியும் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட சுவரைக் கொண்டுள்ளது. செங்கற்கள் ஒன்றோடு ஒன்று பிணைத்து அமைக்கப்பட்டதால் சுவர்கள் மிகவும் வலுவாக உள்ளன. சுட்ட செங்கற்களின் பயன்பாடு அந்த கலாச்சாரத்தின் எழுச்சியைக் குறிக்கிறது.

மொகஞ்சதாரோ என்ற மற்றொரு நகரத்தில் ஒரு குளியல் குளம் உள்ளது. நிபுணர்கள் இதனை பெரிய குளம் என்று அழைக்கின்றனர். குளங்கள் தண்ணீர் வீணாகாமல் இருக்க செங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. இந்தக் குளத்தில் கீழே இறங்குவதற்கு இருபுறங்களிலும் படிக்கட்டுகளையும் குளத்தைச் சுற்றி அறைகளையும் கொண்டுள்ளன. நீரின் விநியோகம் நன்றாக இருந்ததால் பயன்பாட்டிற்கு பிறகு தண்ணீர் வெளியேற்றப்பட்டுள்ளன. பெரும்பாலும் சிறப்பு நேரங்களில் மிகவும் முக்கியமானவர்கள் இங்கு குளியல் நடத்தியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



பொது குளியலறை மொகஞ்சதாரோ

© KTBS NOT TO BE REPUBLISHED



ஒரு நடனக் கலைஞரின் உலோகக் சிலை



சிதைந்த மனிதஉருவசிலை



ஸ்வஸ்திக்(சூரிய) முத்திரை



சிந்து எழுத்து

காலிபங்கன் மற்றும் லோத்தல் போன்ற நகரங்களில் விறகு அடுப்புகள்கண்டுபிடிக்கப்பட்டுள்ளன,மொகஞ்சதாரோ, ஹரப்பா மற்றும் லோத்தல் போன்ற நகரங்களில் திட்டமிடப்பட்ட களஞ்சியங்கள் கட்டப்பட்டுள்ளன.

தாழ்ப்பகுதியில் உள்ள கிராமம் தான் மக்களின் வாழ்விடமாக இருந்தது. அது மிகவும் திட்டமிடப்பட்ட நிலையில் கட்டப்பட்டுள்ளது. வீடுகள், சாலைகள் மற்றும் கழிவு நீர் கால்வாய்கள் முறையாக அமைக்கப்பட்டுள்ளதை நாம் காணமுடிகிறது. ஒவ்வொருவரும் ஒன்று அல்லது இரண்டு மாடிகளைக் கொண்ட வீடுகளிலேயே வாழ்ந்துள்ளனர். செங்கற்களால் கட்டப்பட்ட வீடுகள் மிகவும் வலுவான சுவர்களைக் கொண்டிருந்தன.உள்முற்றத்தைச் சுற்றி அறைகள் இருந்தன. முக்கியமாக தலைவாசல் சாலையை நோக்கி இருந்தது. ஜன்னல்கள் எதுவும் சாலையை நோக்கி இல்லை. வீடுகளில் குளியல் அறைகளும் இருந்தன. வீட்டிற்கு தேவையான தண்ணீரை வழங்கக்கூடிய கிணறுகள் இருந்தன. தண்ணீர் தாராளமாக கிடைத்தது. ஒவ்வொரு வீட்டிலும் குளிப்பதற்கு சொந்தமான குளியலறை என்பது மிக முக்கியமானதாகும். இத்தகைய தகவல்கள் கொண்டு சிந்து சரஸ்வதி நாகரீக மனிதர்களின் வளமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்பதை கற்பனை செய்து பார்க்கலாம்.

நகரங்களில் கழிவு நீர் அமைப்பு இருந்தது.செங்கற்களால் கட்டப்பட்ட கழிவுநீர் கால்வாய்கள் பாளக்கற்களால்

© KTBS NOT TO BE REPUBLISHED

மூடப்பட்டிருந்தன. வீட்டிற்கு வெளியே சாக்கடைக் கால்வாய் கள் அமைக்கப்பட்டிருந்தன. குளிப்பதற்கு பயன்படுத்திய அசுத்தமான தண்ணீர் அச்சாக்கடையில் ஓடியது. சாக்கடை கால்வாய்கள் மூல வாய்க்கால்களுடன் இணைக்கப்பட்டிருந்தது. கழிவு நீர் கால்வாய்களை அவ்வப்போது சுத்தமாக வைத்திருக்கும் வகையில் துவாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றை பராமரிக்க தனிஅதிகாரிகள் அமர்த்தபட்டிருந்தனர் சாக்கடை அமைப்பு என்பது அக்கால நகரக் கட்டிடக் கலைஞர்களின் சிறந்த சிந்தனைகளில் ஒன்றாகும். அன்றைய நகரங்களை திட்டமிட்டவர்களின் முறையான சிந்தனை செயல்முறை, குறைகள் இல்லாத செயல்பாடு மற்றும் பராமரிப்பு,குடிமை பொறுப்புகளில் ஆர்வம் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தது என்பதைக் காட்டுகிறது.

எகிப்து, மெசபடோமியா மற்றும் பிற நாகரீகங்களில் கூட இத்தகைய நன்கு வளர்ந்த நகர கட்டுமானம் அமைப்பு காணப்படவில்லை. அளவு அடிப்படையில் கூட சிந்து-சரஸ்வதி நாகரீகம் அந்தக் காலத்தின் மற்ற நாகரீகங்களை விட மிகவும் மேம்பட்டதாகும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**புலம் பெயர்ந்த வாழ்க்கையில் இருந்து கிராம வாழ்க்கைக்கு**

புலம்பெயர்ந்த வாழ்க்கை நிலைப் பெற்றுள்ள நிலையில் சில இடங்களில் குடிசைகள் மற்றும் வீடுகள் இருந்ததற்கான தடயங்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர் இன்றைய காஷ்மீரில் உள்ள பர்சாஹூமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கால மக்கள் பூமியை குழி தோண்டி அதற்குள் வாழ்ந்தனர். குழிக்குள் செல்வதற்கு படிக்கட்டுகள் இருந்தன. குளிர் மற்றும் கொடூரமான விலங்குகளிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அவர்கள் இவ்வாறு செய்தனர். இத்தகைய கூடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் சேறு குழிகள் உள்ளன. இவை தட்பவெட்ப நிலையை பொறுத்து கூடுகளுக்கு வெளியே அல்லது உள்ளே சமைக்கப் பயன்படுத்தப்பட்டன. ஈரானுக்கு செல்லும் வழியான போலன் கணவாய் வளமான சமவெளிக்கு அருகில் அமைந்துள்ளது. மெஹர்கரின் மக்கள் பார்லி மற்றும் கோதுமை பயிரிடவும் செம்மறி ஆடுகள் மற்றும் வெள்ளாடுகளை வளர்க்கவும் கற்றுக் கொண்டனர். இது நமக்கு கிடைத்துள்ள முதல் கிராமம் ஆகும்.மெஹர்கரின் மக்கள் வீடுகளில் வாழ்ந்தனர். சில வீடுகளில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகள் இருந்தன. விலங்குகளின் புதை வடிவங்கள் தவிர பல புதைக் குழிகள் இங்கு காணப்படுகின்றன. மனிதர்களுடன் விலங்குகளையும் இங்கு புதைத்துள்ளனர்.

## கலாச்சார விவரங்கள்



தாய் தெய்வத்தின் சிலை

கட்டிடங்களை தவிர உலோகம் மற்றும் விலை உயர்ந்த கற்களை இங்கு நாம் காண்கிறோம். பெரும்பாலான பொருட்களில் மணிகள் மற்றும் முத்திரைகள் காணப்படுகின்றன. ஹரப்பா மணிகளுக்கு தொலைதூர மெசபடோமியாவிலும் தேவை இருந்தது ஹரப்பா மக்களின் சிறப்புகளில் ஒன்று மணிகளில் நீண்ட துளையிடும் வழக்கம் ஆகும். பலவகையான உருவப் படங்களுடன் கூடிய பானைகள் இங்கு கிடைத்துள்ளன. உலோகங்கள் சங்கு மற்றும் பிற பொருட்களால் செய்யப்பட்ட வளையல்கள் அதிக எண்ணிக்கையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவைகளை பல்வேறு வகைகளில் பதுங்கியிருந்த பெண்களின் சிலைகள் கண்டெடுக்கப் பட்டுள்ளன சங்கு வளையல்கள் பெண்கள் அணிவதை புனிதமானதாக எல்லா வகுப்பு பெண்களும் கருதுவது இன்று வரை காணப்படுகின்றது.



காலிபங்கன் சிவலிங்கம்







பசுபதி, ஹின்னிலு பசவா, ஒற்றைக் கொம்பு தேவதை (யூனிகார்ன்)முத்திரைகள்

லிபி முத்திரைகளின் மீது இன்னும் அறியப்படாத லிபி எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கான முத்திரைகள் மேலே லிபிகளை காண முடிகிறது.விர்ஷபா(காளை)அந்த கால முத்திரைகளில் மிக முக்கியமான உருவங்களில் ஒன்றாகும். மேலும் புனிதமான அத்தி (பீப்பல்) அல்லது அஸ்வத்தா மரத்தின் இலை முத்திரைகளில் மற்றொரு முக்கியமான உருவமாக

©KTBS NOT TO BE REPUBLISHED

உள்ளது. பல்வேறு யோகா மற்றும் நமஸ்கார தோரணைகளுடன் கூடிய பல சிலைகளும் காணப்படுகின்றன.

நெசவாளர்கள் பருத்தி சில சமயங்களில் பட்டுடன் வேலை செய்தனர்.கற்கள்,தந்தங்கள் மற்றும் அத்தகைய பொருட்களில் வேலை செய்யும் கலைஞர்கள் இருந்தனர். கம்பளி போர்வைகள், மரத்தில் செய்த பொருட்கள் கட்டிடங்களின் அழகை மேம்படுத்தும் பொருட்கள் போன்றவை வழக்கத்தில் இருந்தது. பண்டைய நாகரீகங்களில் காணப்படும் முக்கியமான உலோகக் கலவைகளில் வெண்கலமும் ஒன்றாகும். பலுசிஸ்தான், ராஜஸ்தான் போன்ற இடங்களில் உலோகக் கலவையை உருவாக்க தேவையான தாமிரம் கிடைத்ததாக கூறப்படுகிறது. பல நூற்றாண்டுகளின் முயற்சிக்குப் பிறகு மக்கள் வெண்கலம் செய்யும் கலையில் தேர்ச்சி பெற்றனர்.இத்தகைய தொழில் நுட்பம் கடினமான கருவிகள் முதல் கண்ணாடிகள் வரை பல பொருட்களை உருவாக்க அவர்களுக்கு உதவியது.


தீகுண்டம் இருந்த பனாவாலி

கலை, இலக்கியம், இசை நடனம்,படம், சிற்பம் ஆகியன நன்கு நிலை பெற்றன. நடனம் ஆடும் தோரணையில் உள்ள பெண் உருவங்கள் மேளம் மற்றும் கம்பி இசைக்கருவிகளின், பல்வேறு வகையான முகமுடிகள் அகழ்வாராய்ச்சியில் வெளிக்கொண்டு வரப்பட்டவைகள் அவர்களின் ஆழ்ந்த ஆர்வத்தை உறுதிப்படுத்துகின்றன. மொகஞ்சதாரோவில் பெறப்பட்ட புகழ்பெற்ற நடனமாடும் பெண் உருவம், அதன் தோரணை மற்றும் அது அணிந்திருக்கும் வளையல்களுடன் இந்தியப் பெண்ணின் அசல் வடிவமாக காணப்படுகிறது. பொம்மை வண்டிகள்,பம்பரம்,விசில்கள் போன்ற குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் காணப்பட்டன.

### விவசாயம் மற்றும் வணிகம் :

சிந்து-சரஸ்வதி கலாச்சாரத்தின் மக்கள் விவசாயம் மற்றும் வணிகத்தை நம்பியிருந்தனர் அவர்களின் முக்கிய பயிர் கோதுமை, பார்லி மற்றும் நெல் ஆகும்.அன்றைய மாட்டு

©KTBS NOT TO BE REPUBLISHED

வண்டி இன்றும் பயன்பாட்டில் உள்ளது, வேட்டையாடுதல் மற்றும் மீன்பிடித்தல் ஆகியவை பரவலாக உள்ளன. பருத்தி விளைவித்து அதில் விதவிதமான ஆடைகள் நெய்யப்பட்டன. சில நகரங்கள் ஆற்றின் கரையோரமாக அமைந்து இருந்த காரணத்தால் இங்கு நீர்ப்பாசனம் நடைப்பெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.எருது, காளை,மாடு, செம்மறியாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வந்தார்கள். சுமை சுமக்க எருதுகள் பயன்படுத்தப்பட்டன. விவசாயத்துடன், வணிகம், வியாபாரம், முக்கிய இடத்தை பிடித்திருந்தன. நகரங்கள் கிராமப்புறங்களில் மற்றும் வெளிநாடுகளுடன் வியாபாரம் செய்து வந்தனர். இவற்றில் சில பலுசிஸ்தான், சௌராஷ்ட்ரா மற்றும் தக்காண பகுதிகளாகும். மெசபடோமியாவில் கிடைக்கப்பெற்ற பல முத்திரைகள் அந்த பகுதிகளுடனும் சிந்து- சரஸ்வதி நாகரிகத்துடனும் ஒத்திருந்தது.

குஜராத்தின் லோதலில் ஒரு பெரிய கட்டிடம் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். இது ஒரு கப்பல் துறையாக இருந்திருக்க வேண்டும். லோதால் கடற்பரப்பின் முக்கிய மையமாக இருந்தது. தோலாவிராவில் மழை நீரை தகுந்தவாறு சேகரிக்கும் முறை இருந்தது. நகரத்தில் மூன்றில் ஒரு பங்கு அதற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டதால் சிந்து-சரஸ்வதி நாகரீகம் மிகவும் முன்னேறி உள்ளது.

**அழிவு:-**

சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பே இந்நாகரீகம் அழியத் தொடங்கியது. நகரங்களின் வீழ்ச்சிக்கு வரலாற்று ஆசிரியர்கள் பல விளக்கங்களை அளித்துள்ளனர். சில வறண்ட ஆறுகள் மற்றும் திசை மாறிய ஆறுகள் நகரங்களின் வீழ்ச்சிக்கு காரணமயிற்று, காடுகளின் அழிவும் இதற்கு காரணமாயிற்று, சிந்து மற்றும் மேற்கு பஞ்சாப்பின் சில குடியிருப்புகளில் இருந்த மக்கள் கிழக்கு மற்றும் தெற்கில் புதிய இடங்களுக்கு இடம் பெயர்ந்ததாக சிலர் கூறுகிறார்கள். குஜராத்தின் லோத்தல் நகரத்தில் சிந்து-சரஸ்வதி நாகரீகத்தின் செயல்முறை இன்னும் பல ஆண்டுகளாக தொடர்ந்துள்ளது. இந்த செயல்முறை காலப்போக்கில் நமது கலாச்சாரத்துடன் பின்னி பிணைந்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

**வேத காலத்தின் நாகரீகம்**

இந்தியாவின் வரலாற்று காலம் வேதகால நாகரீகத்திலிருந்தே தொடங்கும். இதன் காலம் பொ. ச.மு 1500 முதல் பொ.ச.மு 700 க்கு இடைப்பட்ட காலம் என குறிப்பிடுகிறது. இதனை மற்றும் பிற்கால வேதகாலம் (யஜீர் வேதம், அதர்வண வேதம்), என்று வகைப் படுத்தப்பட்டுள்ளது. வேதம் என்ற சொல் ‘வித்’ என்ற சொல்லிலிருந்து உருவானது. வித் என்றால் வேதம் என்று பொருள்.

**வேதகால கலாச்சாரம் :**

முதன்முதல் வேதமான ரிக்வேதத்தில் 1028 பாடல்கள் மற்றும் 10 மண்டலங்கள் உள்ளன. இயற்கை, கடவுள் / தெய்வங்களின் வழிபாட்டு பாடல்களைக் கொண்டுள்ளன. இப்பாடல்களைப் பாடுபவர் / படிப்பவர்கள் ‘ஹோத்ரி’ என்றழைக்கப்பட்டார்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**வேதகால சமூக, மத, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு:**

**முந்தைய வேதகாலம் :** ரிக்வேதத்தின் 10 வது மண்டலத்திலுள்ள புருஷ ஸூக்தத்தில் வர்ணங்கள் பற்றி குறிப்படப்பட்டுள்ளது. அந்த சமூகத்தில் பிராமணர், சத்திரியர், வைஷ்யர் மற்றும் மற்றும் சூத்திரர் என்ற நான்கு வர்ணங்கள் இருந்தன. ஒரு நபர் அவர் தேர்ந்தெடுத்த தொழிலடிப்படையில் வர்ணம் தீர்மானிக்கப்பட்டதே தவிர பிறப்படிப்படையில் இல்லை. சமூகத்தில் பெண்களுக்கு சமமான வாய்ப்பு, இடம் வழங்கப்பட்டது. அரசன் ராஜன் என்றழைக்கப்பட்டான் இவனுக்கு உதவுவதற்கு சபா, சமிதி என்ற அமைப்புகள் மற்றும் விதவை மறுமணம் நடைமுறையில் இருந்தது. முந்தைய வேதகாலத்தில் மக்கள் கால்நடைவளர்ப்பு மற்றும் வேளாண்மை தொழில்களில் ஈடுபட்டிருந்தனர்.

**உத்தர வேதகாலம் :** பிறப்பால் ஒரு நபரின் சாதி நிர்ணயிக்கப்பட தொடங்கியது சாதி அமைப்பு மேலோங்கியது. சமூகத்தில் பெண்களுக்கு சமமான இடம் வழங்கப்படவில்லை இக்காலத்தில் யக்ஞம், யாகங்கள் வழக்கத்திற்குவந்தன. இக்காலகட்டத்தில் விதாத் சபையும் மறைந்து போனது. விதவை மறுமணம் தடுக்கப்பட்டது. வரதட்சணை வரதாமுறை, குழந்தை திருமணம் போன்றவை வழக்கத்திற்கு வந்தன. உத்தர வேதகாலத்தில் வேட்டையாடுதல் மற்றும் காலநடைவளர்த்தலை விட வேளாண்மை மக்களின் முக்கிய தொழிலாயிற்று.

## பயிற்சிகள்

©KTBS NOT TO BE REPUBLISHED

**I. விடுபட்ட இடங்களை ஏற்ற செற்களால் நிரப்புக.**

1. சிந்து நாகரீகத்தின் முத்திரை மீதுள்ள லிபியை சான்றோர்கள் ............ என்றழைத்தனர்.
2. சிந்து - சரஸ்வதி நாகரீகத்தின் கடல் வணிகத்தின் முக்கிய மையம் .........
3. மழைநீரை தகுந்தமுறையில் சேகரிக்கும் அமைப்பு இருக்கும் இடம் ..................

**II. கீழ்க்காணும் விளாக்களுக்கு மூன்று அல்லது நான்கு வாக்கியங்களில் விடையளிக்கவும்.**

4. இந்நாகரீத்தில் குளியல் குளங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன?
5. சிந்து சரஸ்வதி நாகரீக மக்களின் முக்கிய தொழில்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
6. சிந்து-சரஸ்வதி நாகரீகத்தின் கலாச்சாரம் பற்றி அறிய கிடைத்துள்ள தடயங்களை பட்டியலிடுக.

7. சிந்து சரஸ்வதி நாகரீகத்தின் பொருளாதார அமைப்பை விவரிக்கவும்.

8. முந்தைய வேதகாலம் மற்றும் உத்தர வேதகால சமூக, அரசியல், மத மற்றும் பொருளாதார அமைப்பினை பகுத்தாய்வு செய்க.

## III. செயல்பாடு.

1. சிந்து சரஸ்வதி நாகரீகத்தின் முக்கிய குடியிருப்புகளை கட்டமைப்பு வரைபடத்தில் குறிப்பிடுக.
2. வேதங்களின் காலத்திலிருந்த கலாச்சாரத்தினைப் பற்றிய மேலும் அதிக விவரங்களை சேகரியுங்கள்.

*****

@KTBS
NOT TO BE REPUBLISHED

அத்தியாயம் 4

# உலகில் சில முக்கியமான நாகரீகங்கள்

F5T9R9

**இப்பாடத்தைக் கற்றபின் கீழ்காணும் அலகுகளை பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.**

- உலகின் மிகப்பெரிய நாகரீகங்களான எகிப்து, மெசபடோமியா மற்றும் சீன நாகரிகங்கள்
- அந்த காலகட்டத்தின் நாகரிகங்களான கலை, கட்டடக்கலை வாழ்க்கை முறை
- கிரேக்க நாகரீகத்தின் வளர்ச்சி மற்றும் பங்களிப்புகள்
- ரோமானிய நாகரீகத்தின் வளர்ச்சி மற்றும் பங்களிப்பு
- அமெரிக்காவின் பண்டைய கொலம்பியா நாகரீகங்களான ஆன மாயா, ஆஸ்பெக்கு மற்றும் இன்கா நாகரீகங்கள்

© KTBS NOT TO BE REPUBLISHED

சிந்து சமவெளி நாகரீகத்தை போன்று உலகின் வெவ்வேறு நாடுகளின் புராண நாகரீகங்கள் செழித்து வளர்ந்தன. நாம் எகிப்திய நாகரீகம்,மெசபடோமியாநாகரீகம், சீன நாகரீகங்களை ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களில் நாம் பார்க்கிறோம்.

### எகிப்திய நாகரீகம்:-

பொதுவாக எல்லா நாகரீகங்களும் ஆற்றின் சம வெளிகளில் உருவாகின்றன. எகிப்து நாகரீகம் செழித்ததற்கு அங்கு பாயும் நைல் நதி காரணமாகும். அங்கு கிடைத்துள்ள நினைவுச் சின்னங்கள் எகிப்தின் மகத்துவத்தை வெளிப்படுத்துகின்றன பெரிய பிரமீடுகள், சிற்பங்கள், கோவில்கள் மற்றும் அந்த கோவில்களில் உள்ள கல்வெட்டுகள் எகிப்திய கலாச்சாரம் மற்றும் வரலாறு பற்றி நமக்கு நிறைய விவரங்களை கூறுகின்றன.

### எகிப்தியர்களின் பங்களிப்புகள்:-

எகிப்தியர்கள் கைத்தேர்ந்த விவசாயிகள் ஆவர். அவர்கள் நீர்ப்பாசனத்தை நன்றாக அறிந்திருந்தனர். அவர்கள்

கோயில்களை கட்டியுள்ளனர். காலத்தை பகுத்துணர நாட்காட்டியை கண்டுபிடித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் எழுதும் கலையில் வல்லுனர்களாக இருந்தனர். ஹெய்ரோகிளிஃபிக்ஸ்(hieroglyphics) அதாவது புனித எழுத்துக்கள் எனப்பட்ட எழுத்துக்கள் சிறிய ஓவியங்களைக் கொண்டிருந்தது. இது ஒரு அடையாள மொழியாகும்.

**நைல்பள்ளத்தாக்கு:-**

ஒவ்வொரு மழைக்காலத்திலும் நைல் நதி பள்ளத்தாக்கு ஒரு பெரிய ஏரியாக உருமாறும். கோடையில் அப்பள்ளத்தாக்கு வற்றியவுடன் வளமான வண்டல் மண் படிந்த அடுக்கு பசும் புல்வெளியாகவும் விவசாய நிலமாகவும் மாறும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் செய்யும் வேலையை அந்நதியே முடிவு செய்கிறது. இந்த வளமான நிலம் முதலாக தோன்றிய நகர மக்களுக்கு உணவை வழங்கியது. ஆற்றுப் பள்ளத்தாக்கு அருகில் இல்லாத வளமான நிலங்களுக்கு சிறு கால்வாய்கள் மற்றும் கிணறுகள் மூலம் அந்நிலங்கள் முழுமைக்கும் நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டது.

வளமையான செல்வ செழிப்பில் உள்ள எகிப்திய விவசாயிகளும் குடிமக்களும் அவர்களுடைய ஓய்வு நேரங்களில் கலை படைப்புகளை படைப்பதில் ஈடுபட்டனர். இயற்கையை பற்றி விளக்குவதும், விவரிப்பதும் குருமார்களின் பணியாக இருந்தது, குருமார்கள் கற்றறிவாளர்களாக இருந்து எழுதப்பட்ட ஆவணங்களை பாதுகாக்கும் கடமையையும் மேற்கொண்டனர். இறந்த பின்பு உள்ள வாழ்வை அவர்கள் நம்பினர். வாழ்வு மற்றும் இறப்பின் கடவுளான ஆசிரிஸ்(Osiris) என்ற ஆற்றல்மிகு கடவுளிடம் மனிதன் இவ்வுலகில் புரிந்த ஒவ்வொரு செயலுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும் என்று நம்பினர். இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது என்றும் மறுவாழ்வுக்கு தற்போது ஆயத்தப்படுத்த வேண்டும் என்றும் குருமார்கள் கருதினர். இவ்விதமாக நைல் நதி பள்ளத்தாக்கு முழுவதும் இறந்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டது. இறந்த உடல் பலவிதமான வேதிப்பொருட்களால் பூசப்பட்டு லேசான துணியால் சுற்றப்பட்டது. பூசப்பட்ட வேதிப்பொருட்கள் உடலின் முழு பாகமும் உட்செல்ல வகைச் செய்யப்பட்டது. இவ்விதமாக பாதுகாக்கப்பட்ட உடல் 'மம்மி' என்றழைக்கப்பட்டது. அது

@KTBS NOT TO BE REPUBLISHED

சிறப்பாக செய்யப்பட்ட பிணப் பெட்டியில் வைக்கப்பட்டது. கல்லறைதான் உண்மையான இடம் என்று எகிப்தியர் எண்ணினர். இவ்விதமாக இறந்த உடலைச் சுற்றி அன்றாட தேவைகளுக்காக பொருட்களும் சமையல்காரர் மற்றும் முடி திருத்துவோர்களின் பொம்மைகளும் அவர்கள் தேவையை நிறைவேற்ற வைக்கப்பட்டன.


பிரமீடு

தொடக்கத்தில் குன்றுகளில் உள்ள பெரிய கற்பாறைகளை குடைந்து கல்லறைகள். உருவாக்கப்பட்டன. எகிப்தியர்கள் வடக்கு நோக்கி நகர்ந்ததால் பாலைவனத்தில் கல்லறைகளை கட்ட வேண்டியதாயிற்று. இறந்தவர்களின் நிரந்தர தூக்கத்தை பாதுகாக்க கற்களால் ஆன உயர்ந்த கோபுரங்களை கல்லறையின் மேல் கட்டினர். அரசர்களும் செல்வந்தர்களும் போட்டியின் காரணமாக உயர உயர கோபுரங்களை கட்டி எழுப்பினர்.இவைகளை கிரேக்கர்கள்'பிரமிடுகள்'என்றழைத்தனர். எகிப்தியர்களின் அரசர்கள் 'பாரோஸ்' என்று அழைக்கப்பட்டனர். பாரோஸ் என்றால் 'மாளிகை போன்ற வீட்டில் வாழ்பவர்' எனப் பொருள். ஆற்றல் மிகக் கடவுளான ஆசிரிசின் ஆட்சியை ஏற்றுக் கொண்ட விவசாயிகள் பிறகு ஃபாரோஸ்களின் ஆட்சியையும் ஏற்றுக்கொண்டனர்.

விடுதலைக்குப் பிறகு 20 நூற்றாண்டுகளாக வளமான வாழ்வை பெற்ற எகிப்தியர் ஹைஸ்கோஸ் என்ற அரேபிய ஆடுகளை மேய்க்கும் இனத்தவரால் ஆளப்பட்டனர். இவர்கள் எகிப்தை தாக்கி 500 ஆண்டுகளாக ஆண்டனர். தாயகத்து செல்வத்தை கொள்ளையடித்ததால் அவர்கள் புகழ் பெறவில்லை.

NOT TO BE REPUBLISHED ©KTBS

பிற நாட்டவரின் வருகையால் எகிப்தியர் அச்சம் கலந்த ஐயம் கொண்டனர். எகிப்தியர்கள் மேனாட்டு ஆட்சியாளருக்கு நிர்வாகத்திலும் வரி வசூலிப்பதிலும் உதவி புரிந்தனர்.

கி.மு.1700-ல் தேபேஸ் மக்கள் வெளிநாட்டவர்களுக்கு எதிராக வெகுண்டெழுந்தனர். நீண்ட காலமாக தொடர்ந்து மோதலில் அவர்கள் ஹைக்சோஸ் இனத்தை நாட்டை விட்டு விரட்டி அடித்தனர். மீண்டும் எகிப்து விடுதலையாயிற்று. ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு ஆசிரியாவின் சர்தானா பாலஸ் ஆட்சியினர் கீழ் எகிப்து வந்தது.

பாரசீக பேரரசர் பொ.ச.மு. 6ம் நூற்றாண்டில் எகிப்து ஆக்கிரமித்தார்.பொ.ச.மு.4ம் நூற்றாண்டில் அலெக்சாண்டர் பெர்சியாவை ஆக்கிரமித்தார். எகிப்து மாசிடோனியா மாகாணமாக மாறியது.அலெக்சாண்டரின் ராணுவ தளபதிகளில் ஒருவர் தன்னை அரசராக அறிவித்து டாலமியா வம்சத்தை நிறுவினார். அவர் அலெக்சாண்டரியா என்ற நகரத்தை உருவாக்கினார். இறுதியில் பொ.ச.மு. 39-ல் ரோமானியர்கள் எகிப்திற்கு வருகை புரிந்தனர். எகிப்தியரின் இறுதி அரசியான கிளியோபாட்ரா தன் நாட்டைக் காப்பாற்ற தன்னால் ஆன பெரும் முயற்சியும் மேற்கொண்டார். ரோமானியர்கள் அவளுடைய படையை விட அவளின் அழகுக்கே பயந்தனர் என்று கூறப்படுகிறது. இருப்பினும் பொ.ச.மு. 30ல் சீசரின் வழித்தோன்றல் (அவருடைய மருமகன்) அகஸ்டஸ் அவரது மாமனாரை போல் அழகுக்கு அடிபணியாமல் அவளது உயிரைக் காப்பாற்றிய போதிலும் அவளது ராணுவத்தை தோற்கடித்தார். அகஸ்டஸ் தான் போரில் வென்ற செல்வங்களுடன் அவளையும் தன் நாட்டிற்கு கொண்டு செல்லத் திட்டமிட்டபோது கிளியோபாட்ரா நஞ்சுண்டு மாய்ந்தாள். அப்போதிலிருந்து எகிப்து ரோமின் ஒரு பகுதியாக மாறியது.

NOT TO BE REPUBLISHED @KTBS

**மெசபடோமியா நாகரீகம்:-**

இரு ஆறுகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது மெசபடோமியா ஆகும். பைபிளின் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்ட பல இடங்களை நாம் இங்கு காண முடிகிறது. இரு நதிகளுக்கு இடையேயுள்ள இந்நிலப் பகுதி மெசபடோமியா என்று கிரேக்கர்களால் அழைக்கப்பட்டது. மெசபொட்டோமியா என்றால் இரு நதிகளுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி எனப் பொருளாகும். இந்த இரு நதிகள் யூ ப்ரிடீஸ் மற்றும் டைகிரீஸ் ஆகும் இவ்விரு நதிகள் மேற்கு ஆசிய தரிசு நிலத்தை வளமான நிலப்பகுதியாக மாற்றியது. இப்பகுதியில் வளமையினால் தான் மக்கள் குடியேற வழிவகுத்தது. சிறு முயற்சியினால் உணவுப் பயிர்கள் வளர்க்கப்படுவதால் பாலைவனத்தின் வடக்கு குன்று இனத்தவரும் தெற்கத்திய நாடோடி இனத்தவரும் இப்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் நிலைநிறுத்த முயன்றனர். இந்த இனங்களுக்குள்ளே ஏற்பட்ட போட்டியினால் எண்ணற்ற போர்கள் நிகழ்ந்தன. எப்படி இருப்பினும் இந்த மோதல்களுக்கிடையே வலுவான மக்களின் நாகரீகம் தோன்றியது. மெசபடோமியாவில் படிப்படியாக எழுத்து வடிவம் தோன்ற சுமேரியர்களே முதன்மையானவர்கள் 30 நூற்றாண்டுகளுக்குப் பிறகு வளமான பள்ளத்தாக்கில் குடியமர்ந்த சுமேரியர், பாபிலோனியர், ஆசிரியர் மற்றும் பாரசீகர் போன்றோர் இந்த எழுத்து வடிவத்தை பயன்படுத்தினர். அவ்வெழுத்து முறை கியூனிஃபார்ம் என்றழைக்கப்பட்டது.

NOT TO BE REPUBLISHED @TBS

இந்த நாகரீகத்தின் மையம் யூப்ரடீஸ் மற்றும் டைக்ரீஸ் இடையே உள்ள பள்ளத்தாக்கின் தெற்கு பகுதியாகும். இது பழங்காலத்திலிருந்தே பாபிலோனியா என்று அழைக்கப்படுகிறது. பாபிலோனியாவின் வடபகுதி அக்கத் என்றும் பின்பகுதி சுமேர் என்றும் கருதப்படுகிறது.மெசபடோமியாவின் வட பகுதி ஆசீரியா எனப்படுகிறது.

## பாபிலோனியாவின் தொங்கும் தோட்டம்

பழமையான தொங்கும் தோட்டம் யூப்ரடீஸ் நதிக் கரையில் ஏறத்தாழ கி.மு.7ம்நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. இது பழங்கால உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும் ஆனால் நகரத்தின் அரண்மனை மற்றும் அதன் சுவற்றையெல்லாம் குறிப்பிட்ட பாபிலோனியா ஆவணங்கள் தொங்கும் தோட்டம் பற்றிக் குறிப்பிடாமலிருப்பது மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. பெரும்பாலான அறிஞர்கள் அரசரான இரண்டாம் நேபுகேத்னேசர் இத்தோட்டத்தை உருவாக்கியிருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். நேபுகேத்னேசரின் மனைவி அமிடிஸ், மீட் என்ற இடத்தை சார்ந்தவராவர். நேபுகேத்னேசரின் மனைவி தன் தாய் நாட்டில் இழந்த குன்றுகள், மரங்கள் மற்றும் மலர்கள் மேல் கொண்ட ஏக்கத்தை தேற்றுவதற்காக இத்தோட்டம் அமைக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. சில அறிஞர்கள் ஆசீரியா ராணி சம்மு-ராமாட்டால் உருவாக்கப்பட்டது என்றும் எண்ணுகிறார்கள். உண்மையில் இத்தோட்டம் ஆகாயத்தில் தொங்குவதல்ல. சிகுராட் எனப்படும் உயர் மாளிகை மொட்டை மாடியில் மரங்கள் மற்றும் செடிகள் வளர்க்கப்பட்டன. தொங்கும் கிளைகள் பற்பல கோணத்தில் அசைந்தாடும் போது பார்ப்போருக்கு அது தொங்கு தோட்டத்தின் உணர்வை ஏற்படுத்துகிறது. யூப்ரடீஸ் நதியிலிருந்து இத்தோட்டத்திற்கு நீரை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED



ஜிக்குராட்

மெசபடோமியாவின் வரலாறு முடிவற்ற வெறுப்பையும் சச்சரவுகளையும் கொண்டதாகும். வடப்பகுதியிலிருந்து வந்த குன்று இன பழங்குடியினரான சுமேரியர் தான் முதலில் இங்கு வந்து சேர்த்தனர்.மலையடிவாரத்தில் தங்கள் கடவுள்களை வணங்கும் அவர்கள் இந்த சமவெளிக்கு வந்தவுடன் செயற்கையான குன்றுகளை அமைத்து அவர்களுடைய வழிபாட்டுத்தளத்தை அமைத்தனர். அவைகள் ஜிகுராட் எனப்பட்டது. யூதர்கள் அவைகளை பாபிலோன் கோபுரம் என்றழைத்தனர்.

**ஹமுராபி இயற்றிய சட்ட தொகுப்பு:-**

கி.பி.1901-ல்கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் பொறிக்கப்பட்ட அரசாணைகள் தான் ஹம்முராபியின் சட்டத்தொகுப்பு ஆதாரமாகும். இன்று பாரிஸிலுள்ள லோர்வ்ரே(Lourure)அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஹமுராபியின் சட்டங்கள் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்ற கொள்கையுடையதாகும். ஹமுராபியின் சட்டத் தொகுப்பு தான் நமக்கு கிடைத்த மிகப் பழமையான சட்டமாகும். அவைகள் குறிப்பாக பாபிலோனிய சமூகப் பெண்கள், அடிமைகள் மற்றும் அனைத்து தரப்பட்டவர்களின் உரிமைகளை பாதுகாக்க பெரும்பாலும் எழுதப்பட்டிருக்கலாம்.

@TNSCERT NOT TO BE REPUBLISHED

சுமேரியர்கள் மெசபடோமியாவிற்கு பொ.ச.மு. 4000-ல் வருகை தந்தனர். பிறர் அரேபிய பாலைவனப் பழங்குடிகளாகிய அக்காடியன்களால் தோற்கடிக்கப்பட்டார்கள். அவர்கள் செமைட்கள் என அழைக்கப்பட்டனர். ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு இந்த அக்காடியன்கள் மற்றொரு செமைட் பழங்குடியினராகிய அமோரைட்களால் தோற்கடிக்கப்பட்டனர். அமோரைட்களில் மிகச்சிறந்த அரசர் ஹம்முராபி ஆவார். அவர் பழம் புகழ் உடைய அரண்மனையை பாபிலோனில் கட்டினார்.அவர் நீதியின் சட்டத்தைத் தொகுத்து பழங்கால உலகத்தில் சிறந்த நிர்வாகத்தை உடைய அரசு பாபிலோனியா என்று எண்ணுமளவிற்கு உயர்த்தினார். பிறகு வந்த ஹிட்டிடெஸ்(hittites) பள்ளத்தாக்கை ஆக்கிரமித்தனர். அவர்கள் எடுத்துச் செல்ல முடியாதவற்றை அழித்தனர். பாலைவன கடவுளாகிய அசுராவை பின்பற்றும்

ஆசீரியர்கள் ஹிட்டிடெஸ்களைத்(hittites) தோற்கடித்தனர். ஆசீரியர்கள் முழு மேற்கு ஆசியா மற்றும் எகிப்தையும் பொ.ச.மு.7ம் நூற்றாண்டு வரை கைப்பற்றி அங்குள்ள மக்கள் அனைவரிடமும் வரி வசூலித்தனர். மற்றொரு செமைட் இனத்தவராகிய சல்டியர்கள் பொ.ச.மு. 7ம் நூற்றாண்டில் மீண்டும் பாபிலோனியாவை எழுப்பி ஒரு புகழ்மிக்க தலைநகராக அவர்கள் காலத்தில் ஏற்படுத்தினர். அவர்களுள் மிகவும் புகழ்வாய்ந்த அரசர் நேபுகேத்னேசர் ஆவார். அவர் அறிவியல் கல்வியை ஊக்குவித்தார். ஆனால் சல்டியர்கள் பொ.ச.மு. 6ம் நூற்றாண்டில் பாரசீகர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகினர். இரு நூறு ஆண்டுகளுக்கு பிறகு அலெக்சாண்டர் செமைட்டுகள் வாழ்ந்த பகுதியை கிரேக்கர்களின் மாகாணமாக மாற்றினர். அலெக்சாண்டருக்குப் பின் வந்த ரோமானியர் மற்றும் துருக்கியர்களின் ஆட்சிக்குப் பிறகு இந்த நாகரிகம் அழிந்து பாலைவனமாயிற்று.

**சீனாவின் நாகரீகம்:-**

பழங்கால நாகரீகங்கள் அனைத்துமே ஆற்றங்கரைகளில் தான் தோன்றியது. சீன நாகரிகமும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் சீன நாகரீகத்தை தோற்றுவித்த ஹவாங்கோ ஆறு சீனாவின் துயரம் எனப்படுகிறது. வெள்ளப் பெருக்கின் போது முன்குறிப்பிட்டு கூறமுடியாத அளவிற்கு தன் போக்கை அடிக்கடி மாற்றி வீடுகளையும் வயல் வழிகளையும் அழித்தது ஹவாங் கோ நதி. அது எல்லா கால்வாய்களையும் பாழ்படுத்தி பயனற்றதாக்கியது. இதனால் அப்பகுதி மக்கள் அதனை துயரத்தின் அடையாளமாக குறிப்பிடுகின்றனர்.

அகழ்வாராய்ச்சியின் படி சீன நாகரீகத்தின் போது ஆட்சி புரிந்த முதல் குடும்பம் ஷாங் (Shang) ஆகும். அது பொ.ச.மு.18 மற்றும் பொ.ச.மு. 12ம் நூற்றாண்டுகளுக்கிடையில் ஆட்சி புரிந்தது. இவ்வம்ச ஆட்சியின்கீழ் சீனர்கள் அருமையான பண்பாட்டை பொ.ச.மு. 14ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தினர். ஷாங் வம்சம் எப்போதும் சௌ(Chau)வம்சத்தால் தாக்கப்பட்டது. சௌ வம்சமானது ஷாங் வம்சம் ஏற்படுத்திய நல்ல மரபு பண்பாட்டைப் போற்றி பாதுகாத்து பொ.ச.மு. 250 வரை ஆட்சி செய்தது.

© KTBS NOT TO BE REPUBLISHED

சௌ வம்சத்தில் அரசரின் அதிகாரிகள் பிரிவு ஒன்று இருந்தது. இந்த அதிகாரிகளுக்கு அரசர் நிலங்களை ஒதுக்கினார். அதற்கு கை மாறாக அதிகாரிகள் போர்க் காலங்களில் அரசருக்கு உதவினர். சமயத்தில் உயர்ந்த பிரிவினராக வணிகர்களும் கைவேலை கலைஞர்களும் இருந்தனர். இதில் உழவர்களும் அடங்குவர். சமுதாய அடித்தட்டு கீழ் மக்களாக அடிமைகள் ஆவர்.இவ்வடிமைகள் போர்க்காலங்களில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட வீரர்கள் ஆவர்.



சீனப் பெருஞ்சுவர்

### சீனப் பெருஞ்சுவர்

சீனப் பேரரசு பல சிறு மாகாணங்களை கொண்டிருந்தது. சிறு மாகணங்களை ஒன்றிணைத்து ஏழு பெரிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டது. இவ்வாறு உருவாக்கப் பட்ட ஒவ்வொரு மாநிலமும் அதனுடைய எல்லையில் பாதுகாப்பு சுவரை எழுப்பியது. பேரரசர் கிவின் சிகுஸ்டீ வடசீன மாநிலங்களின் சுவர்கள் இணைக்கப்பட வேண்டும் என்று ஆணையிட்டார். இதனால் வடபகுதியில் படையெடுத்து வருவோரை தடுப்பதற்கு இச்சுவர்கள் பேருதவியாய் அமைந்தது. சுவரை கட்டும் பணிக்கு பொ.ச.மு. 7 நூற்றாண்டில் தொடங்கி பொ.ச.மு. 16 ஆம் நூற்றாண்டில் முடிவுற்றது. பாழடைந்த சுவர்கள் மீண்டும் மறு சீரமைக்கப்பட்டது. சுவர் பணிகள் முடிவுற்றபோது 5000கி.மீ.கள் நீண்டிருந்தது. உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

ஷாங் மன்னர்கள் போர்களில் நீண்ட காலங்கள் ஈடுபட்டனர். இவ்வாறு ராணுவம் நன்றாக பராமரிக்கப்பட்டது. போர்வீரர்கள் சமூகத்தில் மேன்மையான இடத்தை வகித்தனர். வீரர்கள்

வெண்கல தலைக் கவசங்களையும் இரும்பு போர்க்கவசங்களையும் அணிந்தனர்.வெண்கலவாள், கோடாரிகள் மற்றும் இரும்பாலான கூர் தீட்டப்பட்ட அம்புகளையும் பயன்படுத்தினர். ஷாங் வம்ச ஆட்சி காலத்தில் விவசாயத்தையே நம்பி இருந்தனர். அவர்கள் நன்கு முறைப்படுத்தப்பட்ட நீர்ப்பாசன முறைகளைப் பெற்றிருந்தனர். அவர்கள் அரிசி அதிகம் பயிரிட்டனர்.

**பீங்கான் (procelin) சீனக்களிமண்:-**

பீங்கான் சீனாவிலிருந்து தான் முதன் முதலில் தோன்றியது என்று நம்பப்படுகிறது. பொ.ச.மு.1600 வருடத்தில் இருந்து ஒழுங்குபடுத்த படாத பீங்கான் பாத்திரங்கள் புழக்கத்திலிருந்து ஷான் வம்ச காலத்தில் மெருகேற்றப்பட்ட பீங்கான் பாத்திரங்களாக முன்னேற்றமடைந்தது. அதுவேற்று நாட்டுப் பொருளின் கலைத்தன்மைக்கு ஏற்ப முன்னேறியது. பழங்கால சீனர்கள் இறந்தவர்களுடன் பீங்கான் பாத்திரங்கள் விலங்குகள் மற்றும் அவர்கள் விரும்பிய பொருட்களையும் சேர்த்து புதைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

@KTBS NOT TO BE REPUBLISHED

சீனர்கள் மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவதை வழக்கமாக கொண்டிருந்தனர். அவர்கள் பட்டையும் உடுத்தினர். அவர்கள் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். பட்டு தயாரிப்பு முக்கிய தொழிலாக விளங்கியது. பல்வகைப் பானைகளை உருவாக்குவதில் சீனர்கள் கைத்தேர்ந்தவராவர்.பீங்கானில் பல்வேறு பொருட்கள் செய்வதை அறிந்திருந்தனர். இறந்தவர்களை வணங்குவது சீனர்களின் வழக்கமாகும். இறந்தவர்களின் ஆத்மா ஒரு தனிப்பட்ட ஆற்றலைக் கொண்டிருப்பதாக நம்பினர். இறந்த உடலின் மேல் பல சடங்குகளை செய்தும். பலவிதமான மர பொருட்கள், பானை வகைகள் மற்றும் வெண்கல பாத்திரங்கள் போன்றவற்றை கல்லறையில் வைத்தனர் அரசர்களின் பிண மனை மிக பெரியதாக இருந்தது. சீனர்களின் பாரம்பரியமான எழுத்துக்கள் படங்களுடன் தொடங்கியது. பிறகு அவைகள் செய்திகளை பரிமாறும் எழுத்துகளாக மாறின. எழுத்தாளர்கள் பட்டு மூங்கில் பலகை முதலானவற்றை பயன்படுத்தினர். பீங்கான்

மற்றும் சீனப் பெருஞ்சுவர் இந்த நாகரீகத்தின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும்.

**கிரேக்க நாகரீகம்:-**

கிரேக்கர் வடக்கிலிருந்து ஏஜியன் கடற்கரை பகுதிக்கு வந்தனர். ஆடு மேய்க்கும் பழங்குடியின மக்கள் அவர்கள் வாழ்ந்த பகுதிகளை விட்டு புல் வெளிப் பகுதிகளைத் தேடி வந்தனர். இவ்வாறு வந்த ஒவ்வொரு சமுதாயத்திற்கும் சொந்தமான பெயர் உண்டு. அவர்கள் அக்கியர்கள், ஐயோனியர்கள் மற்றும் டொனியர்கள் ஆவர். அவர்கள் தங்களை ஹெலனிஸ்கள் அல்லது கிரேக்கர்கள் என்று அழைத்துக் கொண்டனர். கிரேக்கர்கள் தொடக்கத்தில் பழங்குடி சமூகத்தை சேர்ந்தவர்கள், அவர்களின் அரசன் பல பழங்குடியினருக்கு அதிபதியாக இருந்தான். மக்கள் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இவர்கள் பானை,வாள் மற்றும் ஆபரணங்கள் செய்து வந்தனர். பண்டமாற்றும் முறையில் வர்த்தகம் நடைபெற்றது போர்கள் மற்றும் வெற்றிகள் அவர்களின் சாகச வாழ்க்கை முறையாக இருந்தது. கிரேக்கர்கள் அவர்களுடைய கடவுள்கள் ஒலிம்பஸ் மலையில் வாழ்ந்ததாக நம்பினர். அவர்கள் விளைச்சலுக்காகவும் பல்வேறு வேலைகளில் வெற்றி பெறவும் பிரார்த்தனை செய்தனர். கிரேக்கர்களில் மதகுருக்கள் இல்லை. அரசர் மக்கள் அனைவரின் சார்பாக பிரார்த்தனை செய்தார்.

**அலெக்சாண்டர்**

இவர் கிரீஸ் நாட்டின் மாசிடோனியாவின் அரசன். அவர் தனது குறுகிய கால வாழ்க்கையில் உலகம் முழுவதையும் கைப்பற்ற தொடங்கினார். இவர் ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்குவதில் வெற்றி கொண்டார். இவர் பாரசீக சாம்ராஜ்யத்தை தோற்கடித்து இந்தியாவை நோக்கி முன்னேறினார். கிரேக்கர்களின் சிறந்த அறிஞர்களில் ஒருவரான அரிஸ்டாட்டில் இவருடைய ஆசிரியர் ஆவர். அலெக்சாண்டர் இந்தியாவின் எல்லையில் போரிட்டு திரும்பி செல்லும் போது பாபிலோனியாவில் பொ.ச.323-ல் மரணம் அடைந்தார்.

© KTBS NOT TO BE REPUBLISHED

கிரேக்கத்தில் அடிமை முறை நடைமுறையில் இருந்து வந்தது. இது கிரேக்கர்கள் ஓய்வு நேரத்தை அனுபவிக்கவும், பல்வேறு கலைகள் மற்றும் ஆடம்பரங்களில் ஈடுபடவும் உதவியது. இவர்களின் ஒலிம்பிக் போட்டிகள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை விளையாடும் பிரபலமான விளையாட்டுகள் ஆகும். கிரேக்கர்கள் பல்வேறு கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

**ரோமானிய நாகரிகம்:-**

இன்றைய இத்தாலியின் பண்டைய ரோமானிய நாகரிகத்தின் நினைவுச் சின்னங்களை நாம் காணலாம். இத்தாலியின் அசல் குடிமக்கள் வட ஆப்பிரிக்கா, ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் மக்கள் ஆவர். அவர்கள் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலிக்கு குடி பெயர்ந்தவர்கள். சிறிது காலத்திற்குப் பிறகு கிரேக்கர்களும் எட்ரூஸ்கன்களும் இங்கு வந்து குடியேறினர். இத்தாலியர்கள் இவர்களின் வழித்தோன்றல்கள் இத்தாலியர்கள் கிரேக்கர்களிடமிருந்து மொழி, மத நம்பிக்கைகள் மற்றும் கலைகளை கற்றுக் கொண்டனர்.

ரோம் ஒரு முடியாட்சியின் கீழ் இருந்தது. ரோமானியர்கள் இரண்டு அரசியல ஆலோசனை நிறுவனங்களாக சட்டமன்றம் மற்றும் சென்ட் ஆகியவற்றை கொண்டிருந்தனர். சட்டமன்றம் அனைத்து நடுத்தர வயதுடைய ஆண்களால் ஆனது. அதேசமயம் செனட் ஒரு உயர் அதிகாரிகளின் நிறுவனம் ஆகும். இது மிகவும் செல்வாக்கு மிக்கது. சட்டமன்றம் மற்றும் அரசர்களின் முன்மொழிவுகளை நிராகரிக்கும் அதிகாரம் செனட்டிற்கு இருந்தது.பொ.சா 6ம் நூற்றாண்டில் முடியாட்சி ஒழிக்கப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது. சுமார் பொ.சா 3ம் நூற்றாண்டு முழு இத்தாலியின் நிர்வாகம் குடியரசு கட்சிகளின் கீழ் வந்தது. ரோமன் குடியரசின் செனட் மற்றும் சட்டமன்றம் ஆலோசனை நிறுவனங்களாக தொடர்ந்து இருந்தது. இந்த நிறுவனங்களின் உறுப்பினர்கள் போரின் போது படைகளுக்கு தலைமை தாங்கினார். சட்டத்தை அமல்படுத்தி நீதி வழங்கினார்.

ரோமானிய சமுதாயத்தில் பேட்ரீஷியன்கள் மற்றும் பிளேபியன்ஸ் என இரண்டு வகுப்புகள் இருந்தன. பேட்ரீஷியன் சமூகத்தில் கௌரவமானவர்கள். அவர்கள்

NOT TO BE REPUBLISHED @KTBS

மேல்தட்டு நில உரிமையாளர்கள். இவர்கள் செனட்டு முழுவதையும் கட்டுப்படுத்தினார்கள். பிளேபியன்கள் சாதாரண மக்கள் அவர்கள் சாதாரண தொழிலாளர்கள், சிறு நில உரிமையாளர்கள், கைவினைஞர்கள், சிறு வணிகர்கள் மற்றும் வீரர்கள் அவர்களின் உரிமைகள் வரையறுக்கப்பட்டன. அவர்கள் வரி செலுத்துவதற்கும் தண்டனைக்கு உட்படுத்துவதற்கும் இருந்தனர். பிளேபியன்கள் தொடர்பாக கவுன்சில் மற்றும் செனட் எடுத்த முடிவுகள் டிரிப்யூன்களால் நிராகரிக்கப்படலாம். 5-ம் நூற்றாண்டில் இந்த முறைக்கு எதிராக பிளேபியன்கள் கிளர்ச்சி செய்தனர். இதன் விளைவாக பேட்ரீஷியர்களுக்கு சில சலுகைகளை வழங்கினர். இதனால் ட்ரிப்யுன்ஸ் உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் உரிமை பிளேபியண்களுக்கு கிடைத்தது. இந்த நேரத்தில் தான்'ரோமன் சட்டத்தின்' அடிப்படையிலான ஒரு விதி நிறுவப்பட்டது. இது அவர்களின் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அளித்தது. மற்றும் அவர்களின் உரிமைகள் மீறுவதை எதிர்க்க கற்றுக் கொடுத்தது.


ஏம்பி திரையரங்கு (தியேட்டர்கள்)

புதிய பிரதேசங்களை விரிவாக்குவதற்கான விருப்பம் ரோமானியர்களை ஒரு புதிய மோதலுக்கு அழைத்துச் சென்றது. எனவே அவர்கள் வட ஆப்பிரிக்காவின் கரையோர நகரமான கார்த்தேஜீடன் போரிட்டனர். சிசிலி ஒரு வளமான பகுதியாக இருந்தது. ரோமானியர்கள் 118 ஆண்டுகள் இந்தப் பகுதியைக் கட்டுப்படுத்தப் போராடினர் . இந்த போர்கள் பியூனிக் போர்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. இந்த போரில் கார் தேஜன்கள் தோற்கடிக்கப்பட்டனர். 1ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ரோமானியர்கள் கிரீஸ், ஆசியா மற்றும் எகிப்தின் சில பகுதிகளை கைப்பற்றினர்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**கிளாடியேட்டர் :-**

பண்டைய ரோமானிய மல்யுத்த வீரர்கள் 'கிளாடியேட்டர்' என்று அழைக்கப்பட்டனர் இவர்களில் திறமையான மற்றும் ஆயத்தம் இல்லாதவர்களும் இருந்தனர். கூட்டத்தினரை மகிழ்ச்சியுட்டுவதற்காக மல்யுத்தம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மனிதனுக்கும்- மனிதனுக்கும் இடையிலும்,மனிதனுக்கும்- விலங்குக்கும் இடையிலான இந்த போட்டியில் சில நேரங்களில் வீரர்களின் மரணத்தில் முடிந்துள்ளது. கிளாடியேட்டர் போட்டிகள் நடந்த இடங்கள் 'ஏம்பி தியேட்டர்' மற்றும் 'கலோசியம்' என்று அழைக்கப்பட்டன.குற்றவாளிகள், அடிமைகள் மற்றும் குடியுரிமையை இழந்த போர் கைதிகள் கிளாடியேட்டர்களாக எடுத்துகொள்ளப்பட்டனர். புகழ் மற்றும் செல்வத்தை பெறுவதில் கிளாடியேட்டர்களுக்கு சில நேரங்களில் சுதந்திரம் வழங்கப்பட்டது. சமீபத்தில் 'கிளாடியேட்டர் என்ற தலைப்பில் ஒரு ஆங்கில மொழி படம் உலகம் முழுவதும் பிரபலமானது.

காலப்போக்கில் ரோமானிய அரசு ஒரு குழப்பமாக மாறியது. கிளர்ச்சிகள் மற்றும் படுகொலைகள் நடைபெற்றன. தேர்தல்களில் லஞ்சம் மற்றும் ஊழல் என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. சுமார் 60,000 ஏழை மற்றும் சுரண்டப்பட்ட அடிமைகள் ஸ்பார்ட்டுகளின் கீழ் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் ஒரு வருடத்தில் கொடூரமாக நசுக்கப்பட்டனர். இந்த சந்தர்ப்பத்தில் சுமார் 60,000 பேர் சிலுவையில் அறையப்பட்டனர்.

தொடர்ச்சியான போர்கள் காரணமாக போர் வீரர்கள் செனட்டில் ஆதிக்கம் செலுத்தினர். ஆயிரக்கணக்கான வீரர்களில் பாம்பே மற்றும் ஜூலியஸ் சீசர் முக்கியமானவர் ஆவார். பாம்பேக்கு எதிராக சீசர் சர்வாதிகாரியாக மாறமுயன்றார். இதன் விளைவாக, சீசரின் நண்பரும் சர்வாதிகார எதிர்ப்பாளருமான ப்ரூட்டஸ் செனட் வளாகத்தில் சீசரை கொன்றார். அரசின் அதிகாரம் சீசரின் மருமகன் ஆக்டேவிஸிடம் ஒப்படைக்கப்பட்டது. சீசரின் மரணத்திற்குப் பிறகு ஆக்டேவிஸ் கொலைக்கு சதி செய்தவர்களை கொன்று பழி வாங்கினார். ஆக்டோவியஸால் குடியரசு முடிவுக்கு வந்தது. 'அகஸ்டஸ்' என்ற துணை பெயருடன் ஆட்சி புரிந்தார். அவர் தன்னை 'பிரின்செப்' என்றும் அழைத்தார். பிரின்செப் என்றால் 'இராஜ்யத்தின் முதல்



NOT TO BE REPUBLISHED @KTBS

குடிமகன்’என்று பொருள். பல சீர்திருத்தங்களை கொண்டு வந்து 44 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.‘அகஸ்டஸுக்கு’ பிறகு வந்த மன்னர்கள் சர்வாதிகாரிகளாக இருந்தனர். செனட் அதன் அனைத்து அதிகாரத்தையும் இழந்தது. அரசன் உச்ச அதிகாரத்தை ஏற்று கொடுங்கோலனாக ஆனான். இங்கிருந்து தான் ரோமின் சீரழிவை காண்கிறோம்.

ஒவ்வொரு கலாச்சாரமும் அதன் மொழியின் வளர்ச்சிக்கு காரணமாகும். ரோமானியர்களின் ஆட்சி இலத்தீன் மொழி மற்றும் இலக்கியத்தின் வளர்ச்சியை ஊக்குவித்தது. தனித்துவமான கட்டிடக்கலைக்கு வழி வகுத்தது. பாந்தியன் ஒரு கோயில் என்றால் கொலோசியம் ஒரு திரையரங்கம்.ரோமானிய சிற்பம் கிரேக்கர்களால் ஈர்க்கப்பட்டு உயிர் பெற்றதாக உள்ளது. இயேசு கிறிஸ்து பிரசங்கித்த கிறிஸ்தவ மதத்தின் காரணமாக ரோம் புகழ்பெற்றதாக விளங்கியது.

**அமெரிக்க நாகரீகங்கள்:-**

மாயா, ஆஜ்டேக் மற்றும் இன்கா போன்றவை அமெரிக்காவின் பழமையான கொலம்பியா நாகரீகங்களாகும். அவைகள் அமெரிக்காவின் இந்திய பழங்குடியினரின் கலாச்சாரத்தை குறிக்கின்றன. மத்திய ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப் பட்ட பழமையான கொலம்பியா நாகரிகங்கள் எகிப்து, மெசபடோமியா மற்றும் சீன நாகரீகங்கள் போல் சிறப்புக்கு உரியதாகவும் விளங்கியது. புதிய

**நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்**

இந்தியாவிற்கு புதிய கடல் வழி கண்டுபிடிப்புக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது அவர்கள் புதிய கண்டங்களை கண்டறிந்தனர். அவ்வாறு கண்டுபிடிக் கப்பட்ட நிலப்பரப்புகள் அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா கண்டங்களாகும். ஆனால் அப்போதிய நாடுகள் இந்தியா என்றும் அங்கு வாழ்ந்த மக்கள் இந்தியர்கள் என்றும் தவறாக முடிவு எடுத்தனர். இவ்விதமாக அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா தொல் குடியினர் இந்தியர்கள் என அழைக்கப்பட்டனர். நன்கறியப்பட்ட நாடுகள் பழைய உலகம் என்றும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கண்டங்கள் புதிய உலகம் என்றும் அழைக்கப்பட்டது.

© KTBS NOT TO BE REPUBLISHED

உலக நாகரிகத்திலும் மாநிலங்கள் அரசுகள், அற்புதமான நினைவுச் சின்னங்கள்,நகரங்கள்,கலைகள், உலோக தொழில் நுட்பம் மற்றும் எழுதும் பழக்கத்தை காண முடிகிறது.

**மாயா நாகரீகம்:-**

மாயா மெக்ஸிகோவின் யுகுடான் பகுதியை சார்ந்த அமெரிக்கா இந்திய பழங்குடியினர்ஆவர். பொதுவாக அவர்களது மொழி யுகுடாக் என்றழைக்கப்பட்டது. பொதுவாக மாயன்கள் குள்ளமாகவும், மாநிறமாகவும், நீண்ட முடிகளுடன், வட்டவடிவத் தலையையும் கொண்டிருந்தனர். பழங்கால அமெரிக்க இந்தியர்களில் மாயன்கள் மிகவும் முன்னேற்றமடைந்தவர்கள் ஆவர். கற்களால் கட்டப்பட்ட அழிவுற்ற நகரங்களை மெக்சிகோவின் யுகுடான் குவாப் மேலா மற்றும் ஹேண்டுரஸ் போன்ற இடங்களில் காண முடிகிறது. 1700-ம் ஆண்டில் இந்நாகரிகம் தன்னுடைய பண்பாட்டுப் புகழை எய்தியது. அவர்களுடைய முற்கால நகரங்கள் பொ.சா.மு. 320 -ல் கட்டப்பட்டன. பொ.சா.மு. 1527 முதல் 1546 வரையிலான இடைப்பட்ட காலத்தில் கோர்டேஜ் தலைமையில் ஸ்பானியர்கள் மாயன் பண்பாட்டை அழித்து ஒழித்தனர். ஸ்பானியர்களின் தாக்குதல்களின்று மீண்டு இந்திய மாயன் வழித் தோன்றல்களை இன்று கூட நாம் வடயுகுடான் மற்றும் குவாட்டிமேலா பகுதிகளில் காண முடிகிறது.

**ஆஸ்டெக்ஸ் *(The Aztecs)***

டெக்ஸ்கோகோ (Texcoco) என்பது மெக்ஸிகோவிலுள்ள ஓர் ஏரியா ஆகும். இந்த ஏரியில் உள்ள ஒரு தீவில் ஆஸ்டெக்ஸ்கள் தங்கள் நகரத்தை கட்டி எழுப்பினர். அவர்கள் தங்களின் முன்னோர்களான டெனோசின் நினைவாக டெனோ சிக்கள் என்றழைக்கப்படுகின்றனர். அவர்களுடைய நகரம் ''டெனோசிட் லான்'' எனப்படுகிறது. அதன் பொருள் நீரிலிருந்து உயர்ந்த கல் என்பதாகும். இந்நகரம் மெக்ஸிகா (Mexica) என்றும் அதன் குடியிருப்பாளர்கள் அதே பெயராலும்

@KTBS NOT TO BE REPUBLISHED

அழைக்கப்பட்டனர்.அவர்களின் மொழி நெகுவா ஆகும். இன்றுகூட மெக்சிகோவில் நெகுவா மொழி பேசும் மக்கள் உள்ளனர்.

பெருவின் இன்காக்களைத் தவிர புதிய உலகில் ஆஸ்டெக்ஸ்களின் பரந்த பேரரசு இல்லை. ஒரே நூற்றாண்டில் பேரரசு ஒன்றை ஏற்படுத்தி ஆண்ட சிறிய நாடோடி இனத்தின் அற்புதமான வரலாறு இது. அது விரைவில் சரிந்தது. அவர்களின் விரைவான செழிப்பு மற்றும் வீழ்ச்சியின் கதை அவர்களின் வாய்மொழி மரபுகள் மற்றும் தயாரிப்புகளில் வெளிப்படுத்தப்படுகிறது. வாய்மொழி பாரம்பரியம் ஸ்பானிஷ் வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் சமூக விஞ்ஞானிகளால் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இவை இந்தியக் குறியீடுகள் எனப்படும்.

ஸ்பானிஷ் ராணுவம் 1519-ல் மெக்சிகோவின் பள்ளத்தாக்குகளுக்குள் நுழைந்தபோது அவர்கள் ஏரித் தீவில் உள்ள ஓர் அழகான நகரத்தை கண்டுபிடித்தனர். அந்நகரமே ஆஸ்டெக்ஸ்களின் தலைநகரான டெனோசிட்லான் ஆகும். அவர்களின் வளம் மற்றும் செல்வத்தின் அடையாளமாக வளர்ந்திருந்தது. நகரத்தின் உள்ளே புகுந்த ஸ்பானியர்கள் மூன்று அகலமான சாலைகளைக் கண்டனர். அவைகளில் ஒன்று அரண்மனைக்கும் இரண்டாவது அணிமணியுடைய கோவிலுக்கும் மூன்றாவது உயர்ந்த கோபுரங்களையுடைய பிரமீடுகளுக்கும் அழைத்துச் சென்றன. இவைகள் அனைத்தும் ஸ்பானியர்களின் தாக்குதலுக்கு உள்ளானவை ஆகும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**இன்கா (Inca):-**

15 மற்றும் 16 -ம் நூற்றாண்டுகளில் செழித்தோங்கிய இன்கா பேரரசு ஈக்வாடர், சிலி மற்றும் அர்ஜென்டினாவின் சில பகுதிகளை உள்ளடக்கியது.

இன்காக்களின் திறமையை அவர்களின் கைவினைத் திறனைக் காட்டிலும் அவர்களின் நிறுவனத் திறனில் காணலாம்.

டி டி காக்கா ஏரியில் உள்ள ஒரு தீவில் உள்ள அரண்மனை மற்றும் சந்திரன் கோயில் ஆகியன இன்காக்களால் கட்டப்பட்ட இரண்டு பிரபலமான கட்டிடங்கள்.

இன்காக்கள் மட்பாண்டங்கள், துணி மற்றும் உலோக வேலைகளில் புதிய முறைகளைப் பயிற்சி வளர்ச்சியடைந்திருந்தனர். வடக்கு பெருவின் சில பகுதிகளில் தங்க நகைகள் செய்வது மிகவும் வளர்ச்சி அடைந்திருந்தது. மார்பு கவசங்கள், கோவிலில் உள்ள சூரியனின் உருவம் மற்றும் அரண்மனையின் பல்வேறு தங்க வேலைகள் அவர்களது திறமைக்கு சாட்சிகளாகும்.

சூரிய தேவனை இன்காவின் மிக முக்கியமான கடவுள். வீரகோசா என்ற கடவுள் படைப்பிற்கு காரணம் என்று நம்பினர். சூரியதேவன் வீர கோசா மற்றும் மக்களுக்கு இடையே ஒரு இணைப்பு என்று நம்பினர். இக்காரணத்தினால் அனைத்து இன்கா மையங்களிலும் சூரிய கோயில் உள்ளது.சந்திரன்,நட்சத்திரம், மின்னல் போன்ற இயற்கையின் அதிசயங்களை வணங்கினர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**தயவுசெய்து கவனிக்கவும் :**

ச.பொ - பொது சகாப்தம் ச.பொ. இல்லையனில் பொது சகாப்தம் என்று அறிந்துகொள்ளவும்.

## பயிற்சிகள்

**I. கீழே உள்ள கோடிட்ட இடங்களை பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. எகிப்து நாகரீக கால எழுத்துக்களை ________ என்று அழைப்பர்.
2. எகிப்தை ஆண்ட அரசர்களை ________ என்று அழைப்பர்.
3. கிரேக்கர்கள் மெசபடோமியாவை ________ என்று அழைத்தனர்.

4. அமொரைட்டரின் தலைசிறந்த அரசர் ________.
5. 'ப்ரின்ட் செப்'என்றால் ________.
6. ரோமானியர்களின் மொழி ________ .
7. டெக்ஸ்கோகோ என்பது மெக்சிகோவில் உள்ள ஒரு ______ .
8. இன்காக்களின் மிக முக்கியமான கடவுள் ________ .

## II. பொருத்தி எழுதுக.

| ஏ பட்டியல் | | பி பட்டியல் | |
|---|---|---|---|
| i. | ஹா வாங்கோ நதி. | ஏ) | மெசபடோமியா |
| ii. | கியூனி ஃபார்ம் | பி) | சுமேரிய அரசன் |
| iii. | கிளியோபாட்ரா. | சி) | ஷாங்க் |
| iv. | ஹமுராபி | டி) | சீனா |
| v. | சீன வம்சத்தினர். | இ) | எகிப்தின் கடைசி இராணி |

## III. சுருக்கமாக பதில் அளிக்கவும்.

9. பண்டைய கொலம்பியா நாகரீகங்கள் யாவை?
10. மாயா என்பவர் யார்?
11. மம்மிகளை எவ்வாறு பாதுகாத்தனர்?
12. பிரமிடுகளைப் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதுங்கள்.
13. ஹவாங்கோ நதி எப்படி சீனாவின் துயரம் ஆகும்?

## IV. செயல்பாடுகள்.

1. ஆசிரியரின் உதவியுடன் கிரேக்க தத்துவ ஞானிகளின் வரலாற்றை தெரிந்துக் கொள்ளவும்.
2. ஷேக்ஸ்பியர் எழுதிய ஜூலியஸ் சீசரின் நாடகத்தை பார்க்கவும் படிக்கவும்.
3. நைல் நதியை பற்றிய விவரங்களை சேகரிக்கவும்.

* * * * *

@KTBS NOT TO BE REPUBLISHED

அத்தியாயம் 5

# சனாதன தர்மம்

S2F4G5

இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் கீழ்க்காணும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள் :-

- சனாதன தர்மத்தின் பொருள் மற்றும் விரிவாக்கம்
- இந்திய கலாச்சாரத்தின் பெருமை
- வேற்றுமையில் ஒற்றுமையை பயன்படுத்துதல்

சர்வே பவந்து சுகினஹ
சர்வே சந்த்து பத்ராணி பஷ்யந்து
மா-கஷ்சித் துக்கபாக் பவேத்
ஓம் சாந்திஹி சாந்திஹி சாந்திஹி

© KTBS NOT TO BE REPUBLISHED

இந்த சுலோகத்தை கேட்டிருப்பீர்கள். இதன் பொருள் என்ன? 'அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும். அனைவரும் நோயிலிருந்து விடுபட்டவர்களாக இருக்கட்டும். அனைவரும் நன்மையையே காணவேண்டும். அனைவரும் துக்கமில்லாமல் இருக்கட்டும். உலகிலுள்ள அனைத்து உயிரினங்களும் எப்பொழுதும் மகிழ்ச்சி, அமைதி, நிம்மதியுடன் இருக்கட்டும்' என்பதே இச்சுலோகத்தின் பொருளாகும். இத்தகைய உலகளாவிய நல்லெண்ணமே சனாதன தர்மத்திந் உயிர்நாடியாகும். சனாதனம் என்றால் மிகப்புராதன மற்றும் அன்றாட புதிய என்று பொருட்படும். அதாவது நிலையான, நிரந்தரமான என்று பொருளாகும். சனாதன தர்மம் இந்தியாவில் பிறந்து வளர்ந்தது. இன்று அதனை இந்து சமயம் என்று உணரப்படுகிறது.

**சனாதன தர்மத்தின் மூலங்கள் / மேற்கோள்கள் :**

**1. ஸ்ருதிகள்**

சனாதன தர்மத்தின் முதலாம் முக்கிய மேற்கோள் வேத ஒலி அதாவது 'அறிந்து கொள்ளுதல்'. இந்தியாவின் சமய

இலக்கியத்தில் வேதங்கள் தான் மிகப்புராதன மற்றும் மிக முக்கிய ரிஷிகள் கேட்டறிந்த அறிவு என்ற பொருளிலும் எழுத்தின் துணையில்லாமல் குரு-சிஷ்ய (ஆசிரியர் - மாணவர்) பரம்பரையில் நிலைத்து வந்துள்ளது என்ற பொருளிலும் வேதங்களை 'ஸ்ருதிகள்' என்பார்கள்.

புராதன காலத்தில் கிடைத்த ஆகச்சிறந்த வேதத்தொகுப்பை மனிதனின் ஆயுள் உள்ளவரை முழுமையாக ஆய்வு செய்து, மாணவருக்கு கற்றுக் கொடுக்க இயலவில்லை. ஆகையால் கிருஷ்ணத்வைபாயனர் என்ற ரிஷி எண்ணற்ற வேதமந்திர தொகுப்பினை பிரித்து (அதாவது வியாச) வேதவியாசர் எனப்பட்டார்.

ரிக்வேதம், யஜீர்வேதம், சாமவேதம் மற்றும் அதர்வண வேதம் தற்போது கிடைத்துள்ள நான்கு வேதங்களாகும். ஒவ்வொரு வேதத்திற்கு நான்கு பிரிவுகள் உள்ளன. அவை பின்வருமாறு.

***1. சம்ஹிதே :*** இயற்கை ஆற்றல்களுக்கு உருவமளித்து அவற்றை சுற்றியுள்ள வெவ்வேறு யாப்பிலக்கணத்திலிருக்கும் மந்திரங்களாகும். இவை பல்வேறு தேவதைகளின் ஸ்தோத்திரங்களை உட்கொண்டுள்ளன.

***2. பிராமண :*** யாகம் செய்வதற்கான விதிமுறைகளை பற்றிய வேதப்பகுதி. இது பெரும்பாலும் உரைநடையாக உள்ளது.

***3. ஆரண்யகா :*** தோத்திரங்கள் மற்றும் யாகங்களின் உட்பொருட்களைத் தெளிவுபடுத்தும் பகுதி.

***4. உபநிடதம்:*** உலகப்படைப்பு, படைத்தவன் மற்றும் மனிதன் இருப்பதைப் பற்றி தத்துவ விவாதம் - பெரும்பாலும் இது ஆசிரியர் மாணவர் உரையாடல் வடிவிலிருக்கும்.

@KTBS NOT TO BE REPUBLISHED

வேதப்பிரிவுகளில் உபநிடதங்கள் சிறப்பான முக்கியவத்து வத்தைப் பெற்றுள்ளன. சம்ஹிதே, பிராமண, அரண்யகங்கள் முக்கியமாக கர்ம சிந்தனையில் ஈடுபட்டிருக்கும், உபநிடதங்கள் அறிவுச் சிந்தனையில் ஈடுபட்டிருக்கின்றன. மனிதனின் அறியாமயை நீக்குவதற்குத் தகுந்த முறைசாராத உண்மையான அறிவைக் குறிப்பிடுகின்றன. பிரிஹதாரண்யகா உபநிடத்தின் இச்சுலோகத்தை எடுத்துக்காட்டாக கொள்ளலாம்.

ஓம் அஸதோமா சத்கமய
தமஸோ மா ஜோதிர்கமய
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய
ஓம் சாந்திஹி சாந்திஹி சாந்திஹி

@KTBS NOT TO BE REPUBLISHED

மேன்மையான சிந்தனையுள்ள இப்பிரார்த்தனையின் செய்தி என்னவென்றால் 'பொய்யிலிருந்து நிரந்தரமான உண்மையை நோக்கி வழி நடத்து. இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கி வழி நடத்து, இறப்பிலிருந்து நிலைபேற்று நிலையை நோக்கி வழி நடத்து' என்பதாகும் அனைத்து வகையான அழுத்தங்களை மீறிய வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்ள வேண்டுமென்ற உன்னதமான சிந்தனை மற்றும் நோக்கம் இப்பிரார்த்தனையில் உள்ளது.

## 2. ஸ்மிருதிகள்

ஸ்மிருதி என்பது நினைவில் வைத்துக் கொள்ளப்பட்டது என்று பொருள். வேதகாலத்தில் இயற்றப்பட்ட வேத உபநிடதங்களை நினைவூட்டுகிறது என்று அதனை ஸ்மிருதி என்பர். சமூகம், அதிலுள்ள நபர்களின் அன்றாட முறையான வாழ்க்யையின் ரீதி - நீதிகளையும், நடைமுறை- நியமங்களையும் விதிக்கும் இவற்றை தர்மசூத்திரங்கள் என்றும் அழைப்பார்கள். முக்கியமான பதினெட்டு ஸ்மிருதிகள் இருப்பினும் அவற்றில் மிகப்பழமையானதும் வல்லமையுடையதும் மனுஸ்மிருதி ஆகும்.

இது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகால சனாதன தர்மத்தின் ஆட்சி நூலாக முன்னுரிமை பெற்றிருந்தாலும் அது வழங்கிய படிநிலை உலக கண்ணோட்டத்தை இன்று எவரும் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக நமது அரசியலமைப்பே நமது சமூக கண்ணோட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நூலாகும்.

மரபுவழியாக தர்மசூத்திரங்களுடன் வேதாங்கம், புராணம், இதிகாசம் மற்றும் காட்சிகளையும் ஸ்மிருதியில் சேர்ப்பது வழக்கமாக உள்ளது.

### வேதாங்கம்

வேதங்களின் உச்சரிப்பு மற்றும் ஆய்வுக்காக வடிவமைக்கப்பட்ட துணைக்கல்விகள் வேதாங்கங்களாகும். வேதத்தின் சிக்ஷா (உச்சரிப்பு), கல்பா (சடங்கு முறைகள்), நிருக்தா (சொற்பிறப்பியல்), ஜோதிடம், இலக்கணம் மற்றும் யாப்பிலக்கணம் இவை வேதாங்கங்களாகும். அனைத்து வேதாங்ககளுக்கும் ஆசாரியர் பரம்பரையின் வரலாறுகளும் உள்ளன.

### இதிகாசம் மற்றும் புராணம்

இராமாயணம் மற்றும் மகாபாரதம் இந்தியாவின் சிறப்பான பெருங்காவியங்களாகும். இவற்றில் அடங்கியுள்ள எண்ணற்ற உரையாடல்கள் மற்றும் துணைக் கதைகளில் நீதிசார் மற்றும் தார்மீக வினாக்களின் விவாதம் தென்படுகின்றன. இக்காவியங்கள் இன்றவும் விழுமியங்களின் வழிகாட்டியாக விளங்குகின்றன. இந்திய நாட்டின் மொழிகளில் இராமாயணம் மற்றும் மகாபாரதம் பல வகைகளில் மீண்டும் விவரிக்கப்பட்டுள்ளது. பதினெட்டு புராணங்கள் மற்றும் அதே எண்ணிக்கையில் துணைபுராணங்கள், தேவதைகளின் கதை, மன்னரின் பரம்பரை, பூசை, கொண்டாட்டம் மற்றும் வழிபாட்டின் வழிகாட்டுதலையும் உள்ளடக்கியுள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED

## காட்சிகள் (தரிசனம்)

காட்சிகள் இந்திய தத்துவயியலின் அடிப்படை தூண்களாகும். ஆறு முக்கிய காட்சிகளாவன அல்லது தரிசனங்களாவன : நியாய, வைஷேஷிகா, யோகா, சாம்க்யா, கிழக்கு மீமாம்சா மற்றும் வடமீமாம்சா, இவற்றில் ஆத்திகம் மற்றும் நாத்திகம் என்ற இரண்ட குழுக்களின் முறையுள்ளது. வேதங்கள் உண்மை என்று ஏற்றுக் கொள்ளவில்லையெனில் அது நாத்திகம். சமண, புத்த மற்றும் சார்வாக முதலியன வைதிக மற்ற நாத்திக தரிசனங்களாகும். மீதமுள்ளவை வேதங்களே உண்மையென்று ஏற்றுக்கொள்ளும் ஆத்திக தரிசனங்களாகும்.

## சிலை வழிபாடு

வேதங்கள் பிரிம்மத்தை சகுணம் மற்றும் நிர்குணம் என்று இருவகையாகக்க கருதுகின்றன. நாமம் (பெயர்), வடிவம் (உருவம்) - இவற்றைப் பெற்றிருப்பது சகுணமாகும். இதற்கு அப்பாற்பட்டது நிர்குணமாகும். பெயர் மற்றும் உருவங்களை வழிபடுதல் வேதங்களில் காணப்படுகிறது. வேதங்களை ஏற்றுக்கொண்டு ஆத்திக பிரிவாக வளர்ந்த ஆகமநூல் இறைவனின் உருவ வழிபாட்டிற்கு அதிக வாய்ப்பளித்தது. வைணவம், சைவம் மற்றும் ஷாக்தம் - இவை மூன்று முக்கிய ஆகமப் பிரிவுகளாகும்.

இத்துணை விரிவாகவும் வேற்றுமையையுடைய ஆதாரங்களால் வடிவமைக்கப்பட்ட சனாதன தர்மம் தத்துவரீதியாக பலதத்துவங்களை ஏற்கின்றது. வேற்றுமையை பாராட்டி, வேறுசமயங்களுக்கும் வாய்ப்பளிக்கிறது. 'ஆ நோ பத்ராஹ க்ருதவோ யந்து விஷ்வதஹ' என்ற வேதமந்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 'உலகின் அனைத்து பகுதிகளிலிருந்தும் நல்ல செய்திகள் நம்மை நோக்கி பாய்ந்து வரட்டும்' என்பதே சனாதன தர்மத்தின் நோக்கமாகும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

சிகா கோவில் நடைபெற்ற அனைத்து சமய மாநாட்டின் இறுதிநாள் (நாள் : 27.9.1893) தனது சொற்பொழிவில் சுவாமி விவேகானந்தா கூறிய பின்வரும் பேச்சு அனைத்து சமயங்களும் எப்பொழுதும் பின்பற்றக் கூடியதாக உள்ளன. ‘முரண்படுவதல்ல, நன்மதிப்பு; சீர்குலைப்பதல்ல, ஏற்றுக்கொள்ளுதல்; பகைமையல்ல, நல்லிணக்கம் மற்றும் அமைதி’.

## பயிற்சிகள்

**I. பின்வரும் வாக்கியங்களை பொருத்தமான வார்த்தைகளுடன் பூர்த்தி செய்யவும்.**

1. வேத ஒலியின் பொருள் ________ .
2. உபநிடதங்கள்பெரும்பாலும்________வடிவிலுள்ளன.
3. வேதங்களின் உச்சரிப்பு மற்றும் ஆய்வுக்காக வடிவமைக்கப்பட் துணைகல்விகள் ________ ஆகும்.
4. இந்தியாவின் சிறந்த பெருங்காவியங்கள் ________ மற்றும் ________ .
5. இந்தியாவின் தத்துவயியலின் அடிப்படைத் தூண்கள் ________

**II. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்.**

6. முக்கிய வேதங்கள் யாவை?
7. வேதங்களின் நான்கு பிரிவுகளைப் பெயரிடுக.
8. ஸ்மிருதி என்றால் என்ன? இவற்றை தர்ம சூத்திரங்கள் என்று ஏன் அழைக்கிறார்கள்?
9. முக்கிய தரிசனங்கள் யாவை?
10. முக்கிய ஆகமப்பிரிவுகள் எத்தனை? அவை யாவை?
11. சனாதன தர்மத்தின் செய்தி என்ன?

@KTBS NOT TO BE REPUBLISHED

## III. செயல்பாடுகள்:-

1. வேதமந்திர ஸ்வரங்கள் ஓதுவதை கேளுங்கள். வேதங்களை என்ன மொழியில் இயற்றியுள்ளார்கள் என்ற தகவலை சேகரியுங்கள்.
2. உபநிடதங்களில் வரும் போதனை / செய்திகளைச் சேகரித்து எழுதுங்கள்.
3. குறைந்தபட்சம் ஐந்து சாந்தி மந்திரங்களையும் அவற்றின் பொருளையும் ஆசிரியரின் உதவியுடன் சேகரியுங்கள்.

* * * * *

@KTBS
NOT TO BE REPUBLISHED

அத்தியாயம் 6

# சமண மற்றும் பௌத்த சமயங்கள்

Q1Q3Z8

**இப்பாடத்தைக் கற்றபின் கீழ்காணும் அலகுகளை பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.**

- சமணம் மற்றும் பௌத்த சமயங்கள் தோற்றம்
- சமணம் மற்றும் பௌத்தத்தின் கொள்கைகள்
- சமணம் மற்றும் பௌத்தம் மதங்களின் வளர்ச்சி

**பின்னணி :**

நமது நாடு பல்வேறு கலாச்சாரம் மற்றும் மதங்களின் தாய்நாடாகும். இங்கு தோற்றி வளர்ந்த மதங்கள் பல்வேறு வகை வாழ்க்கை முறைகளை பிறப்பித்திருக்கின்றன. கலாச்ச ார வேற்றுமைகள் இந்தியாவின் சிறப்பாகும். பொ.ச. வேது நூற்றாண்டில் கங்கை கரையில் இரண்டு புதிய மதங்கள் தோன்றின. அவை சமம மற்றும் பௌத்த மதங்களாகும். அமைதி, அஹிம்சை, பொறுமை முதலிய மனித மதிப்புகளை இம்மதிங்கள் குறிக்கின்றன. இம்மதங்களின் தோற்றத்திற்கு அக்கால கட்டத்தின் சமூக அரசிய் மற்றும் தர்ம நடைமுறை முதலியவை முக்கிய காரணங்களாகும். வரலாற்றில் காரணமில்லாமல் எந்த வொரு புதிய வளர்ச்சியில்லை. அனைத்திற்கும் பின்னணியில் வலுவான காரணங்களிரிக்கும்.

சமண மற்றும் பௌத்த மதங்களின் தோற்றப் பின்னணியில் சமூக படிநிலைகளைக் காணலாம். வர்ணசாஸ்திரம் சூத்திர சமூகங்களின் வாழ்க்கையை நிலையற்றிதாக்கியது. சூத்திரர்கள் விவசாயி, வேலையாட்கள் மற்றும் கைத்தொழில்களுக்காக ஒதுக்கப்பட்டனர். அவ்வாறே வேளாண்சார் அமைப்பில் மாற்றங்கள் தென்பட்டது. புதிய நகரங்கள் தோன்றன. நகரங்கள் வளருகையில் வணிகர்கள் முக்கியத்துவம் பெற்றனர். மற்றொரு முக்கிய மாற்றம் அரசியல் நிர்வாகத்தின் வடிவம் மாற்றமடைத்தொடங்கின. கங்கை நதிக் கரையில்

@KTBS NOT TO BE REPUBLISHED

நாட்டுப்புறம், மாநாட்டுப்புறம் மற்றும் அரசுடைமை முதலியன அமையத்தொடங்கின. இப்பின்னணியல் சமண மற்றும் பௌத்த மதங்கள் ஏன் அத்துணை மக்களின் ஆதாரவைப் பெற்றது என்பதை தெரிவிக்கிறது. ஏனெனில் குலத்தொழில்செய்பவர்கள், வணிகர்கள் அரசபரம்பரைகள் என்ற அனைவரும் புதியதாக தோன்றி, சமண மற்றும் பௌத்த மதங்களுக்குத் தேவையான ஆற்றலை அளித்தனர். இரண்டு மதங்களும் மனிதனின் பிரச்சனைகளுக்கு ஆசையே அடிப்படை என்று அறிவித்தது. செல்வம் சேகரித்தல். ஆடம்பர வாழ்க்கை முறையை துறந்து, எளிய தூய்மையான குடும்பவாழ்க்கையை தூக்கிப் பிடித்தது. வடமொழியை தவிர்த்து பாளி மற்றும் பிராக்ருத மொழிகளில் கொள்கைகள் போதிக்கப்பட்டன. சமண மற்றும் பௌத்த மதங்கள் ஷ்ரமண பரம்பரைகள் என்றழைக்கப்பட்டன.

### சமண மதம்

சமணம் ஒரு பழமையான மதமாகும். சமணர்கள் 24 தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை நெறிகளை வழுவாது நம்பினார். வ்ருஷபநாதா முதல் தீர்த்தங்கரர் ஆவார். பர்ஸ்வ நாதா என்பவர் 23வது தீர்த்தங்கரர் ஆவார். பர்சவ நாதா என்பது பொ.சா.மு. 8-ம் நூற்றாண்டில் அஷ்வ சேனா என்ற மன்னரின் மகனாகப் பிறந்தார். அவர் உலக உயர் இன்ப வாழ்வையும் இச்சைகளையும் துறந்து இறவாப் புகழடைந்தார் என்று நம்பப்படுகிறது. அவர் சமூகத்தை துறந்து ஒரு துறவியானார். இன்ப வாழ்வுக்கு அவர் நான்கு கொள்கைகளை போதித்தார்.


வர்த்தமான மகாவீரர்

### பரசுவநாத போதித்த நான்கு கொள்கைகள்:-

1. அகிம்சை
2. உண்மை
3. திருடாமை
4. சொத்தாசை இன்மை

NOT TO BE REPUBLISHED ©KTBS

**வர்த்தமான மகாவீரர் (பொ.ச.மு. 599- 527) :-**

வர்த்தமான மகாவீரர் வைஷாலி நாட்டில் குண்டலா என்ற ஊரில் பிறந்தார். அவருடைய தந்தை ஞானடிரிகா இனத்தின் அரசராக விளங்கினார். அவருடைய தாய் திரிசலாதேவி லச்சாவின் இளவரசியாவார்.வர்த்தமானர் யசோதராவை மணந்தார்.

வர்த்தமானர் தனது 30 ஆம் வயதில் உண்மையைத் தேடி யலைந்தார். அதனால் தனது குடும்பத்தையும் வீட்டையும் துறந்தார். அறிவார்ந்த உண்மையைத் தேட அவர் 12 ஆண்டுகளைக் கழித்தார் தியானத்தை மேற்கொண்டு தனது உடலை உண்ணா நோன்பால் வருத்திக் கொண்டார். தனது 42 வயதில் ஞானோதயத்தை அடைந்தார். ஐம்புலன்களையும் அடக்கி இன்ப துன்பங்களின் மேல் வெற்றிகொண்டார். இதனால் அவர் மகாவீரர் என அழைக்கப்படுகிறார். அவர் 'ஜினா' வானார். ஜினா என்றால் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தி வென்றவர் என்று பொருளாகும். இவ்வாறு இவரைப் பின்பற்றியவர்கள் சமணர்கள் எனப்பட்டனர்.

மகாவீரர் 30 ஆண்டுகள் கங்கை மற்றும் யமுனை நதிகளுக் கருகிலுள்ளோருக்கு தனது கருத்துக்களை போதித்தார். தன் சமயத்தை அவர் மேற்கு இந்திய பகுதிகளுக்கும் போதிக்க பயணமானார். அவர் தன்னுடைய 72 வயதில் பீகாரில் உள்ள பவபுரி என்ற இடத்தில் நிர்வாணமடைந்தார்.

மகாவீரர் 5 உறுதிமொழிகளையும் மூன்று கொள்கைகளையும் ஒழுக்க நெறிகளையும் கற்பித்தார். அவருடைய மூன்று கொள்கைகளும் திரிரத்னா எனப்படுகிறது.

**ஐந்து உறுதிமொழிகள்:-** *1.அஹிம்சை, 2.உண்மை, 3. திருடாமை, 4.சொத்தாசையின்மை, 5.பிரம்மச்சாரியம்.*

*திரி ரத்னா (மும்மணிகள்):- 1. சம்யக்ஞான், 2. சம்யாக் வர்ஷன், 3.சம்யாக் சரித்ரா.*

சமண மதம் அது முழுவதுமாக கடவுள் இருப்பதை மறுக்கவில்லை, இருந்தாலும் அது நாஸ்திகத்தை (கடவுள் மறுப்பை) போதிக்கிறது. மக்களின் அன்றாடச் செயல்களில் கடவுள் ஈடுபடுகிறார் என்பதை அது நம்பவில்லை. அது கடவுளை ஜினாவுக்கும் கீழாக வைத்து எண்ணுகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

உயிருள்ள மற்றும் உயிரற்ற படைப்புகள் அனைத்தும் ஒரு ஆன்மாவைக் கொண்டுள்ளதாக சமணர்கள் நம்புகின்றனர். ஆன்மா தூய்மையினால் மட்டுமே பிறப்புகளில் இருந்து விடுதலைப் பெற்று நிர்வாணத்தை அடைய முடியும் என்றும், அவர்கள் எண்ணினர். தியானங்கள், உண்ணா நோன்பு, உடலை வருத்துதல் மற்றும் உடலை அழிப்பதால் மட்டுமே ஆன்மீகத் தூய்மையை அடைய முடியும். இதற்கு சல்லேகனா என்று பெயர். கர்மபலனை நம்புவது சமணர்களின் மிக முக்கியமான அம்சமாகும். மேலும் இம்மதத்தின்படி நல்ல மற்றும் புனித செயல்களால் மட்டுமே மோட்ச பேரின்பத்தை அடைய முடியும் என்று சமண சமயம் கற்பிக்கிறது. ஆன்மா, ஞான உதயத்தை பெற உடல் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டும்.

சமண சமயத்தில் இரு முக்கிய பிரிவுகளைக் காண முடிகிறது அவைகளில் ஒன்று சுவேதம்பர் இரண்டு திகம்பரர். வெள்ளுடை அணிபவர்கள் சுவேதம்பரர் ஆவர். ஆடை அணியாதவர் திகம்பரர் ஆவர். முதல் சமண சமய மாநாட்டிற்கு பிறகு வருத்தமானரின் போதனைகள் அனைத்தும் பாகங்களாக தொகுக்கப்பட்டன. அவைகள் 12 அங்கங்கள் அல்லது கிரந்தங்கள் எனப்படும். அவைகள் பிராக்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளன.

பீகாரில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக சமணர்களின் ஒரு குழு சிராவண பெலகுளாவில் வந்து குடியமர்ந்தனர். இவ்விதமாக இங்கும் சமண சமயம் பரவி புகழ் வாய்ந்த கன்னடம், தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகளில் பல நூல்கள் எழுதப்பட்டன. புகழ் வாய்ந்த கன்னட கவிகளான பம்பா, ரன்னா, ஜன்னா மற்றும் பொன்னா ஆகியோர் சமணத்தை சார்ந்தவர்கள் ஆவர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

**புத்த சமயம்:-**

கௌதம புத்தர் என்று போற்றப்படும் சித்தார்த்தர் பொ.சா.மு. 6ஆம் நூற்றாண்டில் பிறந்தார். அவருடைய தந்தை சாக்கிய நாட்டு அரசராவார் ஆடம்பர உலக இன்பங்களையும் குடும்ப வாழ்வின் மகிழ்ச்சியையும் துறந்த சித்தார்த்தர் ஒரு துறவியானார். வாழ்வின் மாயக் கவர்ச்சிகளிலிருந்து உண்மையைத் தேடி அலைந்த அவர் ஞானோதயத்தைப் பெற்று புத்தர் ஆனார். புத்தர் என்றால் ஞானஉதயம் பெற்றவர் என்று பொருள். முதலில் அவர்

வாரணாசிக்கு அருகில் உள்ள சாரநாத் என்ற இடத்தை அடைந்தார். அங்கு மான் பூங்கா என்ற இடத்தில் தன் முதல் போதனையை போதித்தார். இது தர்மசக்கர பிராவார்த்தனா என்று அழைக்கப்படும். இங்கு அவர் நான்கு உயர்ந்த உண்மைகளையும் எண் வகை வழிகளையும் போதித்தார்.



கௌதம புத்தர்

**புத்தரின் நான்கு வகை உண்மைகள் :**

1) உலக முழுமையும் துன்ப துயரங்களை உடையது என்று அறிவிக்கிறது. அவைகள் துன்பத்திற்கான காரணங்களையும் கூறுகிறது.

2) இத்துக்கங்களுக்கும் ஆசையே காரணம்

3) பேராசையிலிருந்து விடுபட்டால்தான் நிம்மதியாக வாழ்க்கை சாத்தியமாகும்.

4) எண்வகை வழியை பின்பற்றுவதால் ஆசையிலிருந்து விடுபடமுடியும் எண்வகை வழிகளை நடுநிலை வழி என்றழைப்பர்.

**எண்வகை வழிகள்:-**

1. நல்ல நடத்தை 2. நல்ல சொல் 3. நல்ல கண்ணோட்டம்

4. நல்ல வாழ்க்கை 5. நல்ல முயற்சி 6. நல்ல நினைப்பு

7. நல்ல தீர்மானம் 8. நல்ல சிந்தனை

**புதிய சமய ஆதரவாளர்கள்:-**

செல்வ வணிகர்கள், கைதொழிலாளர் மற்றும் பொதுமக்கள் புதிய சமய போதனையால் தூண்டப்பட்டு ஈர்க்கப்பட்டனர். புத்தர் பொதுமக்களின் மொழியாகிய பிராகிருத மொழியில் மக்களுடைய சுழலுக்கேற்ற தொடர்புடைய, மரபு வழியில், எளிமையாக போதித்தார். புதிய நகரங்களின் சூழல் மக்களின் வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்தது. புதிய சூழலில் புதிய சமயங்கள் மக்களின் நம்பிக்கை ஒளிக்கீற்றாக அமைந்தது. சிறப்பாக, புத்த சமயம், மக்களின் வாழ்க்கை முறை மாற்றத்திற்கு பெரும் பங்காற்றியது.

@KTBS NOT TO BE REPUBLISHED

புத்தரும் அவருடைய ஆதரவாளர்களும் கோசலை, மகதம் மற்றும் கங்கை சமவெளியில் உள்ள பல நகரங்களுக்குச் சென்று அவர் போதனையை கற்பித்தார்கள். அவர்கள் ஒரு நகரத்திலிருந்த மற்றொரு நகரத்திற்கு கால்நடையாகச் சென்று தங்களுடைய வாழ்வை மற்றவர்களுக்காக அர்ப்பணித்தனர். ை புத்தர் தன்னுடைய 80 வயதில் குஷின் நகரில் தன்னுடைய புகழுக்குரிய சுயநலமில் லாத பணிநிறை வாழ்வை விட்டு மறைந்தார். இது 'மகாபரி' ''நிர்வாணா'' என்று அழைக்கப்படுகிறது.

புத்தர் பயணம் மேற்கொண்ட இடங்களில் எல்லாம் விகாரங்கள் கட்டியெழுப்பப்பட்டன. மக்கள் புத்தரின் எலும்புகளையும், பொருட்களையும் சைத்தன்யாங்கள் மற்றும் ஸ்தூபிகள் போன்ற வழிபாட்டு ஆலயங்களில் பாதுகாத்து வணங்கி புத்தரை நினைவு கூர்ந்தனர். இது கோயில்களும் சிலை வழிபாடுகளும் தோன்ற வழி வகுத்தன.


சாஞ்சிஸ்தூபி

புத்த சமயம் இந்தியாவில் மட்டுமல்லாது அயல்நாடுகளிலும் பரவியது. சீன பயணிகளான பாஹியான், இட்சிங் மற்றும் யுவான் சுவாங் போன்றோர் புத்த சமயத்தின் புகழை உயிரோட்டமாக விவரித்துள்ளனர். புத்த சமயம் மலேயா, பர்மா, தாய்லாந்து வியட்நாம், கம்போடியா, இலங்கை, மற்றும் பாமியான் போன்ற நாடுகளிலும் பரவியது. மலைகளிலுள்ள பெரும் பாறைகள் உடைக்கப்பட்டு அதிலிருந்து புத்தர் சிலைகள் வடிக்கப்பட்டன. இன்றும் கூட மிகப் பெரிய புத்தர் சிலைகளை கம்போடியாவின் அங்கூர்வாட் மற்றும் ஆப்கானிஸ்தானின், பாமியான் என்ற இடங்களிலும் காண முடிகிறது பாமியானில் உள்ள மிகப்பெரிய புத்தர் சிலை தாக்கி அழிக்கப்பட்டது துரதிஷ்டமானதாகும்.

இந்தியாவின் குறிப்பிடத்தகுந்த சமூக தத்துவஞானி அரசியல் சட்டத்தை வடித்த சிற்பியான அண்ணல் அம்பேத்கார் அவர்கள் 1956-ல் புத்த சமயக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு புத்த சமயத்தை தழுவினார்.

©KTBS NOT TO BE REPUBLISHED

புத்தருடைய இறப்பிற்கு பிறகு அவருடைய ஆதரவாளர்கள் புத்தரின் போதனைகளையும், மரபையும் தொகுத்தனர். அத்தொகுப்புகள் திரிபிடக்காஸ் என்று அழைக்கப்படுகிறது. அவைகள் வினயா, தாமா மற்றும் அபிதாம்மா, பிடாக்காஸ்ஆகும். காலப்போக்கில், புத்தரின் போதனையில் முரண்பாடுகள் ஏற்பட்டு புத்த சமயத்தில் பல கிளைகள் தோன்றின. புத்தரின் சிலையை வணங்குபவர்கள் - ஹிமாயான பிரிவு, புத்தரின் போதனைகளை ஆராதிப்பவர்கள் - மஹாயான பிரிவு, மற்றும் புத்தரை ஆராதிப்பதுடன் மந்திர - தந்திரங்களை பின்பற்றுபவர்கள் - வஜ்ராயான பிரிவு என்று புத்தமதம் பிரிவுகளாயின. இன்று புத்தனை வழிபடும் பல வழிகளைத் தேடிக் கொண்டிருக்கும் அமைப்புகளை உலகமுழுவதும் நாம் காண்கிறோம்.

**அந்நியர் படையெடுப்புகள்:-**

இக்காலக் கட்டத்தில் தான் கிரேக்கத்தில் பல நகர அரசுகள் தோன்றின. பழைய பாரசீகம் ஒரு வலிமை வாய்ந்த பேரரசாக உருப்பெற்றது. இவ்வரசுகளுக்கிடையே தொடர்ச்சியான போர்கள் நடைபெற்றன. பாரசீகத்தை ஆண்ட ஒரு குழு அக்கிமேனியர்கள் ஆவர். இவ்வம்சத்தை சேர்ந்த டேரியஸ் அரசர் பொ.ச.மு. 6-ஆம் நூற்றாண்டில் ஒரு வலிமையான அரசை ஏற்படுத்தினார். அவருடைய ஆட்சிக்காலத்தில் அவரின் ஆட்சி இந்தியாவின் எல்லை வரை பரவி இருந்தது. பொ.ச.மு. 7-ஆம் நூற்றாண்டில் மாசிடோனியாவின் அரசர் அலெக்சாண்டர் கிரேக்க நகர ஆட்சிகளை வென்று பாரசீகத்தை கைப்பற்றினார். இவ்விதமாக இந்திய எல்லை வரை பரவி இருந்த பாரசீக ஆட்சியின் கீழ் இருந்த இந்தியாவும் அலெக்ஸாண்டரின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. பாரசீகத்தை வென்ற பிறகு அலெக்ஸாண்டர் கந்தகார் மற்றும் இந்து குஷ் கணவாய்கள் வழியாக இந்தியாவிற்குள் நுழைந்தார். அவர் ராவி மற்றும் பியாஸ் நதிகள் வரை முன்னேறினர், மேலும் அவரால் தொடர முடியாமல் ஜீலம் நதி வழியாக இந்திய எல்லையைக் கடந்து தனது தாயகம் செல்லும் வழியில் பாபிலோனியாவில் இறந்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**அலெக்சாண்டர் மற்றும் பௌரவா ஆகியோர்களிடையே நடைபெற்ற போர்:-**

தக்ஷசீலாவின் மன்னர் அம்பி விடுத்த அழைப்பை ஏற்று அலெக்சாண்டர் இந்தியா வந்தபோது அவரை எதிர்த்தவர் பௌரவா ஆவார். பௌரவா பேராஸ் என்று அழைக்கப்பட்டார். இரு படைகளும் ஜீலம் நதிக்கரையில் சந்தித்து பல கொடுமையான இழப்புகளை ஏற்படுத்தியது. எவரையும் தன் ஆட்சிக்குட்பட்ட ஆற்றுப்பகுதியில் நுழையவிடாத போரஸின் படைகளை அலெக்சாண்டரின் படைகள் தாக்கி வென்றன. வெற்றி பெற்ற அலெக்சாண்டர் சிறை பிடிக்கப்பட்ட பேராஸிடம் தன்னை எவ்வாறு நடத்த வேண்டும் என்று வினவியபோது அவர் துணிச்சலுடனும் பெருமிதத்துடனும், ஒரு மன்னனை எவ்வாறு மரியாதையோடு நடத்த வேண்டும் என்று பதிலுரைத்தார். போராஸின் வீரமிகு செயல் கிரேக்க காவியங்களில் அழியாப் புகழுடன் விளங்குவதை காணலாம் அலெக்சாண்டரின் படையெடுப்பு மௌரியப் பேரரசு தோன்ற வழிவகுத்தது. இக்காலகட்டத்தில் பெரிய அரசுகளுக்கிடையே நடைப்பெற்ற வாணிபதொடர்பு துண்டிக்கப்பட்டது. ஆனால் கிரேக்கர் வருகை வட இந்திய கலையையும் அறிவியலையும் தாண்டி வளர வழி வகுத்தது. உலகப் புகழ் பெற்ற காந்தாரக்கலை சிற்பங்களில் இவற்றை நாம் காண முடிகிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை ஏற்ற கொற்களால் நிரப்புக.**

1. முதல் சமண தீர்த்தங்கரர் ____________ ஆவார்.
2. வருத்தமானர் ____________ என்ற இடத்தில் பிறந்தார்.
3. மகாவீரர் தனது 42 வது வயதில் ________ அடைந்தார்.
4. கௌதம புத்தரின் இயற்பெயர் ____________.
5. மகாவீரர் தனது 72 வது வயதில் நிர்வாணத்தை ____________ என்ற இடத்தில் அடைந்தார்.

6. புத்தர் தனது முதல் போதனையை ____________ என்ற இடத்தில் போதித்தார்.

7. புத்தரின் முதல் போதனை ____________ என்று அழைக்கப் படுகிறது.

8. இந்தியாவின் மீது போர்தொடுத்த மியாசிபோனிய அரசர் ____________ .

**II. கீழே உள்ள வினாக்களுக்கு சுருக்கமாக பதிலளிக்கவும்.**

9. மகாவீரர் போதித்த உறுதிமொழிகள் மற்றும் மும்மணிகளை குறிப்பிடுக.

10. சமண சமயத்தின் பிரிவுகள் யாவை?

11. புத்தர் போதித்த உயர் உண்மைகள் யாவை?

12. நடுநிலை வழி என்றால் என்ன?

13. புத்தர் போதித்த எண்வகை வழிகள் யாவை?

14. திரிபிடகங்கள் பற்றி குறிப்பு வரைக.

©KTBS
NOT TO BE REPUBLISHED

**III. செயல்பாடுகள்:-**

1. மகாவீரரின் வாழ்க்கைப் பற்றிய தகவல்களை திரட்டுக?

2. கௌதம புத்தரின் வாழ்க்கையோடு தொடர்புடைய படங்களை சேகரிக்கவும்.

* * * * *

# அரசறிவியல்

## அத்தியாயம் 7

## அரசியல் அறிவியலின் பொருளும் அதன் முக்கியத்துவமும்

L7S2S9

**இப்பாடத்தைக் கற்றபின் கீழ்காணும் அலகுகளை பற்றி நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.**

- 'அரசறிவியல்' என்பதன் கருத்து
- 'அரசறிவியல்' குறித்த வளர்ச்சி வழிமுறைகளை விளக்குதல்.
- 'அரசறிவியல்' சிந்தனையாளர்களின் கருத்துக் கொடைகளை அறிதலும் கண்டுணர்தலும்.
- அரசறிவியல் முக்கியத்துவத்தை அறிதல்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**பொருள் :**

அரசறிவியல் என்பது மனிதனின் அரசியல் செயல்பாடுகளைக் கையாளும் சமுக அறிவியலில் ஒன்றாகும். இது நாட்டையும், அரசாங்கத்தையும் கையாள்கிறது. இது நாட்டின் தோற்றம், இயல்பு மற்றும் அரசியல் நிறுவனங்களின் வடிவங்களை ஆய்வு செய்கிறது. நாட்டைப் பற்றிய ஆய்வு என்பது சமுக அறிவியலின் முக்கிய பாடமாகும்.

அரசறிவியலின் அடிப்படை கிரேக்கர்களிடம் இருந்து தொடங்கியது. எகிப்தியர்கள், பாபிலோனியர்கள், பாரசீகர்கள், இந்தியர்கள் மற்றும் சீனர்கள் அரசறிவியல் பற்றிய அவர்களுடைய கருத்துக்களும். எண்ணங்களும் கிரேக்கர்களுக்கு முன்பே குறிப்பிட்டிருந்தாலும் அவர்கள் அதை ஒரு முறையான ஆய்வாக உருவாக்கத் தவறிவிட்டனர். கிரேக்கர்களால் அரசறிவியலுக்கு சுதந்திர அறிவியலின் அந்தஸ்து வழங்கப்பட்டது.

சாக்ரடீஸ் மற்றும் அவரது சீடர் பிளோட்டோ போன்ற கிரேக்க தத்துவவாதிகள் சிறந்த அரசியல் சிந்தனையாளர்கள். பிளோட்டோ தன்னுடைய புகழ் பெற்ற நாவலான ரிபப்ளிக் (குடியரசு) வில் முதல் முதலாக நாட்டையும் அரசையும் பற்றிய இயல்புகளையும் செயல்பாடுகளையும் ஆய்ந்து விவாதித்தனர். அரிஸ்டாட்டில் மிகப் பழம் பெரும் சிந்தனையாளராகவும்

பிளேோட்டோவின் மாணவராகவும் ''அரசறிவியலின் தந்தை'' (Father of Political science) என்ற தகுதிக்குரியவராயும் விளக்கியுள்ளார்.

தந்தை (Fathe of Political Science) என்ற தகுதிக்கு உரியவராயும் விளங்கியுள்ளார். இவர் அரசியலறிவியலை முறைப் படுத்தி, அதற்கு அடித்தளமிட்ட முதல் சிந்தனையாளர் ஆவார். அரசறிவியலில் தி பாலிடிக்ஸ் (அரசியல்) என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதி அறிவுக்கு விருந்தளித்தார் என்றால் மிகையாகாது. அவரது இந்நூல் நாட்டின் தோற்றத்தையும் செயல்பாடுகளையும், வளர்ச்சியெயும் விவாதித்துள்ளது. கௌடில்யரின் பொருளியல் (அர்த்த சாஸ்திரம்) என்ற நூலில் அரசியல் கொள்கைகளைப்பற்றிய தகவல்கள் உள்ளன. பண்டைய கிரேக்கர்கள் அரசியல் (Politics) என்ற சொல்லை அரசின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தினர்.

பொருளுள்ள மூல கிரேக்க சொல்லான பெலிஸ் (Polis) என்பதிலிருந்து பிறந்தது. கிரேக்கர்களுக்கு நகரமே மாநிலமாகவும் நகர மாநில ஆட்சி ஆய்வு அரசியல் பாடமாகயிருந்தது. இவ்வாறாக நகர மாநில ஆய்வை அரசறிவியல் என்று நிபுணர்கள் அழைத்தார்கள்.

அரசியல் (பாலிடிக்ஸ்) என்றசொல் அரசாங்கம் அன்றாடம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளைக் குறிப்பிடுகிறது. ஆனால் அரசறிவியல் (பொலிடிகல் சயன்ஸ்) மாநிலத்தின் மூலம், வளர்ச்சி, வடிவம், ஆட்சிமுறை, மாநிலத்தின் செயல்கள், குடிமக்களின் உரிமை முதலியன குறித்து ஆய்வு செய்கிறது. அரசறிவியல் மாநிலத்தின் அனைத்து பரிமாணங்களின் ஆய்வாகும்.

மாநிலம், அரசாங்கம் மற்றும் மனிதனின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்யும் கருத்து அரசறிவியல் என் பொதுவாக கூறலாம்.

**அரசவியலின் வரையறை :**

**கார்னர் அவர்களின் கூற்று :** மாநிலத்திலிருந்து தொடங்கி மாநிலத்திலேயே முடிவுறும் ஆய்வே அரசறிவியல்

**பால் ஜானெட் அவர்களின் கூற்று :** மாநிலத்தின் மூலம் மற்றும் அரசுக் கொள்கைகள் குறித்த அறிவியலே அரசியல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**அரசறிவியலின் முக்கியத்துவம் :**

இன்றைய காலக்கட்டத்தில் அரசறிவியல் பற்றிய அறிவு மிகவும் இன்றியமையாதது. ஒரு நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் மக்களின் சிந்தனைத்திறத்தையும் அறிவையும் அரசியல், அரசறிவியல் போன்றவற்றோடு கொண்ட தொடர்புகளைப் பொருத்தே அமையும்.

- நாட்டின் பிறப்பு மற்றும் முன்னேற்றத்தை புரிந்து கொள்ள உதவுகிறது. நாட்டின் செயல்களில் அரசியல் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு அரசுகள் ஈடுபடுத்திக் கொள்வதைப் பற்றிய தகவல்களை அரசறிவியல் தருகிறது.
- மன்னராட்சி, விடுதலை, நியாயம், சட்டங்களின் சமத்துவம், சிறந்த அரசாங்கம், போர் மற்றும் அமைதி போன்றவதறம் மூலம் மற்றும் வளர்ச்சியைப் பற்றிய தகவல்களை அரசறிவியல் வழங்குகிறது.
- மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களின் அமைப்பு மற்றும் செயல்களைப் பற்றிய தகவல்களை அரசறிவியல் வழங்குகிறது.
- அரசாங்கத்தின் கடந்த மற்றும் நிகழ்கால செயல் முறைகளடிப்படையில் எதிர்கால செயல்பாடுகளை திட்ட மிடுவதற்கு உதவுவதுடன் நவீன நலமான நாட்டை நிறுவுவதற்கு உதவுகிறது.
- நாட்டின் அரசியலமைப்பு மற்றும் சட்டங்களைப் பற்றிய அறிவை அரசறிவியல் அளிக்கிறது.
- அரசாங்கத்தின் உறுப்புகளான சட்டமன்றம் செயலாட்சி மற்றும் நீதித்துறைகளின் அமைப்பு மற்றும் செயல்களை புரிந்துகொள்ள அரசறிவியல் உதவுகிறது.
- பொதுமக்களிடம் அரசியல் அறிவு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அரசாங்கம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் விழிப்புணர்வுடனும் செயல்திறனுடம் விளங்குமாறு அரசியலறிவு உதவுகிறது.
- தலைவர்கள் மற்றும் சமூக பணியார்கள் மக்களின் சிக்கல்களை தெரிந்துகொண்டு அச்சிக்கல்களுக்கு

@KTBS NOT TO BE REPUBLISHED

பயனுள்ள தீர்வு முறைகளை பின்பற்றுவதற்கு அரசியலறிவியலின் அறிவு உதவுகிறது.

- தலைமை மற்றும் குடிமைப் பண்புகளை வளர்ப்பதற்கு அரசறிவியல் உதவுகிறது.
- தலைமை மற்றும் குடிமைப் பண்புகளை வளர்ப்பதற்கு அரசறிவியல் உதவுகிறது.
- அரசியல் நிறுவனங்களான அரசியல் கட்சிகள், கூட்டாச்சி அமைப்பு, உள்ளூர் அமைப்புகள் முதலியன பற்றி அறிந்து கொள்ள அரசறிவியல் உதவுகிறது.
- மக்கள் செயல்திறனுடன் அரசியல் ஈடுபடுவதற்கு தேவையான கொள்கை மற்றும் நீதிகளையும் ஊக்குவிப்பதை அரசறிவியல் நிறைவேற்றுகிறது.
- பன்னாட்டு உறவுகள் பற்றிய அறிவை அளிப்பது சிறப்பாக நாடுகளின் இடையே அமைதி மற்றும் உதவுதன் முக்கியத்துவத்தை அரசறிவியல் தருகிறது.

எனவே அரசறிவியல் நாட்டின் அனைத்துத் தேவைகளையும் புரிந்துக் கொள்ளவும் நல்லாட்சியை வழங்கவும் தலைவர்களின் பங்கில் நாடு வளர்ச்சி பெறவும் மக்கள் தொடர்புகள் உயர்ந்திடவும் வழிவகை செய்கிறது. மக்கள் நல்லோர்களாகவும் பொறுப்புணர்வு பெருகிடவும் செயலூக்கம் பெற்ற குடிமக்களாக வாழவும் இவ்வரச றிவியல் உதவி செய்கிறது. இவ்வரசறிவியல் பற்றிய அறிவு நீதியை, அமைதியை, முன்னேற்றத்தை வழங்கி மகிழ்வு பெறும் நாடாக மலரவும் கோடிக்கணக்கான மக்களின் கனவுகள் மெய்ப்படவும் நீண்டகாலம் நல்வாழ்வு பெறவும் பேருதவி செய்கிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. கோடிட்ட இடங்களை தகுந்த சொற்களால் நிரப்புக:-**

1. ''பாலிடிக்ஸ்'' என்ற சொல் ________ கிரேக்க வார்த்தையிலிருந்து உருவானதாகும்.
2. ''ரிபப்ளிக்'' என்ற நூல் ________ அவர்களால் எழுதப்பட்டது.
3. அரிஸ்டாட்டில் அரசறிவியல் பற்றி எழுதிய நூலின் பெயர் ________ ஆகும்.

4. கௌடில்யரின் அரசறிவியல் பற்றிய படைப்பு ________ ஆகும்.

**II. கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிக்க.**

5. அரசறிவியல் என்றால் என்ன?
6. அரசறிவியல் பற்றிய முறையான ஆய்வு யாரிடமிருந்து தொடங்கியது?
7. ''அரசறிவியலின் தந்தை'' என்று அழைக்கப்படுபவர் யார்?
8. ''அரசறிவியல்'' என்பதற்கான விளக்கம் தருக.
9. 'அரசறிவியல்' பற்றிய கல்வியால் பெறும் பயன்களைக் கூறுக.

**III. செயல்பாடுகள்:-**

1. இந்தியாவின் கடந்த கால அரசியல் அமைப்பை சித்தரிக்கும் படங்களைக் கொண்டு படத் தொகுப்பு ஒன்று தயார் செய்யவும்.
2. உன் ஆசிரியர் துணையுடன் வகுப்பில் அரிஸ்டாட்டில் நூலில் காண்படும் செய்தி ஒன்றினைக் குறித்துக் கலந்துரையாடல் செய்க.
3. மனிதனின் சமூகத் தேவைகளே நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது இது இப்படித்தானா? இத்தலைப்பில் வகுப்பில் பேச்சு நிகழ்த்திடுக.

**III. செயல்திட்டம்:-**

1. பழங்கால கிரேக்க நகரத்தின் குடிமகன் நீ என்று நினைத்துக்கொண்டு அந்நகர ஆட்சியின் ஏதேனும் ஒரு கருத்தினைக் கலந்துரையாடல் செய்க.
2. உலகின் முக்கிய அரசியல் சிந்தனையாளர்களின் படங்களைச் சேகரித்து ஆல்பம் தயாரிக்கவும்.

* * * * *

NOT TO BE REPUBLISHED ©KTBS

அத்தியாயம் 8

P6X9Y8

# குடிமகன் மற்றும் குடியுரிமை

**இப்பாடத்தைக் கற்றபின் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்**

- குடிமகன் மற்றும் குடியுரிமையின் வேறுபாடு
- குடிமகனுக்கு நாடு அளிக்கும் உரிமைகள்
- குடிமகன் மற்றும் வெளிநாட்டவர் இடையேயான வேறுபாடு
- குடியுரிமை பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் இழப்பதற்கான வழிமுறைகள்0

© KTBS NOT TO BE REPUBLISHED

**பொருள்:-** 'குடியுரிமை' என்ற சொல் காலத்துக்குக் காலம் வெவ்வேறு பொருளைப் பெற்றுள்ளது. கிரேக்க காலத்தில் குடியுரிமை என்பது குறுகிய அர்த்தத்தைக் கொண்டு இருந்தது. 'குடிமகன்' என்ற சொல் அந்நாட்களில் கிரேக்க நகர-மாநிலங்களில் வசிப்பவர்கள் மற்றும் மாநில நிர்வாகத்தில் தீவிரமாக ஈடுபட்டவர்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. நாட்டில் வாழும் அனைவரும் குடிமக்கள் அல்ல. அரசியல், நிர்வாகம், நீதி, சட்டமன்றம் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் மட்டுமே குடிமக்கள் என்று அழைக்கப்பட்டனர். மற்றவர்களில் பெண்கள், அடிமைகள், தொழிலாளர்கள், குழந்தைகள், வெளிநாட்டினர், வணிகர்கள் மற்றும் பலர் குடிமக்களாக இருக்கவில்லை. இது பண்டைய கிரேக்கர்களின் குடியுரிமை பற்றிய கருத்தாகும்.

இருப்பினும் நவீன காலத்தில் குடியுரிமை என்ற கருத்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சிவில் (உள்நாட்டு), சமூகம், நாட்டின் தொடர்பைக் கொண்ட எந்த ஒரு நபரும் அவர் வசிக்கும் நாட்டிற்கு விசுவாசமாக இருந்து அரசால் வழங்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்துவர்கள் குடிமக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். சிவில் சமூகத்தின் உறுப்பினர் குறிப்பிட்ட கடமைகளுக்கு உறுதியளித்து மற்றும் பொது அதிகாரத்திற்கு உட்பட்டு அது

வழங்கும் சலுகைகளை சமமாக அனுபவிக்கும் குடிமகனாக வரையறுக்கப்படுகிறார்கள். இவ்வாறு ஒருவர் குடியுரிமையைப் பெற வேண்டுமானால் அவர் நாட்டில் நிரந்தரமாக வசிப்பவராகவும் மற்றும் நாட்டின் உறுப்பினராகவும் இருக்க வேண்டும். சமூக மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவித்தல்; உரிமைகளுடன் சில கடமைகளையும் நிறை வேற்ற வேண்டும் மற்றும் அரசுக்கு விசுவாசமாக இருத்தல் வேண்டும்.

குடி மக்களுக்கும், காலனித்துவ ஆட்சி குடிமக்களுக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் காணலாம். 1947 க்கு முன் நாம் அனைவரும் ஆங்கிலேயர்களின் குடிமக்களாக இருந்தோம் சுதந்திரத்திற்கு பிறகு நாம் இந்தியாவின் குடிமக்கள் ஆனோம் பொதுவாக ஒரு நாட்டை சேர்ந்தவர்கள் மற்றும் அங்கு வசிக்கும் மக்கள் அதன் குடிமக்கள் அவர். ஒரு குடிமகனாக இருப்பதற்குச் சட்டபூர்வமான சில நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையே உறவு இருக்கிறது. அரசு பாதுகாப்பு மற்றும் சில வசதிகளை குடிமக்களுக்கு வழங்குகிறது. குடிமக்கள் அதற்கு பிரதிபலனாக அரசை பராமரித்தல் சட்டங்களுக்கு கீழ்ப்படிதல் மற்றும் அரசுக்கு விசுவாசமாகவும் இருக்க வேண்டும்.

ஒரு குடிமகன் என்பது ஒரு நாட்டின் உறுப்பினராக இருந்து தனது நாட்டின் சில நன்மைகளை அனுபவிப்பார்கள். அவை யாவன.

- நாட்டின் பாதுகாப்பை அனுபவித்தல் மற்றும் அரசிடம் இருந்து பாதுகாப்பு பெறுகிறார்.
- நமது நாடு சட்டம் ஒழுங்கை வழங்குவதால் அவர் அமைதியான வாழ்க்கை வாழ்கிறார்.
- இன்றைய சமூக நலத்திட்டங்களின் கீழ அரசு கல்வி, மருத்துவ காப்பீடு, தங்குமிடம், வேலைவாய்ப்பு மற்றும் பிற சலுகைகளை வழங்குகிறது.
- குடிமக்கள் உள்நாட்டு அரசியல் உரிமைகளைப் பயன்படுத்தும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

- அரசு வழங்கும் அடிப்படை உரிமைகளை அனுபவிக்கிறார்.
- தேர்தல்களில் போட்டியிடுதல், பிரிதிநிதிகளை தேர்ந்தெடுத்தல், வாக்களிப்பது போன்ற அரசியல் செயல்பாட்டில் பங்கேற்கும் வாய்ப்பைப் பெறுகிறார்.
- குடியரசு தலைவர், துணை தலைவர், உச்ச நீதிமன்றங்களின் நீதிபதிகள் மற்றும் பிற உயர் மற்றும் பதவிகளுக்கான தகுதிகளைப் பெறுகிறார்.
- அனைத்து பொது சேவைகளுக்கும் நியமனம் பெற தகுதி உடையவர்.

## குடிமகனுக்கும் வெளிநாட்டவர்க்கும் இடையில் உள்ள வேறுபாடுகள்:-

NOT TO BE REPUBLISHED @KTBS

ஒரு நாட்டில் பிறந்து வளர்ந்து நிரந்தரமாக வாழும் மக்கள் குடிமக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இருப்பினும் வேறொரு நாட்டில் தற்காலிகமாக வசிக்கும் எந்தவொரு நாட்டின் குடிமகனும் இடம்பெயர்ந்த வெளிநாட்டவர் என்று அழைக்கப்படுகிறார். அவர் தற்காலிகமாக வாழும் ஒரு நாட்டில் வெளிநாட்டவர் ஆனால் அவரது தாய்நாட்டில் குடிமகன் குடிமகன் (சிவிலியன்) மற்றும் வெளிநாட்டவர்க்கும் இடையில் ஆன வேறுபாடுகள் பின்வருமாறு விவரிக்கலாம்.

1. குடிமகன் தனது நாட்டில் நிரந்தர குடியிருப்பாளர் மற்றும் முழுநேர குடியிருப்பாளர். வெளிநாட்டவர் ஒரு தற்காலிக குடியிருப்பாளர் அல்லது பயணி ஆவார்.
2. குடிமக்களுக்கு அரசியல் உரிமைகள் உள்ளன அவர் வாக்கெடுப்பில் பபங்கேற்கலாம், தேர்தலில் போட்டியிடலாம், அரசு காலி பணியிடங்களில் வேலை வாய்ப்பு பெறலாம், வெளிநாட்டவர்க்கு இவை கிடைப்பதில்லை.
3. ஒரு குடிமகன் தனது நாட்டிற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்று உணர்கின்றான். ஆனால் ஒரு வெளிநாட்டவர் அந்நாட்டின் தற்காலிக உறுப்பினர் அவர் எந்த நாட்டில் உள்ளாரோ அந்த நாட்டின் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும்.

4. சட்டவிரோத நடவடிக்கை வெளி நாட்டவரின் காலம் முடிவடைதல் போன்ற காரணங்களுக்காக வெளிநாட்டவரை நாட்டை விட்டு வெளியேறுமாறு அரசு உத்தரவிடலாம். ஆனால் ஒரு நாட்டின் குடிமகனுக்கு அத்தகைய கட்டளையை விதிக்க முடியாது.

## குடியுரிமை பெறும் முறைகள்:-

குடியுரிமையைப் பெற இரண்டு வழிகள் உண்டு

1. பிறப்பின் மூலம் குடியுரிமை (Natural Citizenship)

2. இயல்பான குடியுரிமை (Naturalised Citizenship)

### 1. பிறப்பின் மூலம் (Natural Citizenship):-

குடியுரிமை பெறுவதற்கான மிக முக்கியமான முறை பிறப்பால் ஆகும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பெரும்பாலான குடிமக்கள் பிறப்பால் குடியுரிமை பெறுவர். ஒரு நாட்டின் எல்லைக்குள் பிறந்த ஒவ்வொருவரும் அந்நாட்டின் குடியுரிமையை பெறுவர்.

### 2. இயல்பான குடியுரிமை மூலம் (Naturalised Citizenship) :

குடியுரிமையை இயல்பான முறையில் பெறலாம். இந்த முறையின்படி ஒரு வெளிநாட்டவர் சில நிபந்தனைகளை பூர்த்தி செய்து பிறகு குடிமகனாக முடியும். இந்த நிலைமைகள் நாட்டிற்கு நாடு வேறுபட்டாலும் கவனிக்கப்படும் சில பொதுவான கொள்கைகள் பின்வருமாறு சுருக்கமாக கூறலாம்.

அ) **வசிப்பிடம் அல்லது வசிக்கும் இடம்:-** ஒரு வெளிநாட்டில் நீண்ட காலம் வசிப்பது அந்த நாட்டின் குடியுரிமையை பெற ஒரு நபருக்கு உரிமை அளிக்கிறது. இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் இது 5 ஆண்டுகள் பிரான்சில் இது பத்தாண்டுகளாகும்.

ஆ) **திருமணம்:-** ஒரு பெண் வெளிநாட்டவரை திருமணம் செய்யும்போது அவள் கணவனின் நாட்டின் குடியுரிமையை பெறுகிறாள். ஆனால் கணவனுக்கு

NOT TO BE REPUBLISHED @TBS

மனைவியின் நாட்டின் குடியுரிமை கிடைப்பதில்லை. ஜப்பான் மற்றும் வேறு சில நாடுகளில் திருமணத்தின் நிலை மிகவும் வித்தியாசமானது. இந்நாடுகள் மட்டும் கணவனுக்கும் குடியுரிமை வழங்குகின்றன.

இ) **வெளிநாட்டு அரசு சேவை:-** ஒரு வெளிநாட்டு அரசின் சேவையில் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு அந்த நாட்டின் குடியுரிமை வழங்கப்படலாம். பல நாடுகள் வெளிநாட்டினர் தங்கள் விசுவாசத்தை சந்தேகிப்பதில் பொது சேவையில் பணியாற்ற அனுமதிப்பதில்லை.

ஈ) **விண்ணப்பம் சம்பாதிப்பதன் மூலம் :-** அனைத்து நாடுகளிலும் ஒரு வெளிநாட்டவருக்கு குடியுரிமை வழங்கப்படலாம். அதற்கு அவர் விண்ணப்பித்து சில நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் விண்ணப்பதாரரின் நல்ல குணத்தை கருத்தில் கொண்டு அந்த நாட்டின் குடியுரிமை வழங்கப்படலாம்.

உ) **சொத்து சம்பாதிப்பதன் மூலம் :-**வெளிநாட்டில் சொத்து வாங்கும் நபர் அந்நாட்டின் குடிமகனாக விரும்பினால் குடியுரிமையை பெறலாம். மெக்சிகோவில் அத்தகைய ஏற்பாடு உள்ளது. ஆனால் சமீப காலமாக வெளிநாட்டவர்களுக்கு நிலம் வாங்கும் வாய்ப்புகளை வெளிநாடுகள் வழங்குவதில்லை.

## இந்திய குடியுரிமை பெறுவதற்கான முறைகள்:-

இந்தியாவில் குடியுரிமை தொடர்பான சட்டங்கள் மற்றும் கட்டளை உருவாக்கும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உண்டு. இந்த விவகாரத்தில் மாநில சட்டமன்றத்திற்கு எந்த அதிகாரமும் இல்லை. இந்தியாவின் குடியுரிமைச் சட்டம் 1955இல் இயற்றப்பட்டது குடியுரிமை பெறுவது மற்றும் இழப்பது எப்படி என்பதை சட்டம் கோடிட்டு காட்டுகிறது. 1986-இல் மீண்டும் சட்டம் திருத்தப்பட்டது. குடியுரிமை விதிகள் மிகவும் கடுமையானவை. 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம்,

© KTBS NOT TO BE REPUBLISHED

குடியுரிமை நடைமுறைகளை பின்வருமாறு வழி நடத்துகிறது. அவையாவன :

1. **பிறப்பால் குடியுரிமை (Citizenship by Birth):-** ஜனவரி 26, 1950 முதல் இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவரும் பிறப்பால் இந்திய குடிமகனாக மாறுகிறார்கள். ஜனவரி 26, 1950 க்கு முன் பிறந்தவர்களுக்கு மற்றும் இந்தியாவில் வசிப்பவர்களுக்கும் குடியுரிமை வழங்கப்படுகிறது.

2. **வம்சாவளியின் அடிப்படையில் குடியுரிமை (Citizenship by Descent):** ஜனவரி 26, 1950 அன்றும் அதற்குப் பிறகு வெளிநாட்டில் பிறந்த ஒருவர் அவர் பிறக்கும் நேரத்தில் அவரது பெற்றோரில் யாராவது ஒருவர் இந்திய குடிமகனாக இருந்தால், இந்திய வம்சாவளியின் அடிப்படையில் இந்தியாவின் குடியுரிமையைப் பெறலாதிம்.

3. **பதிவு செய்வதன் மூலம் குடி உரிமை (Citizenship by Registration):-** இந்தியக் குடிமகனாக விரும்பினால் அரசியலமைப்புச் சட்டம் அல்லது குடியுரிமைச் சட்டத்தின் படி இந்திய குடியுரிமையைப் பெறலாம்.

4. **இயல்பாக விண்ணப்பிதன் மூலம் பெறும் குடியுரிமை (By Naturalisation):-** சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் அதாவது இந்திய குடியரசுத் தலைவரிடம் வெளிநாட்டினை சேர்ந்தவர் விண்ணப்பித்தன் மூலம் இந்திய குடியுரிமையை பெறலாம். விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன் சில நிபந்தனைகளை அவர்கள் பூர்த்தி செய்தல் வேண்டும். அவர்கள் இந்தியாவில் 7 ஆண்டுகளுக்கு குறையாமல் வசித்து இருக்க வேண்டும்.

5. **பிரதேசத்தை இணைத்தல் மூலம் வரும் குடியுரிமை (By incorporation of new Territory):-** எந்த ஒரு புதிய பிரதேசமும் இந்திய ஒன்றியத்தின் ஒரு பகுதியாக

NOT TO BE REPUBLISHED ©KTBS

மாறினால் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இந்திய அரசின் உத்தரவின்படி இந்திய குடியுரிமை வழங்கப்படும்.

**இந்தியக் குடியுரிமையை இழத்தல் முறைகள் (Loss of Citizenship):-**

குடியுரிமையை பெறுவது போலவே பல்வேறு காரணங்களுக்காகவும் குடியுரிமை இழக்கப்படலாம். குடியுரிமையை இழப்பதற்கு சில முக்கியமான வழிகளைப் பின்வருமாறு கூறலாம்.

1. **தானாக முன்வந்து குடியுரிமையை துறத்தல் (Renunciation):-** எந்த ஒரு இந்திய குடிமகனும் சம்மந்தப்பட்ட அதிகாரியிடம் விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் தன் குடியுரிமையை தானாகவே முன்வந்து கைவிடலாம்.
2. **முடிவுடைதல் (Termination) :-** இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் வேறு ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றால் அவரது இந்திய குடியுரிமை சட்டத்தால் நிறுத்தப்படுகிறது. இந்த நடைமுறைக்கு எந்த விண்ணப்பத்தையும் சமர்ப்பிக்க தேவையில்லை.
3. **இழத்தல் (Deprivation):-** யாரேனும் ஒருவர் மோசடி செய்து இந்திய குடியுரிமையை பெற்றிருந்தால் அல்லது அவர் தேசவிரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அல்லது இந்திய அரசியலமைப்பிற்கு விசுவாசமின்மையைக் காட்டினால் இந்திய அரசாங்கம் அவரது/அவர்களுடைய குடியுரிமையைப் பறிக்கிறது. இது கட்டாய குடியுரிமை பறித்தல் ஆகும்.

**குடியுரிமையின் வகைகள்:-** குடியுரிமையில் இரண்டு வகைகள் உள்ளன அவை ஒற்றை குடியுரிமை மற்றும் இரட்டைக் குடியுரிமை,

**ஒற்றைக் குடியுரிமை :** அவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர் என்பதை பொருட்படுத்தாமல் தேசிய குடியுரிமை என்ற ஒரே ஒரு குடியுரிமை மட்டுமே பெற்றிருப்பார். இங்கு மாநிலக்

NOT TO BE REPUBLISHED @KTBS

குடியுரிமைக்கு வாய்ப்பில்லை. எடுத்துக்காட்டாக கருநாடக மாநிலத்தில் வசித்தாலும் நமக்கு இந்தியக் குடியுரிமை இருக்கும்.

**இரட்டைக் குடியுரிமை :** இரட்டைக் குடியுரிமை என்றால் நாடு மற்றும் மாநிலங்களுக்கான வெவ்வேறு குடியுரிமையை இரட்டைக் குடியுரிமை என்பர். ஒவ்வொருவரும் தான் வசிக்கும் நாட்டின் குடிமகனாதலால், அந்நாட்டின் குடிமகனாகிறார். எடுத்துக்காட்டாக, கூட்டாச்சி நாட்டமைப்பு இருக்கும் அமெரிக்காவில் இரட்டைக் குடியுரிமை உள்ளது. இந்நாட்டு குடிமகன் நியூ ஜெர்ஸி (New-Jersy) மாநிலத்தில் வசித்துக் கொண்டிருந்தால் அவன் நியூஜெர்ஸி குடியுரிமை பெறுகிறான் அதனுடன் அமெரிக்க கூட்டாட்சியின் குடியுரிமையும் பெறுகிறான்.

**குடியுரிமை மற்றும் அரசாங்கம்:-** அரசுக்கும் குடிமகனுக்கும் இடையே நெருங்கிய உறவு உள்ளது. குடிமகன் இல்லாத அரசு இல்லை. ஒரு நாடு அல்லது அரசாங்கம் குடிமக்களை அந்நிய தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதன் மூலமும் சட்ட அமைப்பினை பாதுகாப்பதன் மூலமும் ஒற்றுமையை பாதுகாப்பதன் மூலமும் அவர்களின் ஒற்றுமையை பாதுகாக்க முடியும்.

அரசு சட்டங்களை இயற்றுகிறது. கிளர்ச்சியை அகற்றி நாட்டில் அமைதி நிலைநாட்டுகிறது. குடிமக்களின் நலனுக்காக அரசு பல சமூக பொருளாதார மற்றும் கல்வித் திட்டங்களை செயல்படுத்துகிறது. கல்வி அறிவின்மை, வறுமை, சமத்துவம் இன்மை, வேலையில்லா திண்டாட்டம் போன்ற பிரச்சனைகளைப் போக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவது. உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை அரசு வழங்கியுள்ளது.

தேசத்தின் குடிமகன் தன் நாட்டுக்காக சில கடமைகளை செய்ய வேண்டும். உரிமைகள் மற்றும் கடமைகள் இரண்டும் ஒரே நாணயத்தின் இருமுகங்கள் போன்றது. அது குடிமகனுக்கு பல நன்மைகளை அளிக்கிறது. எனவே குடிமகன் தனது நாட்டிற்கு பின்வரும் சில கட்டுப்பாடுகள் மற்றும் செயல்பாடுகளைச் செய்ய வேண்டும்.

© KTBS NOT TO BE REPUBLISHED

- குடிமகன் அரசாங்கத்தின் சட்டங்களுக்கு கீழ்படிய வேண்டும் மற்றும் அரசியல் அமைப்பை மதிக்க வேண்டும்.
- தேசத்தின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் பாதுகாக்க குடிமகன் சத்தியம் செய்ய வேண்டும்.
- குடிமகன் தேச விரோத செயல்களில் ஈடுபடக் கூடாது
- ஊழல், பாரபட்சம், வரதட்சணை, குழந்தை திருமணம் போன்றவற்றை எதிர்க்க குடிமக்கள் அரசியலமைப்பு வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்.
- அரசாங்கத்தின் மதிப்பு அதன் குடிமக்களின் தரத்தை பொறுத்தது என்பதால் குடிமக்கள் அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட வேண்டும்.
- குடிமக்கள் தனது தனிப்பட்ட நலனை விட தேசத்தின் முன்னேற்றத்திற்காக பாடுபட வேண்டும்.
- குடிமக்கள் தன்னலமற்றவராகவும், நாட்டுக்காக சேவை செய்யத் தயாராக இருக்கவேண்டும்.
- வரி செலுத்துவது மற்றும் தேசத்தை பாதுகாப்பது போன்ற கடமை அவருக்கு உள்ளது.

இந்த செயல்பாடுகளுடன் சில அடிப்படை கடமைகள் தமது அரசியலமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படை கடமைகளின் நோக்கம், குடிமக்கள் தங்கள் சமூக மற்றும் பொருளாதாரக் கடமைகளைப் பற்றி அறிந்து கொள்வதாகும். நாட்டின் நலனுக்காக குடிமக்கள் என்ன செய்ய வேண்டும் அல்லது என்ன செய்யக்கூடாது என்பதை புரிந்து கொள்ளவும் இது உதவுகிறது. எனவே ஒரு குடிமகன் சமூகம், தேசம் மற்றும் அவர்களின் சொந்த முன்னேற்றத்தின் நலன்களுக்காக இந்த அடிப்படைக் கடமைகளை பின்பற்றி நடைமுறைப்படுத்த வேண்டும். குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையே சமூகமான உறவு இருக்க வேண்டும். அது கொடுக்கல் வாங்கல் கொள்கையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

©KTBS NOT TO BE REPUBLISHED

1976-ல் 42வது திருத்தத்தின் மூலம் நமது அரசியலமைப்பில் அடிப்படை கடமைகள் இணைக்கப்பட்டுள்ளன. அடிப்படை கடமைகள் பிரிவு 51 (A) விதியின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

## பயிற்சிகள்

**I. பொருத்தமான வார்த்தைகளால் வெற்றிடங்களை நிரப்புக.**

1. ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இந்தியாவில் வாழ்ந்த மக்கள்____________என அழைக்கப்பட்டனர்.
2. நம் நாட்டில் தற்காலிகமாக வசிக்கும் வேறு நாட்டவர் ____________என்று அழைக்கப்படுகிறார்.
3. குடியுரிமைச் சட்டம்____________ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.
4. நீங்கள் ____________ முறையின் மூலம் குடியுரிமை பெறுவீர்கள்.

**II. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக பதில் அளிக்கவும்:-**

5. குடியுரிமை என்றால் என்ன?
6. ஒரு குடிமகன் அனுபவிக்கும் நன்மைகள் யாவை?
7. இந்தியாவில் குடியுரிமைக் குறித்த சட்டங்களை இயற்றும் அதிகாரம் கொண்ட அமைப்பின் பெயரைக் குறிப்பிடவும்.
8. குடியுரிமையை பெறும் முறைகளைக் குறிப்பிடவும்.
9. இயல்பாக விண்ணப்பிப்பதன் மூலம் குடியுரிமையை பெறுதலை விளக்குக.
10. குடியுரிமையை இழக்கும் முறைகள் யாவை?
11. குடியுரிமை நிறுத்தப்படும் சூழ்நிலையைக் குறிப்பிடவும்.
12. குடியுரிமையின் வகைகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளை எழுதவும்.
13. ஒரு குடிமகனின் கடமைகள் என்ன?

NOT TO BE REPUBLISHED @KTBS

## III. செயல்பாடுகள்:-

1. அடிப்படை கடமைகளின் படவிளக்கங்களைச் சேகரித்து அதை உங்கள் பள்ளியில் காட்சிப்படுத்தவும்.
2. உங்கள் ஆசிரியரின் வழிகாட்டுதலின் கீழ் அடிப்படை உரிமைகளின் நன்மைகளைப் பற்றி விவாதிக்கவும்.
3. இந்தியாவில் (உங்கள் ஆசிரியரின் வழிகாட்டுதலின் கீழ்) சமத்துவத்திற்கான உரிமை மற்றும் சுதந்திரத்திற்கான உரிமை ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்கவும்.
4. குடியுரிமை பெறுதல் மற்றும் இழக்கும் முறைகளைக் காட்டும் ஒரு விளக்கப் படத்தை தயாரித்து அதை உங்கள் வகுப்பறையில் காட்சிப்படுத்தவும்.
5. இந்தியாவின் ஒற்றை குடியுரிமையின் நன்மைகளைப் பற்றி விவாதிக்கவும்.
6. அமெரிக்காவில் உள்ள இரட்டை குடியுரிமை இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டால் அது நமக்கு எவ்வாறு பயனளிக்கும்? விவாதிக்கவும்.

## IV. செயல் திட்டங்கள்:-

1. அடிப்படை உரிமைகளை மீறுதல் மற்றும் மேற்கொண்ட தீர்வு நடவடிக்கைகள் பற்றி செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் வந்துள்ள தகவல்களை சேகரிக்கவும்.
2. ஒரு இந்தியர் குறுகிய காலத்திற்கு வெளிநாட்டில் தங்க விரும்பினால் அவர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தகவல்களை சேகரிக்கவும்.

* * * * *

© KTBS NOT TO BE REPUBLISHED

X9L3G5

# சமூகவியல்

## அத்தியாயம் 9

# மனிதன் மற்றும் சமூகம்

*இந்த அத்தியாயத்தை கற்றபின் பின்வரும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்*

- மனிதன் சமூகம் உயிரினம் எப்படி?
- மனிதனின் சமூதாயமயமாக்கல் உணர்வுகளை வெளிப்படுத்துதல்
- தொடக்க சமூகவியலாளர்

உலகிலுள்ள உயிரினங்களில் மனிதன் மட்டுமே தனது இருப்பைப் பற்றிய அறிவைப் பெற்றுள்ளான்தமது வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி சிந்திக்கிறான். இதனால் மனிதனின் உள்ளத்தில் பல்வேறு வினாக்கள் எழுந்தன. மனிதன் ஏன் சமூக உயிரியாக உள்ளான்? மனிதன் இறைவனின் படைப்பா அல்லது இறைவன் மனிதனின் படைப்பா? சமூகங்களுக்கிடையே வேறுபாடு ஏன்? மக்களையும் சமூகத்தையும் ஒன்றிணைக்கும் ஆற்றல் எது? சமூகமும் தொடர்ந்து மாற்றங்களுட்படுவதேன்? இம்மாற்றம் இயற்கை குறி காட்டியா? இத்தகைய வினாக்களுக்கு விடை கண்டு கொள்ளவும் சமூகத்தை முறையாக அறிவியல் பூர்வமாக படிப்பதற்குச் செய்த முயற்சி 150 ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கியது.

இத்தகைய முயற்சியின் விளைவாக புதியதொரு ஆய்வு இயல் பிறந்தது. இவ்வியலைப் படிப்பதே சமூகவியல் ஆகும்.

சமூகவியல் என்ற சொல்லின் சமமான சொல்லான சோஷியாஸ் என்ற ஆங்கில சொல், இலத்தின் மொழியன் சோஷியஸ் மற்றும் கிரேக்க மொழியன் லோகோஸ் சொற்கள் இணைந்ததால் வந்ததாகும். இதன் பொருள் சமூகத்தை பற்றி ஆய்வு செய்வதாகும். இச்சொல்லை ஆகஸ்ட காமடெ முதலிமுறையாகப் பயன்படுத்தினார்.

ஆகஸ்ட் காம்டெ அவர்களின் படி சமூக முறை மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தொடர்புடைய கருத்துக்களின் ஆய்வு செய்யும் அறிவியலே சமூகவியல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

சமூக உறவுகளைப் பற்றி ஆய்வு செய்யும் அறிவியலே சமூகவியல் என்பது **மாக்ஸிவெர் மற்றும் பேஜ்** அவர்களின் கருத்தாகும்.

**சமூகவியல் படிப்பதன் முக்கியத்துவம்.**

1) தனித்தன்மை (ஆளுமை)யின் வளர்ச்சிக்கு உதவுகிறது.
2) சமூக பிரச்சனைகளுக்குத் தீர்வு அளிக்கிறது.
3) நவீன சூழல்கள் மற்றும் முன்னேற்றத்திற்கான அறிவை அளிக்கிறது.
4) பின்தங்கிய மற்றும் நலிந்த பிரிவினர்களின் ஏற்றத்திற்கு உதவுகிறது.

**மனிதன் சமூக உயிரினம்**

தனிநபர் மற்றும் சமூகத்திற்கு இடையிலான உறவு தனித்துவமானது தனிநபர் இல்லாமல் சமூகம் இல்லை சமூகம் இல்லாமல் தனிநபர் இல்லை எனவே தான் மனிதன் சமூகத்தில் படைப்பு சமூக மனிதனின் படைப்பு என சில சமூகவியலாளர்கள் கூறுகிறார்கள். நாம் ஒரு நொடி கண்களை மூடி நானொருவனே எனது ஊரில் இருக்க சாத்தியமா? என்று சிந்திக்கலாம் அப்போது அனைவருக்கும் ஒரே விடை தான் கிடைக்கும் அது சாத்தியமில்லை என்பதுதானே? மனிதன் கூடி வாழும் உயிரினம். அனைவருடன் சேர்ந்து வாழ முயற்சிக்கிறான் நம்மனைவரின் வளர்ச்சிக்கும் சமூகம் தேவையானது. ஏனெனில், மனிதனின் இருப்பிற்கு (வாழ்தல்) சமூக உறவுகளின் தேவை உள்ளது. ஆகவேதான் **மனித சமூகத்தை சமூக உறவுகளின் மதிப்பு** என்று அழைக்கிறர்கள். மனிதன் சமூக உயிரினம் என்றழைக்கப்படுகிறான்.

**சமூகமயமாக்கல்:**

நாம் சமூக உறுப்பினராக வேண்டுமெனில் சமூகத்தில் வாழ வேண்டும். சமூகத்தில் இல்லையெனில் நாம் கற்றிருக்கும் மொழி, படிப்பு, விளையாட்டு, சிந்திக்கும் முறை மற்றும் நமது உடல் மொழி முதலியவற்றை கற்றுக்கொள்ள இயலாது, இவ்வாறு கற்றுக் கொள்ளும் செயல் முறையே சமூகமயமாக்கல் எனப்படுகிறது. குடும்பம், பள்ளி நண்பர்கள் குழு, சமூக ஊடகங்கள் போன்றவை

@KTBS NOT TO BE REPUBLISHED

நமது சமூகமயமாக்கலுக்குத் துணைபுரிகின்றன. குடும்பம் நமக்கு உணவு, பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி, ஊட்டச்சத்து போன்ற போன்றவற்றை அளிக்கின்றது. நம் பெற்றோர் நமது மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் மேம்படுமாறு பார்த்துக் கொள்கிறார்கள்.

பள்ளிகளில் முறைசார் கல்வி கிடைக்கிறது நண்பன் குழுவில் நாம் மற்றவர்களுடன் கூடி வாழ்வதைக் கற்றுக்கொள்கிறோம் சமூக ஊடகங்கள் வெளியுலகைப் பற்றிய அறிவை அளிக்கின்றன. இது நாம் பொருந்த வாழத் துணைபுரிகிறது இதனால் சமூகத்தில் மனிதன் வெற்றிகரமாக வாழ முடிகிறது.

### மனிதனுக்கு சமூகச் சுற்றுச் சூழல் தேவை

மனிதன் சமூக சூழலில் வளரவில்லையெனில், மனிதப் பண்புகளை வளர்த்துக் கொள்ள அவனால் முடியாது சமூகம் மற்றும் கூட்டமாக வாழாவிட்டால் சமூக மயமாக்கலுக்கு உட்பட முடியாது. இக்கூற்றை நிரூபிக்க கீழ்க்காணும் எடுத்துக்காட்டைக் காணலாம்.

*1920* ஆம் ஆண்டு மிட்னாபுரத்தில் சிக்க கமலா என்ற சிறுமி *9* ஆண்டுகள் விலங்குகளுடன் காட்டில் கழித்தாள். அங்கு பச்சை மாமிசத்தை தின்று கொண்டு விலங்குகளைப்போல் நான்கு கால்களில் நடந்துக் கொண்டிருந்தாள். பிறகு மனிதனின் தோழமையால் வேகவைத்தப் பொருட்களை உண்ணுதல் பேசுதல், மற்ற சிறுவர்களைப்போல நடந்து கொள்ளுதல் ஆகியவற்றைக் கற்றுக் கொண்டாள். அவளுக்கு சுய அறிவு இருக்கவில்லை. இந்த எடுத்துக்காட்டின் மூலம் நாம் அறிவது என்னவென்றால் மனிதன் மனித சமூகத்தில் வாழவில்லையெனில் அவன் விலங்கைப் போன்றாகிறான். இதனை பல சோதனைகள் மூலம் சமூகவியலாளர்கள் நிரூபித்துள்ளனர்.

### மனிதர்கள் மற்றும் மொழி

நமது உணர்வுகளை நாம் எவ்வாறு வெளிப்படுத்துகிறோம்? உடல் சைகை, குறிப்புகள் மூலமாக நமது உணர்வுகள் பசி, உறக்கம், தாகம், வலி, மகிழ்ச்சி போன்றவற்றை வெளிப்படுத்தலாம், ஆனால் மனிதர்கள் இவ்வனைத்து உணர்வுகளையும் உடல் மொழியின் மூலம் வெளிப்படுத்தயியலாது. இத்தகைய சூழலில் மொழி தவிர்க்க முடியாததாகிறது.

© KTBS NOT TO BE REPUBLISHED

நாம் பேசும்போது அப்பா, அம்மா, அண்ணா, அக்கா சித்தப்பா போன்ற சொற்களைப் பயன்படுத்துகிறோம் அண்ணா அக்கா என்ற சொற்கள் நமது மூத்த சகோதரர் மற்றும் சகோதரியை நோக்கிப் பயன்படுத்தும் சொற்கள் ஆகும். உறவுகளையும் உணர்வுகளையும் புரிந்து கொள்வதற்கு மொழி மிகவும் முக்கியமானது.

மனிதனுக்கு மொழி உள்ளது. ஆனால் விலங்குகளுக்கு மொழி இல்லை. இதுதான் மனிதனுக்கும் விலங்கிற்கும் இடையிலான வேறுபாடாகும். மொழி இல்லையென்றால் என்னவாகும் என்று ஒரு முறை சிந்தியுங்கள். பாடப்புத்தகங்களோ, பள்ளிக்கூடங்களோ, சமூகமும் ஊடகங்கங்களோ, நாகரிகமோ இருந்திருக்காது. மனிதன் சமூக விலங்கு சமூகத்தைப் போன்றிருக்கும் நிலை இருந்தது எனவே சமூகவியலில் சமூகத்தை படிக்கும்போது மொழி மிக முக்கியமான கூறாகக் கருதப்படுகிறது

**தொடக்க சமூகவியலாளர்**


ஆகஸ்ட் காம்டே

சமூகம், கலாச்சாரம் நடத்தை சமூக உறவுகள் ஆகியவற்றைப் பற்றிப் பயில்பவர்களோ, சமூகவியலாளர் எனப்படுவர். அத்தகைய சில தொடக்க சமூகவியலாளர்களைப் பற்றி அறிமுகம் செய்து கொள்ளலாம்.

ஆகஸ்ட் காம்டே அவர்கள், சமூகத்தை பயிலும் அறிவியலை 'சமூகவியல்' என்று அழைத்தார். எனவே அவர் சமூகவியலின் தந்தை என்றழைக்கப்படுகிறார். ஷர்பட் ஸ்பென்சர் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரிட்டிஷ் சமூகவியலாளராவார். அவர் சமூக விரிவாக்கத்தை பரிமாண வளர்ச்சி ஆய்வு செய்தார்.

பிரான்சில் எமிலி டர்கிம் என்ற சமூகவியலாளர் 19-ஆம் நூற்றாண்டில் இறுதிக் காலத்திலும் இருபதாம் நூற்றாண்டில் தொடக்க காலத்திலும் இருந்தவர். இவர் சமூகவியலை அறிவியலாக்க உழைத்தார். மார்க்ஸ்வெபர் என்ற ஜெர்மனிய சமூகவியலாளர் பொருளாதாரவியல் தத்துவவியல் மற்றும் வரலாறு ஆகியவற்றில் மிக தேர்ச்சி பெற்றிருந்தார். வேலை வாய்ப்புத் திறன் மற்றும் கிருத்துவ மதம் குறித்த சமூகவியலை ஆய்வு செய்தார்.

© KTBS NOT TO BE REPUBLISHED



ஹர்பர் ஸ்பென்சர்



மாக்ஸ்வெபர்

காரல் மார்க்ஸ் அவர்கள் ஜெர்மானிய தத்துவ நிபுணர். இவர் வரலாறு, பொருளாதாரம், தத்துவ இயல் மற்றும் கிருத்துவ மதவியல் ஆகியவற்றில் மிகுந்த அறிவைப் பெற்றிருந்தார். சமூகவியலின் அளவை விரிவாக்கினார். இந்தியாவிற்கு பிரிட்டிஷ்காரர்கள் வந்தபிறகு 1914 ஆம் ஆண்டு மும்பை பல்கலைக் கழகத்தில் சமூகவியல் அறிமுகப்படுத்தப்பட்டது ஜி எஸ் குர்யே, எம்.என். சீனிவாஸ் ஏ.ஆர். தேசாய், இராவதி கர்வெ, எஸ்.சி. துபே முதலியவர்கள் இந்தியாவின் முக்கிய சமூகவியலாளர்களாவர்.



கார்ல் மார்க்ஸ்



எமிலி டர்கிம்

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

### I. விடப்பட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக

1. மனிதன் ________________ உயிரினம்.
2. முறை சார் கல்வி ________________ யில் கிடைக்கிறது
3. சமூகவியலின் தந்தை ________________
4. மனிதன் மனிதனாவதற்கு ________________ தேவை
5. மனிதர்கள் தங்களது உணர்வை ________________ யில் வெளிப்படுத்துவார்கள்.

### II. கீழ் காணும் வினாக்களுக்கு விடையளிக்க.

6. மனிதன் சமூகம் உயிரினம் எவ்வாறு ? வரையறுக்கவும்
7. சமூகமயமாக்கல் என்றால் என்ன ?
8. மிட்னாபுரத்தில் தென்பட்ட கமலா எப்படி இருந்தாள்?
9. தொடக்க சமூகவியலாளர்களைப் பெயரிடுக.

### III. கீழ்காணும் வினாக்களுக்கு நான்கைந்து வாக்கியங்களில் விடையளிக்க.

10. மனிதன் சமூக உயிரினம் என்பதை விவரிக்க.
11. மனிதனுக்கும் மொழிக்குமிடையிலான தொடர்பை எழுதுக.
12. சமூகவியல் படிப்பதன் முக்கியத்துவம் என்ன?

### IV. செயல்பாடு

1. இந்திய சமூகவியலாளர்களின் புகைப்படங்களைச் சேகரிக்கவும்.

* * * * *

© KTBS NOT TO BE REPUBLISHED

அத்தியாயம் 10

# மனிதன் மற்றும் கலாச்சாரம்

E9Q1H1

***இந்த அத்தியாயத்தை கற்றபின் பின்வரும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.***

- *கலாச்சார வளர்ச்சி*
- *கலாச்சார வேற்றுமை மற்றும் பழக்கவழக்கள்*

நமது அன்றாட உரையாடலில் கலாச்சாரம் என்ற சொல், சிறந்த நடத்தையைக் குறிப்பிடுவதற்கும் பழக்க வழக்கம், சடங்குகளை விவரிக்கவும் விரிவாக பயன்படுத்தப்படுகிறது அவ்வாறெனில், சமூகவியலில் இச்சொல் எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதை பற்றி அறியலாம்.

கலாச்சாரம் என்ற சொல் ஆங்கில மொழியில் ‘கல்ச்சர்’ என்று பிரபலமாக உள்ளது. இச்சொல் லத்தீன் மொழியில் ‘கோலெரெ’ சொல்லில் இருந்து வந்தது. அதாவது விவசாயம் செய் என்று பொருளாகும். கலாச்சாரத்தைப் பல்வேறு சமூகவியலாளர்கள் பல்வேறு முறையில் விளக்கியுள்ளார்கள். மனிதன் சமூக உறுப்பினராகி கற்றுக் கொள்ளும் அறிவு, கலை, நீதி, நேர்மை, சட்டம், பழக்கம் திறன் நிபுணத்துவங்களை உட்கொண்ட ஒரு கூட்டமைப்பாகும் அல்லது நாம் என்னவாகியிருக்கிறோமோ அதுதான் கலாச்சாரம் எனப்படும்.

சமூகத்தின் புவியமைப்பு, பாரம்பரை, தேவைகள் முதலியவற்றை சார்ந்து கலாச்சாரம் வடிவமைக்கப்படுகிறது. ஒரு சமூகத்தின் கலாச்சாரம் மற்றொரு சமூகத்தின் கலாச்சாரத்திலிருந்து மாறுபடுகிறது. ஆகவே ஒரு கலாச்சாரம் சிறப்பான கலாச்சாரம் என்றோ மற்றொன்று சிறப்பானதல்ல என்றோ கூறயியலாது. கலாச்சாரம் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு பரிமாறப்படுகிறது. நாம் தற்போது கற்றுள்ள மொழி நமது பெரியோர்களிடமிருந்து நாம் கற்றதாகும். கலாச்சாரம் தொடர்ந்து மாற்றத்திற்கு உட்படுகிறது. ஆடை, கூந்தல், உணவு முறைகள் கடந்த பத்தாண்டுகளில் மாற்றமடைந்திருப்பதை நீங்களே கவனித்திருப்பீர்கள்.

© KTBS NOT TO BE REPUBLISHED

**கலாச்சார வேற்றுமை**

நாம் கருநாடகத்தின் தலைநகர் பெங்களூரில் பிரபலமான சாலை ஒன்றில் நடந்து செல்வதாகக் கொள்ளலாம் அங்கு பல்வேறு முறையில் ஆடை அணிந்த மக்கள் நம் கண்ணில் தென்படுவார்கள். பல்வேறு இனத்தவர்கள் தென்படுவார்கள் பல்வேறு மொழி உரையாடல்களையும் கேட்கலாம்.

எந்தவொரு சமூகத்திலும் ஒரேமாதிரியான கலாச்சாரம் இருக்க முடியாது. பல்வேறு மதம், வாழ்க்கை முறையைச் சார்ந்த வெவ்வேறு முறையான கலாச்சாரத்தைக் காணலாம் இதனை கலாச்சார வேற்றுமை என்று அழைக்கிறோம்.

கலாச்சாரம் வெவ்வேறாகயிருந்தாலும் ஒன்று மற்றொன்றில் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதைக் காணலாம் எடுத்துக்காட்டாக பெண் குழந்தைகள் அணியும் சுடிதார் வடமேற்கு இந்தியாவிலிருந்து வந்த ஆடையாகும். அவ்வாறே, பொதுவாக ஆண்கள் அணியும் பேண்ட், சட்டை, ஆங்கில மொழி பேசும் பிரிட்டிஷ்காரர்களிடம் இருந்து வந்தவை இந்தியாவில் நூற்றுக்கணக்கான பழங்குடிகள், ஆயிரமாயிரம் சாதிகள், சில பழங்குடிகள், நூற்றுக்கணக்கில் மொழிகள் என வெவ்வேறு கலாச்சாரம் காணப்படுகிறது. ஆகையால் இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமையைக் காணலாம்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**படிக்க வழக்கங்கள்**

கலாச்சாரம் மற்றும் கலாச்சார வேற்றுமையைப் பற்றி தெரிந்து கொண்ட பிறகு கலாச்சாரக் கூறுகளைப் பற்றி அறிந்துகொள்ளலாம். கலாச்சார கூறுகளாவன. நம்பிக்கைகள். விழுமியங்கள், விதிகள் சமூக விதிமுறைகள் மற்றும் நீதிகளாகும். இவற்றை பழக்க வழக்கங்கள் எனலாம்.

சுதந்திரம், நேர்மை, தூய்மை, விநயம், நாட்டுப் பற்று போன்றவை விழுமியங்களாகும். சமூகம் தனிநபரிடம் எதிர்பார்க்கும் நடத்தை முறையை விழுமியங்கள் எனக் கருதலாம். ஒவ்வொரு கலாச்சாரத்திலும் உள்ள நல்லவை கெட்டவைகளைத் தீர்மானிப்பதில் விழுமியங்கள் துணைபுரிகிறது.

விதிகளுக்குத் துணையாக உலக வழக்கம் மற்றும் ஒழுக்க முறைகள் உள்ளன. சமூக நடைமுறைகள் எனபது நாம் அன்றாட வாழ்க்கையில் மீண்டும் மீண்டும் ஈடுபடும் செயல்பாடுகளாகும். எடுத்துக்காட்டாக உணவு உட்கொள்ளுதல், உறங்குதல்,

வணங்குதல் முதலிய செயல்பாடுகளை அதிகம் சிந்திக்காமல் வழக்கமாகச் செய்கிறோம். உணவு உண்ணும் போது அல்லது பள்ளியில் அமரும்போது, எப்படி உண்ணுவது எப்படி உட்காருவது என்று தினந்தோறும் கேட்பதில்லை உங்களுக்கு இவை வழக்கமாகியுள்ளது. நமது அன்றாட செயல்பாடுகள் தடையின்றி நடைபெற சமூக நடைமுறை துணைபுரிகிறது.

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் தகுந்த சொற்களால் நிரப்புக.**

1. கலாச்சாரம் என்றால் ____________ என்று பொருள்
2. சமூக நடைமுறை என்றால் நாம் ____________ மீண்டும் மீண்டும் ஈடுபடும் செயல்பாடுகளாகும்.
3. இந்தியாவில் ____________ யில் ஒற்றுமை காணலாம்.

**II. கீழ்காணும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்க**

4. கலாச்சாரம் என்றால் என்ன ?
5. உங்களைச் சுற்றியுள்ள சூழலில் காணப்படும் பலதரப்பட்ட கலாச்சாரங்களுக்கான சான்றுகளைத் தருக.
6. பழக்கவழக்கங்கள் என்றால் என்ன ?
7. பழக்க வழக்கங்களுக்கான சான்றுகளைத் தருக.

**III. கீழ்காணும் வினாக்களுக்கு நான்கைந்து வாக்கியங்களில் விடையளிக்க**

8. சமூக நடைமுறை என்றால் என்ன? சான்று தருக.
9. கலாச்சார வேற்றுமையை விவரிக்க.
10. கலாச்சாரத்தின் பண்புகளை விவரிக்க.

**IV. செயல்பாடு**

11. உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவை பற்றிய தகவல்களை பெரியவர்களிடமிருந்து சேகரிக்கவும். திருவிழா முறைகளைப் பற்றிய பட்டியல் தயாரிக்கவும்

* * * * *

@TBS NOT TO BE REPUBLISHED

# புவியியல்

அத்தியாயம் 11

K6G5J3

# புவி-நாம் வாழும் கோள்

**இந்த அத்தியாயத்தை படித்தபிறகு நீங்கள் கீழ்காணும் அலகுகளை அறிந்துகொள்வீர்கள்**

- புவியின் பல்வேறு பெயர்களின் அறிமுகம்.
- பூமியின் அளவு மற்றும் புவியிலுள்ள நீரின் பங்கீடு.
- கண்டங்கள் மற்றும் பெருங்கடல்களைக் குறிப்பிடுதல்.
- அட்சரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகளின் அறிமுகம், இவற்றின் மூலம், நேரம் திட்ட நேரம், உள்ளூர் நேரம், சர்வதேச தேதிக் கோடு பற்றியறிதல்.
- உலக வரைபடத்தில் பெருங்கடல்கள் மற்றும் கண்டங்களைக் குறிப்பிடுதல்.

@KTBS NOT TO BE REPUBLISHED

**நாம் எங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

நாம் புவியில் வாழ்கிறோம். இது சூரியனிடமிருந்து மூன்றாவது கோளாகும். சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களில் புவி மட்டுமே உயிரினங்கள் உள்ள கோளாகும். பூமி அனைத்து வகை உயிரினங்களின் வசிப்பிடமாகவும் தாவரங்கள், விலங்குகள், மற்றும் மனிதர்கள் இங்குள்ளன. ஏனெனில் சூரியனிலிருந்து பொருத்தமான தூரம், வெப்பநிலை, வாயுக்கள், சுற்றுச்சூழல் மற்றும் நீர்சுழற்சி போன்றவையுள்ளன. புவி ‘வாழும் கோள்’ நீர்சூழ்ந்த கோள், நீலக்கோள் போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.

**புவியின் அளவு, நிலம் மற்றும் நீர் நிலைகளின் பங்கீடு**

சூரிய குடும்பத்தில் புவி ஐந்தாவது பெரிய கோளாகும் புவியின் விட்டம் சந்திரனின் விட்டத்தை விட நான்கு மடங்கு பெரியது மற்றும் சூரியனைவிட 107 மடங்கு சிறியது.

புவியின் மொத்த புவியியல் பரப்பளவு 510 மில்லியன் சதுர கிலோ மீட்டர்களாகும். இதில் 361 மில்லியன் சதுர மீட்டர்களாகும் (70.78%) பரப்பு நீரால் சூழப்பட்டுள்ளது மீதமுள்ள 149 மில்லியன் சதுர கி.மீ. பரப்பு (29.22%) நிலத்தால் சூழப்பட்டுள்ளது. எனவே புவியில் நீர் மற்றும் நிலப்பரப்புகள் சமமாக இல்லை நிலம் மற்றும் நீர்நிலைகளுக்கு இடையிலான விகிதம் 1:2.43 ஆகும்.



புவி

புவியின் வடிவம் ''பூமி வடிவம்'' அல்லது ''ஜியோட்'' என்றழைக்கப்படுகிறது. ஏனெனில் துருவங்களில் புவி தட்டையாகவும் பூமத்திய ரேகையில் நிலநடுக்கோடு பருமனாகவும் உள்ளது. புவியின் பூமத்தியரேகை விட்டம் 12,756 கி.மீ. மற்றும் துருவ விட்டம் 12,714 கி.மீ. ஆகும். அதே போன்று பூமத்திய ரேகையின் சுற்றளவு 40,076 கிமீ மற்றும் துருவ ரேகையின் சுற்றளவு 40,008 கி.மீ. ஆக உள்ளது. 42 கி.மீ. விட்டம் வித்தியாசம் புவியை ஜியோட் என்று கருதுவதற்கான சான்றாகும்.

©KTBS
NOT TO BE REPUBLISHED

புவியின் நிலப்பகுதிகள் கண்டங்கள் என்று அழைக்கப் படுகின்றன. ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா. தென் அமெரிக்கா, ஐரோப்பா, அண்டார்டிக்கா மற்றும் ஆஸ்திரேலியா என ஏழு கண்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கண்டங்கள் பெரிய அளவிலான நிலப்பரப்புகளாக்கும், ஆசியா உலகின் மிகப் பெரிய கண்டமாகும். ஆஸ்திரேலியா மிகச் சிறிய கண்டமாகும் புவியின் மீதுள்ள பெரிய நீர்நிலைகளை பெருங்கடல்கள் என்றழைக்கிறார்கள். நான்கு பெரிய பெருங்கடல்கள் உள்ளன அவை பசிபிக் பெருங்கடல் அட்லாண்டிக் பெருங்கடல் இந்தியப் பெருங்கடல் மற்றும் ஆர்க்டிக் பெருங்கடலாகும். பசிபிக் மிகப்பெரிய மற்றும் ஆழமான பெருங்கடலாகும் ஆர்க்டிக் மிகச்சிறிய மற்றும் ஆழமற்ற கடலாகும்.

நிலம் மற்றும் நீர்நிலைகள் வடக்கு மற்றும் தெற்கு அரைக்கோளங்களுக்கிடையில் சமமாக பிரிக்கப்படவில்லை வடக்கு அரைக்கோளத்தில் 60% நிலப்பகுதி மற்றும் 40% நீர்ப்பரப்பு உள்ளது எனவே இது ‘நீல அரைக்கோளம்’ என்றழைக்கப்படுகிறது. இதற்கு எதிரான தெற்கு அரைக்கோளத்தில் 81% நீர் மற்றும் 19% நிலப்பரப் புள்ளது எனவே இது ‘நீர் அரைக்கோளம்’ என்றழைக்கப்படுகிறது.

**அட்ச ரேகைகள் மற்றும் தீர்க்க ரேகைகள்**

**ஒரு இடத்தின் சூழல் திசை மற்றும் இடைவெளியை எப்படி புரிந்து கொள்வோம்?**

புவி உருண்டை வடிவமானது, எனவே இடங்கள், திசைகள் மற்றும் இரண்டு இடங்களுக்கு இடையிலான தூரத்தை கணக்கிடுவது கடினமாகும். புவியில் மீது ஒரு இடத்தில் குறிப்பிட்ட நிலை, சூழல், இடைவெளி மற்றும் திசைகளை அறிய கோடுகளின் வலையமைப்பு, வரைபடம் அல்லது கோளத்தின் மீது கற்பனைக் கோடுகள் வரையப்பட்டுள்ளன. இவை அட்சரேகைகள் மற்றும் தீர்க்கரேகைகள் என்றழைப்பர். இக்கோடுகள் கிழக்கு மேற்காகவும், வடக்கு தெற்காகவும் வரையப்பட்டுள்ளன. இவை புவியியல் ஆய்வுத் தொலைவுகள் (Geographic Co-ordinates) அல்லது புவியியல் வலையமைப்பு என்றழைக்கப்படுகிறது.

**அட்ச ரேகைகள் :** அச்சினை அடிப்படையாகக் கொண்டு பூமி உருண்டையின் மீது அட்சரேகைகள் வரையப்பட்டுள்ளன வடக்கு மற்றும் தெற்கு துருவங்களின் நடுவில் புவியச்சிற்குச் செங்குத்தாக பூமத்திய ரேகை வரையப்பட்டுள்ளது. பூமத்திய ரேகைக்கு இணையான கோளத்தின் மீது கிழக்கிலிருந்து மேற்காக வரையப்பட்ட கற்பனைக் கோடுகளை “அட்ச ரேகைகள்” (Latitudes) என்றழைப்பர். பூமத்திய ரேகை ($0^o$) மிகப் பெரிய வட்டமாகும். அதிலிருந்து வடக்கு மற்றும் தெற்கிலிருக்கும் அச்சுகளின் வட்டங்கள் சிறியதாகும். பூமத்திய ரேகையிலிருந்து வட கோளத்தில் $90^o$ மற்றும் தென்கோளத்தில் $90^o$ அட்ச ரேகைகள் வரையப்பட்டுள்ளன. புவியின் மீது அட்சரேகைகளுக்கு இடையிலான தூரம் 110.4 கிமீ ஆகும்.

NOT TO BE REPUBLISHED
@KTBS




உலக இயற்கை வரைப்படம்

**முக்கிய அட்ச ரேகைகள்**




அட்ச ரேகைகள் மற்றும் கொடுகளின் வலையமைப்பு

1. $0^0$ அட்ச ரேகை - பூமத்திய ரேகை அல்லது பெரிய வட்டம்
2. $23^0.30'$ வட அட்ச ரேகை-கடக ரேகை
3. $23^0.30'$ தென் அட்ச ரேகை - மகர ரேகை
4. $66^0.30'$ வட அட்சரேகை - (ஆர்க்டிக் வட்டம்)
5. $66^0.30'$ தென் அட்ச ரேகை - (அண்டார்டிக் வட்டம். )
6. $90^0$ வடக்கு அட்ச ரேகை - வடதுருவம்.
7. $90^0$ தெற்கு அட்ச ரேகை - தென்துருவம்.

**தீர்க்க ரேகைகள் :** பூமத்திய ரேகையை சமமாக வெட்டி வடக்கு மற்றும் தெற்கு துருவங்களை இணைக்கும் கோடு கள் தீர்க்க ரேகைகள் ஆகும். தீர்க்க ரேகைகளில் முதன்மை தீர்க்க ரேகை (கிரீன்விச் தீர்க்க ரேகை) கிழக்கு மற்றும் மேற்கு ஒரே கோண இடைவெளியில் உள்ள பகுதிகளை சந்திக்கும் மற்றும் பூமத்திய ரேகையின் மீது டிகிரிகளில் அளவிடப்படும் கற்பனைக் கோடுகள் ஆகும்.

கோளத்தின் மீது தீர்க்க ரேகைகள் அரை வட்டங்களின் பிரிவுகளாகக் காணப்படுகின்றன. இவை வடக்கு மற்றும் தெற்கு துருவங்களிலிருந்து பூமத்திய ரேகை வழியாகச் செல்கின்றன. அனைத்து தீர்க்க ரேகைகளின் நீளமும் ஒன்றாக இருக்கும் தீர்க்க ரேகைகள் நண்பகல் அல்லது மெரிடியன் கோடுகள் என்றழைக்கப்படும். (மெரி-நடு டியன்-நாள்) ஏனென்றால் ஒரு ரேகையின்நீளம்முழுவதும்உள்ளஅனைத்துஇடங்களிலும்ஒரே நேரத்தில் நண்பகலாக இருக்கும். நாம் வடதுருவத்தை நோக்கிச்

@KTBS
NOT TO BE REPUBLISHED

செல்கையில் சில பகுதிகளில் கோடை மற்றும் குளிர் காலங்களுக் கேற்ப நேர மாற்றமிருக்கும் (Daylight Saving Time)

இங்கிலாந்தில் கிரீன்விச் வழியாகச் செல்லும் தீர்க்கரேகை முதன்மை தீர்க்க ரேகையாக கருதப்படுகிறது. இது $0^{o}$ என்று குறிப்பிடப்படுகிறது. கிரீன்விச் தீர்க்கரேகை கிழக்கிலும் மேற்கிலும் $180^{o}$ தீர்க்க ரேகைகள் உள்ளன. எனவே மொத்தம் $360^{o}$ தீர்க்க ரேகைகள் உள்ளன. முதன்மை தீர்க்க ரேகையிலிருந்து $180^{o}$ கிழக்கு தீர்க்க ரேகை வரையிலான மண்டலத்தை கிழக்கு அரைக்கோளம் என்றழைப்பர் அதற்கு எதிர்ப் பகுதியை தெற்கு அரைக்கோளம் என்பர்.

பூமத்திய ரேகையிலிருந்து துருவத்தை நோக்கி செல்லும் இரண்டு தீர்க்கரேகைகளின் இடைவெளி படிப்படியாகக் குறைகிறது. இதற்குக் காரணம், அனைத்து தீர்க்க ரேகைகளும் இரு துருவங்களிலும் சந்திக்கின்றன. பூமத்திய ரேகையின் மீது இரண்டு தீர்க்க ரேகைகளுக்கு இடையேயான தூரம் சுமார் 111 கிமீ ஆகும்.

**தீர்க்க ரேகை மற்றும் நேரம் :** தீர்க்க ரேகை மற்றும் நேரத்திற்கு இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. பூமி அதன் அச்சின் மீது சூழல்கிறது மற்றும் ஒரு சுற்று முடிக்க 24 மணி நேரம் ஆகிறது. அதாவது $360^{o}$ தீர்க்க ரேகைகளைச் சுற்றி முடிக்க 24 மணி நேரம் தேவையாகும். ஒரு தீர்க்க ரேகையிலிருந்து மற்றொரு தீர்க்க ரேகைக்கான நேர வேறுபாடு 4 நிமிடங்களாகும். ஒவ்வொரு 15 தீர்க்க ரேகைகளுக்கும் ஒரு மணி நேரம் அல்லது 60 நிமிடங்கள் ஆகும். (364 X 4 = 1440 / 60 = 24). மணி நேரம் நாம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகரும் போது நேரம் அதிகரிக்கிறது (EGA-East Gain Add) மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும் போது நேரம் குறைகிறது. (WLS-West lose subtracts).

**உள்ளூர் நேரம் :** ஒரு இடத்தில் உள்ளூர் நேரம் அந்த இடத்தின் தீர்க்கரேகை அல்லது சூரியனின் நிலைக்கேற்ப கூறப்படும் உள்ளூர் நேரம் அவ்விடத்தின் உள்ளூர் தீர்க்கரேகை, குறிப்பாக உள்ளூர் நண்பகல் 12:00 மணியாகயிருக்கும். அவ்விடத்தின் மீது சூரியக்கதிர் நேரடியாக விழுவதால் மதியம் 12 மணியாகிறது அந்த நண்பகல் ரேகை கடந்து செல்லும் அனைத்து இடங்களிலும் ஒரே

@KTBS NOT TO BE REPUBLISHED

உள்ளூர் நேரமாக இருக்கும். ஒவ்வொரு தீர்க்க ரேகையும் தனது உள்ளூர் நேரத்தை பெற்றிருக்கும்.

**திட்ட நேரம் :** உள்ளூர் நேரம் இடத்திற்கிடம் மாறுபடும் ஒவ்வொரு இடமும் அதன் உள்ளூர் நேரத்தை பின்பற்றுவதால் நிறைய குழப்பங்கள் உண்டாகின்றன. இக்குழப்பங்களைச் சரிசெய்வதற்கு பல நாடுகள் நாடு முழுவதும் சீரான (ஒரே மாதிரியான) நேரத்தை பின்பற்றுகின்றன. அத்தகைய சீரான நேரம் அந்நாட்டின் மையத்தில் செல்லும் தீர்க்க ரேகை நேரத்தைப் பின்பற்றுகிறது, அல்லது அத்தீர்க்க ரேகையின் மீது உள்ள முக்கிய நகரத்தின் நேரத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும். இந்த நேரத்தை நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பின்பற்றுவதால் அதனை திட்ட நேரம் (Standard Time) என்றழைக்கிறார்கள்.

இந்தியாவில் $83^0.30'$ கிழக்கு தீர்க்கரேகை நாட்டின் மத்திய தீர்க்க ரேகையாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது உத்தரப்பிரதேச மாநிலத்தின் பிரயாக் நகரத்தின் வழியாக செல்கிறது. இந்தியாவின் நேரம் இத்தீர்க்க ரேகையின் அடிப்படையிலுள்ளதால் இதனை இந்தியாவின் திட்ட நேரம் (Indian Standard Time) (IST) என்றழைப்பர். இது கிரீன்விச் நேரத்தை விட 5 மணி 30 நிமிடங்கள் முன்னால் உள்ளது.

**நேர மண்டலங்கள் :** உலகின் சில நாடுகளில் 45ற்கும் மேற்பட்ட தீர்க்க ரேகைகள் கடந்து செல்வதால் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு 3 லிருந்து 4 மணி நேரம் வரை மாறுபடும். இங்கு ஒரே திட்ட நேரத்தை பின்பற்றுவது சாத்தியமில்லை. எனவே நாடு முழுவதும் நேர மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது மற்றும் முழு கோளமும் 24 மணி நேர மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நேரம் மண்டலத்திற்கும் ஒரு மணிநேரம் வேறுபாடு இருக்கும்.

பரந்த நாடுகளில் பல தீர்க்க ரேகைகள் செல்வதால் அதிக நேர மண்டலங்கள் உள்ளன. எடுத்துக்காட்டாக ரஷ்யாவில் 11 நேர மண்டலங்கள் அமெரிக்காவிலும். கனடாவிலும் 5 நேர மண்டலங்கள் மற்றும் ஆஸ்திரேலியாவில் 3 நேர மண்டலங்களும் உள்ளன.

@KTBS NOT TO BE REPUBLISHED

**சர்வதேச தேதிக்கோடு (International Date Line (IDL)) :** உலகில் நேரத்தின் பிரச்சனை முதலில் திட்ட நேரத்தினாலும், பின்பு நேரம் மண்டலத்தினாலும் தீர்க்கப்பட்டது. ஆனால் உலகம் முழுவதும் பயணிக்கும் பயணிகளுக்கு வாரத்தின் சரியான தேதி மற்றும் நாளை சீர்செய்யும் புதிய சிக்கல் உருவாகிறது. எனவே கிரீன்விச் தீர்க்க ரேகைக்கு எதிரிலுள்ள $180^{o}$ தீர்க்க ரேகையில் பயணம் செய்பவர் தமது வசதிக்காக நாள் மற்றும் தேதியை சீர் செய்து கொள்ள வேண்டும். இது பசிபிக் பெருங்கடல் வழியாக செல்லும் $180^{o}$ தீர்க்க ரேகை மீது இருந்தாலும் சில நிலப்பகுதிகளைத் தவிர்க்க ஆங்காங்கே குறுக்கு நெடுக்காக வரையப்பட்டுள்ளது. இதனை சர்வதேச தேதிக்கோடு என்று அழைப்பர்.

கப்பலிலும் விமானத்திலும் பயணம் செய்பவர்கள் கோடுகளைக் கடக்கும்போது தேதியையும் நாளையும் மாற்றிக்கொள்ள வேண்டும். எந்த கப்பலும் இக்கோட்டை மேற்கிலிருந்துகிழக்கு நோக்கிகடக்கும்போது.(ஆசியாவிலிருந்து வட அமெரிக்கா) ஒரு நாளை இரண்டு முறை பெறுகிறது அதேபோல் இக்கோட்டை கிழக்கிலிருந்து மேற்காக கடந்து 0செல்லும்போது (வட அமெரிக்காவிலிருந்து ஆசியா) ஒரு நாளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

@KTBS TO BE REPUBLISHED




**உலகின் நேரமண்டலங்கள் மற்றும் சர்வதேச தேதிக் கோடு**

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களை பொருத்தமான விடைகளால் பூர்த்தி செய்க.**

1. புவியின் மொத்த நிலப்பரப்பு __________ ச.கி.மீ .
2. புவி __________ வடிவில் உள்ளது
3. புவியின் பூமத்திய ரேகை மற்றும் துருவப் பகுதிகளின் விட்டம் __________ மற்றும் __________ கி.மீ.
4. $23^{0.}30'$ வடக்கு அட்சரேகையை __________ என்றழைப்பர்.
5. இந்தியத் திட்ட நேரம் __________ தீர்க்க ரேகையின் அடிப்படையில் உள்ளது

**II. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க**

6. புவி 'வாழும் கோள்' என்றழைக்கப்படுகிறது ஏன்?
7. வடக்கு அரைகோளம் 'நிலக்கோளம்' என்றும் தெற்கு அரைக்கோளம் 'நீர் அரைக்கோளம்' என்று ஏன் அழைக்கப்படுகிறது?
8. அட்சரேகை மற்றும் தீர்க்கரேகைகள் என்றால் என்ன?
9. உள்ளூர் நேரம் மற்றும் திட்ட நேரங்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை எழுதுக
10. சர்வதேசத் தேதிக் கோடு என்றால் என்ன?

**III. கீழ்க்காண்பவற்றின் பொருள் எழுதுக**

11. சிறப்புக் கோள்
12. பூமியின் அளவு
13. பூமி வடிவம்
14. கண்டங்கள்
15. முதன்மை தீர்க்கரேகை
16. இந்தியத் திட்ட நேரம்

© KTBS NOT TO BE REPUBLISHED

## IV. நினைவில் கொள்ள வேண்டியவை

1. வாழும் கோள்
2. பூமத்திய ரேகை
3. வடக்கு துருவம் (ஆர்க்டிக் வட்டம்)
4. அண்டார்ட்டிக் வட்டம்
5. நேர மண்டலம்
6. சர்வதேச தேதிக் கோடு

## V. செயல்பாடு

1. தீர்க்க ரேகைகளின் அடிப்படையில் கிழக்கு அரைக்கோள நாடுகள் மற்றும் மேற்கு அரைக்கோள நாடுகளைப் பட்டியலிடுக.

* * * * *

@KTBS
NOT TO BE REPUBLISHED

அத்தியாயம் 12

# பாறைக்கோளம்

Y1I6Y1

***இந்த அத்தியாயத்தை படித்தபிறகு நீங்கள் கீழ்காணும் அலகுகளை அறிந்து கொள்வீர்கள்***

- *கற்கோளத்தின் பொருள் மற்றும் அதன் முக்கியத்துவம்*
- *பூமியின் உட்புற அமைப்பு மற்றும் அதன் கூட்டமைப்பு*
- *பாறைகளின் அமைப்பின் அறிமுகம்*
- *புவியின் உட்புற விசைகளான எரிமலைகள், பூகம்பங்கள் சுனாமி முதலியன மற்றும் பூமியின் வாழ்க்கையில் அவற்றின் விளைவுகள்*
- *புவியின் வெளிப்புற ஆற்றலான வெப்பநிலை காற்று மழை மற்றும் ஆறுகள்*
- *நிலத்தடி நீரின் பொருள் மற்றும் அதன் முக்கியத்துவம்*

NOT TO BE REPUBLISHED @KTBS

## பொருள் மற்றும் முக்கியத்துவம்

புவியின் மேற்புற திண்ம அடுக்கு 'கற்கோளம்' என்று அழைக்கப்படுகின்றது. இந்த அடுக்கு கண்டங்களில் அடர்த்தியாகவும் கடல்களின் அடிப்பரப்பில் மெல்லியதாகவும் இருக்கும். கற்கோளம் பாறைகள், கனிமங்கள் மற்றும் மண்களால் ஆனது. வளிமண்டலம் மற்றும் நீர் மண்டலங்களின் துணையால் இந்த அடுக்கில் உயிரினங்கள் உள்ளன. கண்டங்கள் கற்கோளத்தின் பகுதிகளாகும். இது மலைகள், பீடபூமிகள், சமவெளிகள் போன்ற பல்வேறு நிலப்பரப்புகளைக் கொண்டுள்ளது.

## புவியின் உட்புற அமைப்பு மற்றும் கூட்டமைப்பு

### புவிக்குள் என்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

நமது கோளான புவி 4.6 மில்லியன் ஆண்டுகள் பழமையானது. மேலும் தொடர்ந்து மாற்றத்திற்கு உட்பட்டதாக உள்ளது. இம்மாற்றத்தைப் புரிந்து கொள்ளும் நாட்டத்திலும் புவியின் உட்புறத்தைப் பற்றி மேலும் அறிந்து கொள்ளவும் மனிதன் ஆவலுடன் இருக்கிறான். புவியின் உட்புறம் என்ன இருக்கிறது

என்பது இன்றளவும் மனிதனுக்கு ஒரு மர்மமாக உள்ளது. பல்லாண்டு காலஆய்வு மற்றும் ஆராய்ச்சியின் விளைவாக மனித குலம் பூமிக்குள் 10 முதல் 12 கிலோ மீட்டர் வரையிலான பொருட்களை பற்றிய தகவல்களைப் பெற இயலும். மேலும் ஆழத்திற்குள் வெப்பநிலை அதிகரிப்பதால் (ஒவ்வொரு 32 மீட்டருக்கும் $1^{o}c$) ஆழத்தைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்வது கடினமாகும்.

புவியின் உட்புறத்தைப் பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்வதற்காக மனிதன் மறைமுகமான ஆதாரங்களைச் சார்ந்திருக்கிறான். அவைகளாவன நில அதிர்வு அலைகள். எரிமலைப் பொருட்கள் முதலியன. புவியின் உட்புறம் பல்வேறு பொருட்களைப் பல்வேறு வடிவங்களில் உள்ளடங்கியுள்ளது. பொருள்களின் அடர்த்தி வேதியியல் கூட்டமைப்பு மற்றும் பொருள்களின் இயற்பியல் நிலைகளடிப் படையில் புவியின் உட்புறம் மூன்று முக்கிய அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது அவையாவன மேலடுக்கு, கவசம் மற்றும் மைக்கோளம்.



பூமியின் உட்பாகம்

**மேலடுக்கு (Crust) :** இது புவியின் வெளிப்புற அடுக்காகும். இது அதிகமாக சிலிக்கா அலுமினியம் மற்றும் மெக்னீசியம் ஆகியவற்றால் ஆனது. இது பொதுவாக 'கற்கோளம்' என்றழைக்கப்படுகிறது. இந்த மண்டலம் சுமார் 60 கிலோ மீட்டர் ஆழம் வரை நீண்டுள்ளது. இதன் மேலடுக்கு மிகவும் இலகுவான பொருள்களால் ஆனது. இந்த அடுக்கில் சிலிக்கா மற்றும் அலுமினியம் அதிகமாகயிருப்பதால் 'சியால்' (Sial) என்றும் அழைக்கப்படுகிறது. இது கண்டங்களின் மேலடுக்கு என்றும்

@KTBS
NOT TO BE REPUBLISHED

அழைக்கப்படுகிறது. இதன் கீழ்ப்புறம் சிலிக்கா மற்றும் மெக்னீசியம் ஆகியவற்றால் ஆனது. மிகவும் அடர்த்தியாக உள்ளது. இதனை 'சைமா' (Sima) என்றழைப்பர். இதனை சில நேரங்களில் ''கடல் மண்டலத்தின் மேலடுக்கு'' என்று அழைப்பார்கள்.

**கவசம் (Mantile) :** இது புவியின் உட்புறத்தில் இரண்டாவது மற்றும் மையப்பகுதி அடுக்கு. இது (கற்குமம்பு) மேற்புறத்திலிருந்து சுமார் 2900 கி.மீ. ஆழம் நீண்டுள்ளது. இதன் மேலடுக்கில் பொருட்கள் பகுதி உருகிய நிலையில் உள்ளன. எனவே இது 'மென்பாறைக் (மியாக்மா) கோளம் எனப்படுகிறது. கவச (மியாண்டல்) மண்டலம் அதிக அடர்த்தி மற்றும் கடினமான பாறைப் பொருட்களால் ஆனது, முக்கியமாக தாதுக்கள் நிறைந்திருக்கும். அவை இரும்பு மற்றும் மெக்னீசியம் ஆகும். மியாண்டலில் (கவசம்) இரு பகுதிகள் உள்ளது. (a) கவசத்தின் மேலடுக்கு அல்லது 'அஸ்தெனாஸ்பியர்' (Asthenosphere) என்றழைப்பர். இது பகுதியளவு உருகிய நிலையிலிருக்கும் (b) கவசத்தின் கீழ் அடுக்கு அல்லது மெஸாஸ்பியர் (Mesosphere) என்றழைக்கப்படும். இது திண்ம நிலையிலிருக்கும்.

மேல் அடுக்கு மற்றும் கவசம் சந்திக்கும் பகுதியை ''மொஹோரேவிசிக்'' அல்லது மொஹோ மண்டலம் என்று அழைப்பர், மேலும் மையக்கோளத்தைப் பிரிக்கும் எல்லையை'' குடின்பர்க் இடை நிறுந்த மண்டலம் என்பர். இங்கிருந்து மேற்புறம் மற்றும் கீழ்ப்புறத்தில் பாறைகள் பல்வேறு வேதியியல் கலவைகளைக் கொண்டுள்ளது.

**மையக்கோளம் :** இது புவியின் உள்ளார்ந்த பகுதியாகும். இது புவியிலிருந்து 6,371 கி.மீ ஆழம்வரை பரந்து விரிந்துள்ளது. மையக்கோளம் நிக்கல் (Ni) மற்றும் இரும்பு (Fe) ஆகியவற்றால் ஆனது. எனவே மையப்பகுதி 'நிஃபே' (NiFe) என்றும் அழைக்கப்படுகிறது. மையப்பகுதியும் இரண்டு துணை மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை. *(a) வெளிப்புற மையம் இது அரை திரவ நிலையில் உள்ளது (b) உட்புற மையம் இது திண்ம வடிவிலுள்ளது.*

NOT TO BE REPUBLISHED @KTBS

**இதை அறிந்து கொள்ளுங்கள் :**

**உலகில் மிக ஆழமான சில சுரங்கங்கள்**

1. *கோலா மிக ஆழமான துளை : ரஷ்யாவின் கோலா தீபகற்பத்தின் முரமான்ஸ்க் அருகிலுள்ள அறிவியல் ஆய்வு ஆழ குறைபாடுதிட்டத்தின் பாகமான இத்துளை தோண்டப்பட்டது (1989). இது பூமியிஙன் மீது செயற்கையான தோண்டப்பட்ட ஆழமான பகுதியாகும் - 12,262 மீ.*
2. *டௌ டோன சுரங்கம் : தென்னாப்பிரிக்காவிலுள்ள தங்கச் சுரங்கம் தற்பொழுது உலகின் மிக ஆழமான சுரங்கமாகும் (3.92 கி.மீ.)*
3. *இந்தியாவின் கருநாடகத்திலுள்ள கே.ஜி.எஃபின் சாம்பியன் ரீஃப் தங்கச் சுரங்கம் சுமார் 3.2 கி.மீ ஆழமானது.*

NOT TO BE REPUBLISHED @KTBS

## பாறைகள் (Rocks)

பாறைகள் என்பது பல்வேறு கனிமங்களாலான கடினமான பொருளாகும். இவை இயல்பாகவே திண்ம வடிவில் கனிமப் பொருட்களைக் கொண்டிருக்கின்றன. எனவே பாறைகளை கனிமங்களின் கலவை என்றழைப்பர். இவை வெவ்வேறு இயற்கை செயல் முறைகளால் உருவாகியிருப்பதால், மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன 1) தீப்பாறை, 2) படிவுப் பாறைகள் மற்றும் 3) உருமாற்றப் பாறைகள்.

**1. தீப் பாறைகள் (Igneous Rocks) :** தீப் பாறைகள் ஆங்கிலத்தில் ''இக்னியஸ் ராக்ஸ்'' என்றழைக்கப்படும். இக்னீயஸ் என்றால் நெருப்பு என்று பொருள். இது லத்தீன் மொழியின் 'இக்னிஸ்' அல்லது வடமொழியில் 'அக்னி' என்ற சொற்களிலிருந்து வந்துள்ளது. பூமியன் உட்பகுதிகளிலிருந்து குழம்பு வெளியே பரவி பூமியின் மேற்புரத்தில் உறைந்து பாறைகள் உருவாகின்றன. இவை முதன்முதலில் உருவானதால் இவற்றை முதன்மை பாறைகள் என்றழைப்பார். இரண்டு வகையான தீப்பாறைகள் உள்ளன. அவை பின்வருமாறு.

**தீப்பாறைகள்**

- ஊடுருவிப் பாறைகள்
  - அடநிலவெப்பப் பாறைகள் (கிரோனைட்) (பளிங்கு)
  - டைக் பாறைகள் டோலோரைட் (பகுதிபளிங்கு)
- வெளிப்புறதீப் பாறைகள் லாவா (அ) எரிமலைப் பாறைகள் எ.டு. : பசால்ட்

**ஊடுருவுப் பாறைகள் :** பாறைக் குழம்பு அல்லது மாக்மா பூமியின் மேற்பரப்பை அடையும் முன் உட்புறத்தில் உறைந்து திண்மமாகி, மெதுவாக ஊடுருவி தீப் பாறைகள் உருவாகின்றன. இப்பாறைகள் தடிமனான படிகங்களாகவும் புவியின் உட்புறத்தில் மிகவும், ஆழத்திலிருக்கும். எ.கா: கிரானைட் டயொரைட், கியாப்ரொ முதலியன.



பாறைச் சுழற்சி

@KTBS NOT TO BE REPUBLISHED

**வெளிப்புறதீப் பாறைகள் :** கற் குழம்பு (மாக்மா) வெளிப்பட்டு படிப்படியாக உறைந்து புவியின் மேற்பரப்பில் பிதுக்குப் பாறைகள் உருவாகின்றன. இப்பாறைகள், பொதுவாக சிறிய படிகங்கள் மற்றும் கண்ணாடி போன்று மென்மையானவை. ஏனெனில் பாறை குழம்பு (லாவா) புவியின் மீது விரைவாக குளிர்ந்து உறைந்து பாறைகள் ஆகின்றன. எ.டு: பசால்ட், அன்டெஸைட்.

பாறைப் பொருட்கள் புவியின் உட்புறத்தில் உருகி திரவமாக அல்லது அரை திரவ வடிவில் இருக்கும். இதனை கற்குழம்பு (மாக்மா) என்றழைப்பர். இது பூமியின் மேற்புறத்திற்கு வரும்போது பாறைக் குழம்பு (லாவா) என்று அழைக்கப்படுகிறது.

**2. படிவு பாறைகள்:** இது லத்தீன் மொழிச் சொல்லான ''செடிமென்டம்'' என்பதிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'படிதல்' என்பது இதன் பொருளாகும். படிவுப் பாறைகள், நீர், காற்று மற்றும் பனி முதலிய பொருள்களால் உருவாகின்றன இவை தீப்பாறைகளைத் துண்டாக்கி அரிப்பு ஏற்படுத்தி உடைந்த கற்துகள்களை சில இடங்களில் படிகமாக்குகின்றன. இவை அடுக்கு வடிவில் உருவாகுவதால், படிவுப் பாறைகள் அடுக்குப் பாறைகளென்றும் அழைக்கப்படுகிறது. படிவப் பாறைகள் எரிமலைப்பாறைக்குப் பிறகு உருவாகுவதால் இரண்டாம் நிலை பாறைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை கடல், பெருங்கடல் போன்ற நீர்நிலைகளில் படிந்திருப்பதால் இவற்றை ''நீர்ப் பாறைகள்'' என்றும் அழைப்பார்கள். இவற்றின் கட்டுமானத்தில் நீர் முக்கிய பங்கு வகிக்கிறது. படிவுப் பாறைகள் இரண்டு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. i) இயற்பியல் சார்ந்த செயல் முறைகளான படிவுப் பாறைகள் ii) வேதியல் விளைவின் மூலம் உருவான படிவுப் பாறைகள். iii) உயிரிகளின் செயலால் உருவான பாறைகள்.

NOT TO BE REPUBLISHED @KTBS




**i) இயற்பியல் செயல்முறையிலான பாறைகள் :** இவை முன்னரே உள்ள பாறைகளின் சிதைவு மற்றும் துண்டுகளால் கட்டமைக்கப்பட்ட பாறைகளாகும். எ.கா: மணற்கல், (மணல்நிறை பாறை) மற்றும் களிப்பாறை (களிநிறைப் பாறை)

**ii) வேதியியல் வினையால் உருவான படிவுப் பாறைகள் :** வேதியியல் படிவுகள் பொதுவாக கரைசலில் உள்ள உப்புகளைக் கொண்ட நீரின் ஆவியாதல் செயல்முறையால் உருவாகின்றன. எ.கா: பாறை உப்பு, ஜிப்சம் போன்றவை.

**iii) கரிமப் படிவுப் பாறைகள்:** கரிமப் படிவுகள் என்பது கடல் உயிரினங்களின் ஓடுகள், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் எஞ்சியுள்ளவைகள் மண்ணில் புதைந்து குவிவதால் கரிமப் படிவுப் பாறைகள் உருவாகின்றன. எ.கா: சுண்ணாம்பு (சுண்ணாம்பு நிறை பாறைகள்) மற்றும் நிலக்கரி (கரிமச்சத்து பாறைகள்).

**3. உருமாற்றப் பாறைகள்:** எரிமலைப் மற்றும் படிவுப் பாறைகள் மிகுந்த வெப்பம் மற்றும் அழுத்தத்தின் விளைவாக மாற்றமடைந்து உருமாற்றப் பாறைகள் உருவாகின்றன.

எ.கா:

கிரானைட் - நீஸ் மணற் பாறை - படிகக்கல்

பசால்ட் - ஷிஸ்ட் நிலக்கரி - கிராஃபைட்

சுண்ணாம்பு - பளிங்கு சிலை கிராஃபைட் - வைரம்.

உருமாற்றப் பாறைகள் மிகவும் கடினமானவை. இவை விலைமதிப்பற்ற கனிமங்கள் மற்றும் மதிப்புமிக்க கற்களை, படிகங்களாகக் கொண்டுள்ளன. எ.கா: வைரம், ருபி (சிவப்புக்கல்) எமரல்டு (மரகதம்)

@KTBS NOT TO BE REPUBLISHED

### புவியின் மேலடுக்கின் விசைகள்

புவியில் இரண்டு வகையான விசைகள் உள்ளன. இவ்விசைகள் புவியின் மேற்பரப்பின் மீது தாக்குதலை ஏற்படுத்துகின்றன. உட்புற விசைகள் (Internal or Indogenic force) மற்றும் வெளிப்புற விசை (External or Exogenic force) களாகும்.

**உட்புற விசைகள் :** இவை புவியின் உட்புற விசைகள். இவற்றால் புவியின் மேற்புற அமைப்புகள் மாற்றங்களை அடைகின்றன எ.கா: எரிமலைகள் மற்றும் நில அதிர்வுகள்.

## எரிமலைகள் (Volcanoes) :



எரிமலையின் அமைப்பு

புவியின் உட்பகுதியிலுள்ள பாறைக்குழம்பு, துவாரம் அல்லது வெடிப்பு அல்லது சிறு துளைகள் வழியாக புவியின் மேற்பரப்பில் வெளியேறுதலே எரிமலை எனப்படுகிறது. புவிமேலடுக்கிலிருந்து நேரடியாக ஆழத்திலுள்ள பாறைக் குழம்பிருக்கும் இடத்தை இணைக்கும் துளைகள் சிறுதுளைகள் எனப்படும். இதன் மூலமாக பாறைக்குழம்பு, பாறைப்படிகங்கள், சாம்பல், நீராவி, நெருப்பு மற்றும் பிற வாயுக்கள் புவியின் உட்புறத்திலிருந்து வெளியேறுகின்றன.

புனல் வடிவமுடைய எரிமலை கூம்பின் உச்சியில் காணப்படுவது எரிமலை வாய் எனப்படும். பள்ளமான பரந்த எரிமலையின் வாயை அகன்ற எரிமலைவாய் (Caldera) என்றழைப்பர்.

**எரிமலையின் வகைகள் :** எரிமலைகள் செயல்படும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

**சீறும் அல்லது செயல்படும் எரிமலைகள் (Active Valcanoes) :**

இது நிரந்தரமாக தொடர்ந்து எரிமலைக் குழம்புகலையும் வாயுக்களையும் சாம்பலையும் வெளியேற்றிக் கொண்டே வாயுக்களையும் சாம்பல்களையும் வெளியேற்றிக் கொண்டே இருக்கும். இவை செயல்படும் எரிமலைகள் எனப்படுகின்றன. உலகமனைத்திலும் சுமார் 600 செயல்படும் எரிமலைகள் உள்ளன. எ.டு: பிலிப்பைன்சிலுள்ள பினடுபொ, இத்தாலியிலுள்ள ஸ்டராம்போலி மற்றும் எட்னா, அமெரிக்காவிலுள்ள செயின்ட் ஹெலன்ஸ், ஹவாய் தீவிலுள்ள மௌனாலோவா.

**உறங்கும் எரிமலை (Dormant Valcanoes) :**

ஒரு முறை வெடித்து பிறகு நீண்ட காலம் செயலற்றிருந்து திடீரென்று வெடிக்கும் எரிமலைகள் உறங்கும் எரிமலைகள் எனப்படும் எ.டு: இத்தாலியிலுள்ள மௌண்ட் வெசூவியஸ்,

NOT TO BE REPUBLISHED @KTBS

ஜப்பானிலுள்ள ஃபியூஜியாமா இந்தோனேசியாவிலுள்ள க்ரகடோவ, தான்சேனியாவிலுள்ள கிளிமாஞ்சாரே போன்றவை.

**செயலிழந்த எரிமலைகள் (Extinct Valcanoes) :**

இவை பழங்காலத்தில் செயல்பாடுகளை நிகழ்த்தி, பிறகு எந்த வித செயல்பாடுகளுமின்றி காணப்படுகின்றன. எ.டு: அர்ஜென்டீனாவில் அகாங்ககுவா, தான்சேனியாவின் கொராங்கொரொ, ஸ்காட்லாண்டின் ஆர்த்தர்சீட் போன்றன.

> ***நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் :***
>
> ***உலகின் பிரபலமான எரிமலைகள் :***
>
> 1. மௌண்ட் வெசூவியஸ் (இத்தாலி)
> 2. க்ரகடோவ (இந்தோனேஷியா)
> 3. மௌண்ட் பீலீ (வெஸ்ட் இன்டீஸ்)
> 4. மௌண்ட் ஃபியூஜியாமா எரிமலையை ஜப்பானியர்கள் இறைவனாக வணங்குகிறார்கள்

**எரிமலைப் பொருட்கள் :** எரிமலைகளிலிருந்து மூன்று வகையான பொருள்கள் வெளியேறுகின்றன. அவையாவன :

**திடப்பொருள்கள் :** எரிமலை வெடிகுண்டுகள், சாம்பல், படிக்கல், துகள்.

**வாயுக்கள் :** கந்தகம், ஹைட்ரஜன், கார்பன்-டை - ஆக்ஸைடு நீராவி போன்றவை.

**திரவங்கள் :** கற்பாறைக் குழம்பு (லாவா)

**எரிமலைகளின் பங்கீடு :** உலகின் பல பகுதிகளில் எரிமலைகள் வெடிக்கின்றன. தீவுகள் மலைத்தொடர்கள், கண்டங்களிலுள்ள பீடபூமி போன்றவற்றில் நிகழ்கின்றது. எரிமலைகள் வெடிக்கும் முக்கியமாக பிரதேசங்களாவன:

*1)* **பசிபிக் வட்டப் பிரதேசம் அல்லது பசிபிக் நெருப்பு வளையம்:** பசிபிக் பெருங்கடலின் கடற்கரை ஓரங்களில், அதாவது பிலிப்பைன்ஸ், ஜப்பான், அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்கா போன்ற பகுதிகளில் எரிமலைகள் தென்படுகின்றன.

@KTBS NOT TO BE REPUBLISHED

**2) மத்திய அண்டார்டிக் மண்டலம் :** ஐஸ்லேண்ட், வெஸ் இன்டீஸ் தீவுகள்.

**3) மத்திய புவி கண்டமண்டலம் :** இத்தாலி, ஸ்பெயின், ஃபிரான்ஸ் கிரீஸ், துருக்கி போன்றவை.

மேற்கண்ட முக்கிய எரிமலை மண்டலப் பகுதிகளைத் தவிர ஹவாய், இந்தோனேசியா முதலிய தீவுகளிலும் எரிமலைகள் வெடித்துள்ளன.

**நில நடுக்கங்கள் (Earth Quakes) :**



நிலநடுக்கத்தின் செயல்கள்

புவியின்மேற்புறத்தில் உண்டாகும் நடுக்கம் அதிர்வு மற்றும் அதிர்வுகளின் தொடரை நிலநடுக்கம் என்றழைப்பர். இவை புவி மேலடுக்கிலுள்ள பாறைகளின் விரைவான இயக்கத்தினால் புவி மேலோடு அல்லது கவச அடுக்கிற்குள் ஏற்படுகின்றன. நில நடுக்கத்தின் தாக்கம் அல்லது தீவரம் புவியின் மேல்மையத்திற்கு அருகில் அதிகபட்ச அளவில் இருக்கும் மற்றும் நில நடுக்கம் வெளிமையத்திலிருந்து தொலைவில் செல்லச்செல்ல அதிர்வின் தாக்கம் குறைகிறது. நில நடுக்கம், புவியின் மேற்பரப்பிற்கு அருகிலிருந்தால் நில நடுக்க அலைகள் வலுவாகி அதிக தாக்கத்தை உண்டாக்குகிறது.

புவிக்குள் நில நடுக்கம் உருவாகும் இடம் நிலநடுக்க கீழ்மையம் அல்லது நில நடுக்கமையம் எனப்படும். நில நடுக்க கீழ்மையத்தின் நேர் உயரே புவியின் மேற்பரப்பில் அமைந்துள்ள பகுதி மேல்மையம் எனப்படுகிறது.

நில நடுக்கத்தின் அறிவியல் ஆய்வை ‘நில அதிர்வியல்’ (Seismology) என்றழைப்பர். நில நடுக்கம் அலைகளின் தொடக்க

@KTBS NOT TO BE REPUBLISHED

இடம், நேரம், வேகம் மற்றும் திசையை பதிவு செய்யும் கருவியை நில நடுக்க பதிவு கருவி (Seismography) என்றழைப்பர்.

**நில நடுக்கங்கள் உண்டாகக் காரணங்கள் :**

**புவியமைப்பு காரணங்கள் :** புவிமேலடுக்கு பல்வேறு பெரிய மற்றும் சிறிய பாறைத்தட்டுகளால் ஆனது. இத்தட்டுகளின் விளிம்புகள் இயக்க இடங்களாகும் மற்றும் புவி அதிர்ச்சி செயல்பாட்டின் முதன்மை இடமாகும். (பசிபிக் பெருங்கடலின் சுற்றிலுமுள்ள மண்டலம்)

**எரிமலை வெடிப்புகள் :** எரிமலைகளில் வாயுக்களின் வெடிப்பினால் நில நடுக்கம் உண்டாகிறது. (இந்தோனேசியாவின் க்ரகடோவ எரிமலை).

**பிளவு (இடைமுறிவு)**

புவியின் பாறை அடுக்குகளின் மீட்பு நடவடிக்கை பல முறைகளில் தென்படுகிறது. அவை இடப்பெயர்ச்சி, நிலச்சரிவு ஆகியவற்றால் புவியடுக்குகள் மேல் அல்லது கீழ்ப்புறமாக சரிவதால் நீண்ட பிளவுகள் ஏற்படுகின்றன. இவ்வாறு புவித்தட்டுகள் நகருவதால் நிலநடுக்கம் ஏற்படகிறது. (அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள சான் அன்றியாஸ் பிளவு)

**மனிதனால் உருவாக்கப்பட்ட காரணிகள் :** இயற்கையும், மனிதன் நிகழ்த்தும் அதிகமான செயல்பாடுகள் நில நடுக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணியாக விளங்குகிறது. அவை யாயெனில், சுரங்கங்களில் கனிப்பொருட்களைப் பிரித்தெடுத்தல், மிகப்பெரிய அணைக்கட்டுகள், (மகாராஷ்டிராவின் கொய்னா அணைக்கட்டு, அமெரிக்காவின் ஹுவர் அணைக்கட்டு) நீ ர்நிலைகள் மற்றும் அணுச் சோதனைகள் போன்றவை. .

**நில அதிர்வலைகள் :** நில அதிர்வு கீழ்மையத்திலிருந்து உருவாகி அங்கிருந்து வட்டவடிவில் அலைகளைப் போன்று புவி மேல்மையத்திற்கு பரவிச் செல்கின்றன. நில அதிர்வு அலைகளில் மூன்று வகைகள் உள்ளன அவையாவன.

© KTBS NOT TO BE REPUBLISHED

***1. முதன்மை அலைகள் :*** இவை புவி அதிர்வின் கீழ்மையத்திலிருந்து முதலில் மேல் மையத்தை அடைகின்றன. இவை நீளமான அலைகளாகும் மற்றும் வேகமாக பயணிக்கக் கூடியவை. இவ்வலைகள் திட, திரவ மற்றும் வாயுப்பொருட்கள் வழியாகப் பயணிக்கும்.

**2. இரண்டாம் நிலை அலைகள் :** இவை 'குறுக்கு அலை' என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றால் திரவப் பொருட்கள் வழியாக பயணிக்க இயலாது. முதன்மை அலைகளுக்கு பிறகு இவ்வலைகள் மேல்மையத்தில் வந்தடைகின்றன.

**3. மேற்பரப்பு அலைகள் :** இவை நீண்ட அலைகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை மிகவும் வேகம் குறைவானவை. ஆனால் அதிக அளவில் அழிவை ஏற்படுத்தக் கூடியவையாகும்.

நில நடுக்கத்தின் தீவரத்தன்மை மற்றும் அளவை ரிக்டர் அலகில் அளவிடலாம்.

NOT FOR REPUBLISHED ©KTBS

நில நடுக்கங்கள் அதிக அளவில் அழிவை ஏற்படுத்துகின்றன. இவற்றால் மிகுந்த உயிரழிவு மற்றும் சொத்துக்களுக்கு நட்டம் ஏற்படுகிறது. இவற்றால் உண்டாகும் நிலச்சரிவு வெள்ளப் பெருக்கு முதலியவற்றால் ஏராளமான மக்கள் உயிரிழக்க நேரிடுகிறது. கட்டிடம், பாலம், சாலை மற்றும் இரயில் பாதைகளும் நாசமடைகின்றன.

**சுனாமி :** கடல் மற்றும் பெருங்கடலடியில் தோன்றும் நில நடுக்கங்களால் பெருங்கடல்களில் மிக உயரமான பேரலைகள் கடலோரப் பகுதிகளை அடைகின்றன. இவை சுனாமி எனப்படுகிறது. இது ஜப்பானிய மொழிச் சொல்லாகும். (சு - துறைமுகம், னாமி - அலை) இது துறைமுக அலைகள்.

**நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் :**

*1. 2004 டிசம்பர் 26 ஆம் நாள் சுனாமி அலைகள் இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, இலங்கை நாடுகளில் கடற்கரையை வந்தடைந்து பேரழிவை உண்டாக்கியது.*

*2. 2011 மார்ச்சு 11 அன்று சுனாமி அலைகள் ஜப்பானில் புகுஷிமா, சென்டாய், மியாகி பகுதிகளில் பேரழிவை உண்டாக்கியது.*

*3. இந்தியாவிலுள்ள சில நில நடுக்க பதிவுமையங்கள் : கௌரி பிதனூர், கொடைக்கானல், பூனா ஹைதராபாத் மற்றும் டேராடூன்.*

**நில நடுக்கத்தின் பங்கீடு : நில நடுக்கத்தின் பங்கீடு கீழ்காணுமாறு உள்ளன.**

- பசிபிக் பெருங்கடலினைச் சுற்றியுள்ள கடற்கரை பகுதிகள்: இது நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், அமெரிக்கா, ஜப்பான், பெரு, போன்றவைவற்றை கொண்டுள்ளது.
- மெடிட்டரேனியன் பெருங்கடலில் சுற்றிலுமுள்ள கடலோரப் பகுதிகள்.
- இந்தியாவின் இமாலய சிகரத்திலுள்ள பகுதிகள். (சிவாலிக் பகுதி)




**நில நடுக்கம் மற்றும் எரிமலைப் பிரதேசங்கள்**

NOT TO BE REPUBLISHED

**வெளிப்புற விசைகள் (Exogenic Forces) :**

வெளிப்புற விசைகள் புவியின் மீதுள்ள இயற்கை விசைகளாகும். இவை தங்களது செயல்களால் புவி மேற்பரப்பு வடிவங்களை மாற்றுகின்றன. முக்கிய வெளிப்புற விசைகளாவன. வெப்பம், காற்று, மழை, பனிப்பொழிவு, ஆறு பனியாறு போன்றவை.

**வானிலை சிதைவு :** பாறைகள் உடைந்து துகள்களாகி சிதைவுறும் இயல்பான செயல்முறை சிதைவு எனப்படுகிறது. இது வளிமண்டலத்திலுள்ள வெப்பம், மழை, காற்று முதலியவற்றால் ஏற்படுகிறது. சிதைவுகளின் வகைகளாவன.

1. **இயற்பியல் சிதைவு :** பாறைகள் எந்த வித வேதியியல் மாற்றமடையாமல் உடைந்து துகள்களாகி சிதைவுறும் செயல்முறையை இயற்பியல் சிதைவு என்றழைப்பர். துகள் சிதைவு, பாறைச்சிதைவு, அடுக்குச் சிதைவு, போன்றவை இயற்பியல் சிதைவு செயல்களாகும். வெப்பம், மழை, பனி போன்றவை இயற்பியல் சிதைவிற்கு முக்கிய காரணிகளாகும்.

2. **வேதியியல் சிதைவு :** மழை நீரில் பொட்கள் கரைவதால் வேதியல் சிதைவு உண்டாகிறது. இச்சிதைவின் விளைவுகள் எவையெனில் கனிமங்களின் கூட்டுப் பொருட்களில் மாற்றங்கள் உண்டாகின்றன. வேதியியல் சிதைவில் நான்கு வகைகள் உள்ளன.

   1. **ஆக்சிஜனேற்றம் (Oxidation) :** மழைநீரில் கரைந்த ஆக்ஸிஜன் சில கனிமங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் பாறைகள் சிதைவடைகின்றன. சிறப்பாக இரும்பு, இரும்பு ஆக்சைடாக மாறுகிறது.

   2. **கார்பனேற்றம் (Carbonation) :** கார்பனுடன் கூடிய மழை நீர் சுண்ணாம்பு பாறைகளின் மீது வீழ்ந்து, பாறைகளிலுள்ள கால்சியம் கார்போனேட்டுகளை மழைநீரிலுள்ள கார்பன்டை ஆக்சைடு உறிஞ்சிக் கொள்வதால் கால்சியம் பை கார்பனேட்டாக மாறுகிறது.

   3. **நீரேற்றம் (Hydration) :** இச்செயல்முறையில், சில கனிமங்களிலுள்ள படிகங்கள் நீரை உறிஞ்சி படிப்படியாக துகள்களாக (பொடிகளாக) சிதைவுறுகின்றன. ஃபெல்ஸ்பார் படிகங்களால் உருவான முக்கிய பாறையாகும்.

   4. **கரைசல் (Solution) :** மழைநீர் சில பாறைகளில் உள்ள கனிமங்களை கரைத்து கரைசலாக்குகிறது. எ.டு: ஜிப்சம், உப்பு, ஃபாஸ்பேட், போன்றவை.

**3. உயிரியல் சிதைவு (Biogical weathering) :** தாவரங்கள் விலங்குகள் மற்றும் மனிதர்களால் பாறைகள் உடைத்து துகள்களாகுவதை உயிரியல் சிதைவு என்றழைப்பர். இதில் இயற்பியல் மற்றும் வேதியியல் செயல்களாலும் சிதைவு ஏற்படுகின்றது.

**தாவர இனம் -** தாவரங்களின் வேர்கள் வளர்ந்து விரிவடைவதால் பாறைகள் உடைந்து துகள்களாகின்றன.

NOT TO BE REPUBLISHED @KTBS

**விலங்கினம்** - வளைகளில் வசிக்கும் விலங்குகள், மண்புழுக்கள், எலிகள் போன்றவை.

**மனித இனம்** - சுரங்கத்தொழில், கல்வெட்டுதல், கட்டட நிர்மாணம் முதலியன.

**நிலத்தேய்வு (Denudation) :**

**நிலத்தேய்வு காரண காரணிகள் :** பல்வேறு வகையான இயற்கை ஆற்றல்கள் புவியின் மேற்பரப்பை தேய்வடையச் செய்யும் செயலை நிலத்தேய்வு என்றழைப்பர். ஆறு பனியாறு, நிலத்தடி நீர், புயல்கள் மற்றும் கடலலைகள் தேயுறுதலுக்கான காரணிகளாகும். அரிப்பு, கடத்துதல் மற்றும் படியவைத்தல் முதலிய மூன்று செயல்களை நிகழ்த்தி பூமியின் மேற்புரத்தில் மாறுபட்ட நில வடிவங்களை உருவாக்குகின்றன.

**ஆறு :** தோன்றுமிடத்திலிருந்து கடல் வரை பள்ளத்தாக்கில் பாய்ந்து செல்லும் தூய்மையான நீரோட்டமே நதி எனப்படும். புவியின் மேற்பரப்பு தேயுறுவதற்கு முக்கிய காரணி ஆறு ஆகும். பொதுவாக நீரூற்று, பனிக்கட்டியாறு அல்லது மழைநீரின் மூலமாக ஆறு தோன்றுகிறது. ஆறு பாயும் வழியை 'ஆற்றின் போக்கு' என்றும்.

ஆறு தொடங்குமிடத்தை 'ஆறுதோன்றுமிடம்' என்றும் கடலைச் சென்றடையும் பகுதியை 'ஆற்றுக்கழிமுகம்' என்றழைப்பர். ஒரு சிறிது ஆறு தனது பள்ளத்தாக்கில் மற்றொரு முக்கிய ஆற்றோடு இணைந்தால் அதனை 'கிளையாறு' என்றழைப்பார்கள். ஒரு ஆறு மற்றொரு ஆற்றோடு இணையும் இடத்தை 'சங்கமம்' என்றழைப்பார்கள்.

**ஆற்றின் போக்கு (செல்லும் வழி) :** ஆறு பாயும் வழி மேற்பள்ளத்தாக்கு இடை பள்ளத்தாக்கு, கீழ்ப்பள்ளத்தாக்கு என்ற மூன்று படிநிலையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இப்படிநிலைகளில் ஆற்று நீரின் அளவு, நீரின் வேகம் மற்றும் ஆற்றின் போக்கு, வடிவம் வெவ்வேறு முறையில் இருக்கும். ஒவ்வொரு படிநிலையிலும் ஆற்றின் செயல் மற்றும் அதனால் உருவாகும் நிலவடிவம் மாறுபட்டதாக இருக்கும்.

NOT TO BE REPUBLISHED @KTBS



ஆற்றுப் போக்கின் படிநிலைகள் மற்றும் அவற்றிற்குத் தொடர்புடைய நிலவடிவங்கள்

**மேற்பள்ளத்தாக்கு :** இந்நிலையில் ஆறு உயர்ந்த பகுதியிலிருந்து அரிப்பு ஏற்படுத்தும் செயலை நிகழ்த்துகிறது. அதிலும் அடித்தள அரிப்பு அதிகமாகயிருக்கும். அதாவது ஆறு தனது பள்ளத்தாக்கை ஆழமாகத் தோண்டுகிறது. இதனால் ஆழமான இடுக்குவழிகள், 'வி' வடிவ பள்ளத்தாக்குகள். நீர்வீழ்ச்சிகளை (ஏஞ்சல் நீர்வீழ்ச்சி, நயாகரா நீர்வீழ்ச்சி, ஜோக் நீர்வீழ்ச்சி போன்றவை மற்றும் பள்ளங்கள் (குழிகள்) போன்ற நிலவடிவங்களை உண்டாக்குகிறது.

**இடை பள்ளத்தாக்கு :** இந்நிலையில் ஆறு சமவெளிகளை வந்தடைகிறது. இங்கு ஆற்றின் போக்கில் சரிவு குறைவதால் நீர் பாயும் வேகமும் குறைகிறது. முக்கிய ஆற்றுடன் கிளையாறுகள் சேருவதால் ஆற்று நீரின் அளவு அதிகரிக்கிறது. இந்நிலையில் போக்குவரத்து செயல் நடைபெறுகிறது, மேலும் ஆங்காங்கே படிதல் செயலையும் காணலாம். இதனால் சில மாறுபட்ட நில வடிவங்கள் அமைகின்றன. அவையாவன வண்டல் படிவு, ஆற்றின் வளைவுகள் போன்றவை.

**கீழ்ப் பள்ளத்தாக்கு :** இந்த நிலையில் ஆறு மிகவும் மெதுவாக பாய்கிறது. நதி செல்லும் வழி பெரியதாகயிருப்பதாலும் சரிவு மிகக் குறைவாகயிருப்பதும் இதற்குக் காரணமாகும். இங்கு வண்டல் படிதல் செயல் நடைபெறுகிறது. இந் நிலையில் காணப்படுகிற முக்கியமான நிலவடிவங்கள், வெள்ளப் பெருக்கு

© KTBS NOT TO BE REPUBLISHED

சமவெளி இயற்கையான இடைக்கரை, குளம்பு வடிவ ஏரிகள், கழிமுகங்கள் (சுந்தர்பன் வடிநிலம், நைல் வடிநிலம்) போன்றன.




ஆற்றில் படிதலால் ஏற்படும் முக்கிய நிலவடிவங்கள்

**நீங்கள் அறிந்துகொள்ளுங்கள் :**

**நதி முகத் துவாரம் (Estuary):** ஆறு கடலில் கலக்குமிடத்தில் அகலமாக காணப்படும் அலை குறைந்த வாய்ப்பகுதி.

**கழிமுகம் (வடிநிலம்) (Delta) :** ஆறு கடலில் சேரும் இறுதிப் பகுதியில் படிவுகளால் உண்டான பகுதிகள்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**பனியாறு :** மலையின் மிக உயரமான பகுதிகளிலும் துருவப் பிரதேசங்களிலும் பனிக்கட்டியின் திரள்கள் மிகுந்து காணப்படுகிறது. பனிக்கூட்டம் அதன் எடை மற்றும் புவியீர்ப்பு விசையினால் சரிவுவரையில் வழிந்தொடுவதைப் பனியாறு என்றழைப்பார்கள். பனிக்கூட்டத்தின் கீழ்ப்பகுதி அதிக அழுத்தத்தால் உருகி சரிவை நோக்கி பாய்கிறது.

**பனியாறுகளின் வகைகள் :** பனியாறுகள் இரண்டு வகைப்படும். **அவை யாவன :** கண்டப்பனியாறு மற்றும் மலைப்பனியாறு.

**கண்டப் பனியாறு :** துருவப் பிரதேசங்களிலுள்ள விரிவான பனிக்கட்டி தாள்களை கண்டப்பனியாறு என்றழைப்பர். எ.டு: கிரீன்லாந்து மற்றும் அண்டார்டிகா.

**மலை அல்லது ஆல்பைன் அல்லது பள்ளத்தாக்கு பனியாறுகள் :** உயர்ந்த மலைப் பிரதேசங்களிலுள்ள பனியாறுகளை மலைப் பனியாறு என்றழைப்பர்.

நிலத்தேய்வுறுதலின் காரணியான பனியாறு அரிமானம் போக்குவரத்து மற்றும் படிதல் ஆகிய செயல்களை நிகழ்த்துகிறது. பக்கவெட்டு அரிப்பு பனியாறுகள் முக்கிய அரிமான செயலாகும்.

இது பனி அரி பள்ளம், மலை உச்சி, செங்குத்து மலைச்சரிவு, '**U**' வடிவ பள்ளத்தாக்குகள், தொங்குப் பள்ளத்தாக்குகள், பாறைப் படிகள் போன்ற மாறுபட்ட நிலை வடிவங்களை உருவாக்குகிறது.



**பனியாற்று செயல்**

பனியாறு போக்குவரத்து மற்றும் படியவைத்தல் செயலை ஒன்றாகவே நிகழ்த்துகிறது. படிதலினால் உருவாகின்ற முக்கிய வடிவங்கள் என்றால் பனியாற்று பாறை கழிவடைகள், பாம்புவடிவ குன்றுகள், முக்கோணவடிவ குன்றுகள் மற்றும் பனிநீர் பெருக்கு சமவெளிகள் (out wash plains).

பனியாற்றுப் பிரதேசங்களின் மிக முக்கியமான நிலவடிவம் பனியாற்று பாறை கழிவடைகள் ஆகும். இவை பனியாற்றுப் படிதலால் உண்டான, வெவ்வேறு வடிவ, பரந்த அளவிலான பாறைப் பொருட்களாகும். பனியாற்றுப் பாறை கழிவடைகள் அவை படிந்திருக்கும் இடத்தின் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கப் படுகிறது.

**பக்கவாட்டு பனியாற்றுப் பாறைகழிவடை கழிவடை :** பனியாறு, பள்ளத்தாக்கின் இரண்டு கரைகளிலும் பாறைப் பொருட்களை படியவைத்திருப்பதை பக்கவாட்டு பனியாற்றுப் பொதி என்றழைப்பர்.

**இடைநிலை பனியாற்றுப் பாறைகழிவடை :** இரண்டு பனியாறுகள் சந்திக்கும் போது அவற்றின் பக்கவாட்டு பனியாற்றுப்


@KTBS
NOT TO BE REPUBLISHED

பொதிகள் பரஸ்பரம் ஒன்றோடொன்0று கூடி இடைநிலை பனியாற்றுப் பாறை கழிவடை என்றழைக்கப்படுகிறது.

**அடித்தள பனியாற்றுப் பாறை கழிவடை:** பனியாற்றுப் பள்ளத்தாக்கின் அடித்தளத்தில் பாறைப் பொருட்களைப் படியவைத்தால் அது அடித்தள பனியாற்று பாறை கழிவடை எனப்படுகிறது.

**முடிவு நிலை பனியாற்றுப் பாறை கழிவடை :** இவை பனியாற்றின் முடிவுப் பகுதிகளில் படிகின்றன.

## நிலத்தடி நீர்

நிலத்தின் மீது பொழியும் மழை நீரில் சிறிதளவு வடிந்து உட்கசிகிறது. இவ்வாறு உள்ளடுக்கில்சேகரமாகிற நீரை 'நிலத்தடி நீர்' என்றழைப்பர். நிலத்தடி நீர் எளிதாக ஊடுருவிச் செல்லும் பாறை அடுக்குகளை 'ஊடுருவிப் பாறை' அல்லது 'புரையுடைப்பாறை' என்றழைப்பர். நிலத்தடி நீர் நுழைந்து செல்லயியலாத பாறையடுக்குகளை ''ஊடுருவியலாப் பாறை'' அல்லது ''புரையுடையற்ற பாறை'' என்றழைப்பர்.

சில ஊடுருவிப் பாறைகள் மிகுந்த அளவு நிலத்தடி நீரைப் பெற்றிருக்கும். இவற்றை 'நீர்த்தேக்கப் பாறை' என்பர். ஊடுருவிப் பாறைகளில் நிரம்பிய நீர் சிலநேரங்களில் இயல்பாக வெளியேறுகிறது. இவ்வாறு நிலத்தடி நீர் இயல்பாக வெளியேறுவது 'நீரூற்றுக்கள்' (Spring) எனப்படுகிறது.

**நீரூற்றுகளின் வகைகள் :**

1. **வற்றாத நீரூற்றுகள் :** இவ்வகை ஊற்றுக்களில் ஆண்டு முழுவதும் நீர் தொடர்ந்து வெளியேறுகின்றது.
2. **இடைவிட்ட நீரூற்றுகள் :** இந்நீரூற்றுகள் ஆண்டின் சில காலங்களில் (மழைக்காலம்) மட்டுமே நிலத்தடி நீர் வெளியேறுகின்றது.
3. **சுடு நீர் ஊற்றுகள் :** இந்நீரூற்றுகளில் சுடு நீர் வெளியேறுகின்றது. இவற்றை பொதுவாக எரிமலைப் பிரதேசங்களில் காணலாம்.
4. **வெந்நீர் ஊற்றுகள் :** இவ்வகை ஊற்றுகள் நீராவியுடன் அவ்வப் போது நீரை (ஊற்றுப்போல்) அதிக உயரத்திற்குப் பாய்ச்சு கிறது. எ.டு: அமெரிக்காவிலுள்ள ஓல்டு ஃபேய்த்ஃபுல் கீஸர்.

© KTBS NOT TO BE REPUBLISHED

5. **ஆர்டீசியன் கிணறுகள் :** இரண்டு ஊடுருவயியலாத பாறைகளுக்கிடையேயுள்ள குழிகிண்ணம் போன்ற வடிவுடைய அடுக்கில் நிலத்தடி நீர் சேகரிக்கப்பட்டால், நீர் இயல்பாக வெளியேறயியலாது. இத்தகைய இடங்களில் ஊடுருவிப் பாறை வரையில் துளைகளிட்டால், நீர் இயல்பாக பாய்கிறது. இவற்றை ஆர்ட்சியன் கிணறுகள் என்றழைப்பர். இவை ஆஸ்திரேலியாவில் மிகுதியாகக் காணப்படுகின்றன.




**ஆர்டீசியன் கிணறுகள்**

நிலத்தடி நீரிலும் அரிமானம், போக்குவரத்து மற்றும் படிதல் செயல்கள் நடைபெறுகின்றன. நிலத்தடி நீர் செயல்கள் சுண்ணாம்புக்கல் பிரதேசங்களில் மேலோங்கியுள்ளன. நீலப்படிகக்கல், மூழ்கிய பள்ளங்கள், சுண்ணாம்புக்கல் குகைகள், சுண்ணக்கல் விழுதுப்பாறை, சுண்ணக்கல் தூண்கள் போன்றவை நிலத்தடி நீர் செயல்பாட்டால் உருவாகிற நில வடிவங்களாகும்.




**நிலத்தடி நீர் செயல்பாடு**

©KTBS NOT TO BE REPUBLISHED

**நீங்கள் அறிந்து கொள்ளுங்கள் - சுண்ணக்கல் குகைகள்**

1. ஆகலகவி (உளவி) குகைகள் - கருநாடகத்தின் வடகன்னட மாவட்டம்
2. பேலம் மற்றும் பொஹ்ரா குகைகள் - ஆந்திரப் பிரதேசம்

நிலத்தடி நீர் செயல்பட்டால் உருவாகிய நில வடிவங்களை ''கார்ஸ்டோ போகிராஃபி'' என்று அழைப்பார்கள்.

**காற்று :**



அரை நிலவு மணல்மேடு

வறண்ட அல்லது பாலைவனப் பகுதிகளில் காற்றின் செயல்கள் பொதுவாக்க் காணப்படுகிறது. பாலைவனங்களில் தடையின்றி மிக வேகமாக வீசுகின்ற காற்று நிலப்பரப்பில் தேய்வு, போக்குவரவு மற்றும் படிவுப் பொருட்களைக் கொண்டு வெவ்வேறு வகையான நிலவடிவங்களை உருவாக்குகிறது. நாய்க்குடை, பாறை மேடைகள், செங்குத்துப் பெருமலை, மணல் மேடு, நீள்வாட்டு மணல்மேடு, குறுக்கு மணல்மேடு, பிறை வடிவ மணல்மேடு மற்றும் வண்டல் மண் படிவு போன்றவை காற்றின் செயலால் உருவாக்கும் முக்கிய நில வடிவங்களாகும்.

பிறை வடிவ மணல் மேடுகள் பாலைவனங்களில் பொதுவாகக் காணப்படும் நில வடிவங்களாகும். பாலைவன விளிம்பில் நுண்ணிய மஞ்சள் நிறமான மண்ணின் துகள்கள் படிந்திருக்கும் பகுதியை 'லோயிஸ்' என்றழைப்பர். எ.டு: சீனாவிலுள்ள மஞ்சள் நிற மண்.

காற்றின் செயலை காற்றின் சுழற்சி (இயோலியன் சைக்கிள்) என்றழைப்பர்.

©KTBS NOT TO BE REPUBLISHED

**கடல் அலைகள் :** பல்வேறு நிலத் தேய்விற்கு காரணமான காரணிகளில் கடல் அலைகளும் ஒரு முக்கிய வெளிப்புற விசையாகும். கடல் அலைகள் கடலின் மேற் பகுதியில் அலைவைப் பெற்றிருக்கும் நீரின் வகையாகும். கடல் அலைகளின் செயல் கடற்கரையில் பெரும்பாலும் காணப்படுகிறது. பாறை முகடு, கடல் குகைகள், கடல் கொடும்பாறை, கடல்வளைவு, நிலக்கூம்பு, மணல்மேடுகள், கடற்கரைகள், கடற்காயல் (கடல் சார்ந்த ஏரி) போன்றவை கடல அலைகள். உருவாக்குகிற முக்கிய நில வடிவங்களாகும்.



கடல் அலைகள்

@KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. விடுபட்ட இடங்களில் ஏற்ற சொற்களால் நிரப்புக.**

1. புவி கண்டங்களின் மேலடுக்கு என்று ________ஐ அழைப்பர் .
2. பள்ளமான, பரந்த எரிமலை வாயை ________ என்பர்.
3. அதிக பேரழிவை உண்டாக்கும் நிலநடுக்க அலைகள் ________.
4. சுண்ணக்கல் விழுதுப்பாறை மற்றும் சுண்ணக்கல்பாறைகள் ________களின் பொதுவாகக் காணப்படும்.
5. மணல் மேடுகள் ________ செயலால் உண்டாகின்றன.

**II. பின் வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

6. புவியின் உட்புறமுள்ள முக்கிய மூன்று அடுக்குகளை குறிப்பிடுக.

7. செயல்பாடு நிகழ்வின் அடிப்படையில் எரிமலைகளின் வகைகளைப் பெயரிடுக.

8. உலகில் முக்கிய நிலநடுக்க மண்டலங்களைக் குறிப்பிடுக.

9. வானிலைச் சிதைவு என்றால் என்ன? அதன் மூன்று முக்கிய வகைகளை பெயரிடுக.

10. ஆற்றின் செயல்களால் ஏற்படும் நிலவடிவங்களைக் பெயரிடுக.

**III. பொருத்தி எழுதுக :**

| | | | |
|---|---|---|---|
| *i.* | சீமா | (a) | நில நடுக்கம் |
| *ii.* | மணற்கள் | (b) | மஞ்சள் நிற மண் |
| *iii.* | மேல் மையம் | (c) | கடலின் மேலடுக்கு |
| *iv.* | வெந்நீர் ஊற்று | (d) | படிவுப்பாறை |
| *v.* | நுண்ணிய மண்துகள் | (e) | நிலத்தடி நீர் |

**IV. பின்வருபவற்றின் பொருளை எழுதுக :**

11. நீர்ப்பாறைகள்

12. பசிபிக் நெருப்பு வளையம்

13. பௌதிக (இயற்பியல்) சிதைவு

14. பனியாற்றுப் பாறை கழிவடை

15. கரிவய (கார்பனேற்ற) பாறைகள்

16. சுனாமி

17. கண்டப் பனியாறு

18. சுடு நீருற்று சுடுநீரூற்ற

@KTRS NOT TO BE REPUBLISHED

## V. நினைவில் கொள்ள வேண்டிய சொற்கள்

1. நீஃபே (NIFE)
2. மணல்நிறை மற்றும் களிப்பறைகள்
3. நில அமைப்பு வகைகள்
4. மலைப் பனியாறு
5. காற்று செயலின் சுழற்சி
6. கடற்கரைகள்

## VI. செயல்பாடுகள் :

1. உங்களை சுற்றியுள்ள இடங்களில் கிடைக்கும் பாறைகளைச் சேகரித்து பெயரிடுக.
2. பள்ளி கல்விச் சுற்றுலாவில் நீங்கள் சென்று பார்வையிட்ட நீர்வீழ்ச்சிகள் எவ்வாறு உருவானது என்பதைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

@KTBS
NOT TO BE REPUBLISHED

* * * * *

அத்தியாயம் 13

# வளி மண்டலம்

L3C1Y9

**இந்த அத்தியாயத்தைக் கற்றபின் நீங்கள் பின்வரும் அலகுகளைப் பற்றி அறிந்து கொள்வீர்கள்.**

- வளி மண்டலத்தின் பொருள், முக்கியத்துவம், கூட்டமைவு, உருவாக்கம் பற்றி அறிந்து கொள்ளுதல்
- வானிலை கூறுகளான வெப்பம், அழுத்தம், காற்று, ஈரப்பதம், மேகம், மழை ஆகியவற்றின் செயல், வகை களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்
- வானிலை மற்றும் வளிமண்டலத்திற்கு இடையேயுள்ள வேறுபாடுகளை அறிதல்

புவியைச் சுற்றியுள்ள காற்றுப்படலம் நம்மை எவ்வாறு பாதுகாக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா?

@KTBS
NOT TO BE REPUBLISHED

**வளிமண்டலத்தின் பொருள் மற்றும் முக்கியத்துவம்:** புவியைச் சூழ்ந்து காணப்படும் வாயுக்கள், தூசித் துகள்கள் மற்றும் நீராவியின் மெல்லிய அடுக்கை வளிமண்டலம் என்று அழைக்கிறோம். இது உயிர்க்கோளத்தை விண்வெளியிலிருந்து பிரித்து பாதுகாப்பு அளிக்கிறது. வளிமண்டலம் சுமார் 1000 கி.மீ. அடர்த்தியானது. இது அனைத்து உயிரினங்கள் வாழ்வதற்கு மிக அவசியமாகும். சில வாயுக்கள் மனிதன் மற்றும் பிற உயிரினங்களுக்கு இன்றியமையாதது. தாவரங்கள் இந்த வாயுக்களின் துணையால் உணவைத்




வளிமண்டல அடுக்குகள்

தயாரிக்கின்றன. வளிமண்டலத்திலுள்ள வாயுக்கள் சூரியனின் வெப்பக்கதிர்களை ஈர்த்து புவியை வெப்பமாக்கி வாழ்வதற்கேற்றதாக வைத்துக் கொள்கின்றன.

**வளிமண்டல கூட்டமைப்பு:** வாயுக்கள், தூசுக்கள் மற்றும் நீராவி ஆகியவை வளிமண்டலத்தில் கலந்துள்ளது. நைட்ரஜன் 78.08% ஆக்சிஜன் 20.94%, ஆர்கான் 0.93%, கார்பன்டை ஆக்சைடு 0.03%,ஓசோன் 0.000005% போன்றவை வளிமண்டலத்திலுள்ள முக்கிய வாயுக்களாகும். வளிமண்டலத்திலுள்ள தூசுத் துகள்கள் நீர்த்திவலைகளை உருவாக்கவும், மேகங்களமைவுக்கும் துணை புரிகின்றன. வளிமண்டலத்திலுள்ள நீராவி மேகங்கள் மற்றும் வீழ்படிவுகளின் காரணமாக விளங்குகிறது. மேலும், வளிமண்டலத்தில் வெப்பம் மற்றும் ஆற்றலைத் தக்கவைத்து ஒரு இடத்தின் வானிலை மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

**வளிமண்டல அடுக்குகள் :** வளிமண்டலம் அதன் பல பண்புகளின் அடிப்படையில் ஐந்து அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை வளிமண்டல கீழடுக்கு, மீள் அடுக்கு, இடையடுக்கு, வெப்பஅடுக்கு, வெளியடுக்கு போன்றவை ஆகும்.

**வளிமண்டல கீழடுக்கு (Troposphere) :** இது வளிமண்டலத்தின் கீழடுக்காகும் (அடிவளி அடுக்கு). இது நிலநடுக்கோட்டுப் பகுதியில் 18 கி.மீ. உயரத்திலும் துருவப் பகுதியில் 8 கி.மீ. உயரம் வரையிலும் காணப்படுகிறது. வெப்பநிலை, அழுத்தம், காற்று, மேகம், மழைப்பொழிவு போன்ற வானிலையின் அனைத்து நிகழ்வுகளும் இவ்வடுக்கில் காணப்படுகின்றன. வானிலையின் அனைத்து மாற்றங்களும் இவ்வடுக்கில் மட்டுமே காணப்படுகின்றன. இவ்வடுக்கில் உயரே செல்லச்செல்ல வெப்பநிலை குறையும். அழுத்தத்தின் அளவும் குறைகிறது.

**மீள் அடுக்கு (Stratosphere) :** இது வளிமண்டலத்தின் இரண்டாவது அடுக்காகும் மற்றும் 50 கி.மீ. வரை பரவியுள்ளது. இது கீழ் அடுக்கு மற்றும் இடையடுக்குகளின் இடையில் உள்ளது. இங்கு

NOT TO BE REPUBLISHED @KTBS

ஓசோன் மூலக்கூறுகள் மிக முக்கியமானது. இது சூரியனின் புறஊதாக் கதிர்களை (அல்ட்ரா வயலட்) ஈர்த்துக்கொண்டு புவியில் அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்கிறது. இவ்வடுக்கு மேகம் மற்றும் பிற வானிலை நிகழ்வுகளிலிருந்து விடுபட்டிருக்கிறது. இந்த அடுக்கு ஜெட் விமானங்கள் பறப்பதற்கு ஏதுவாக உள்ளது.

**இடையடுக்கு (Mesophere) :** இது வளிமண்டலத்தின் மூன்றாம் அடுக்காகும். இது மீன் அடுக்கு மற்றும் வெப்ப அடுக்கிற்கு இடையிலுள்ளது. சுமார் 80 கி.மீ. உயரம் வரை பரவியுள்ளது. இங்கு உயரச் செல்லச்செல்ல வெப்பநிலை குறைகிறது. இந்த அடுக்கு கடுங்குளிரான வெப்பநிலையைப் பெற்றுள்ளது.

**வெப்ப அடுக்கு (Thermosphere) :** இடையடுக்கிற்கு மேல் காணப்படும் அடுக்கு வெப்ப அடுக்கு ஆகும். இங்கு வெப்பநிலை கடுமையாக அதிகரிக்கிறது. இந்த அடுக்கின் கடுமையான வெப்பநிலையின் விளைவாக வாயுக்களின் அணுக்கள் அயனிகளாக மாற்றமடைகின்றன. அதனால் இதனை 'அயனி மண்டலம்' என்றழைப்பர். இந்த அயனிகள் புவியிலிருந்து பெறப்படும் வானொலி அலைகளை மீண்டும் புவிக்கு திருப்பி அனுப்புகின்றன.

**வெளி அடுக்கு (Exosphere) :** வளிமண்டலத்தின் மிக உயர்ந்த அடுக்கு வெளி அடுக்கு ஆகும். வளிமண்டலக் கூறுகள் குறைவாகக் காணப்படுகின்றன மற்றும் அழுத்தம் மிகக் குறைந்து காணப்படுகிறது.

**வானிலையின் கூறுகள் (Elements of weather) :** வெப்பம், அழுத்தம், காற்று, ஈரப்பதம், மேகம், மழைபொழிதல் போன்ற நிகழ்வுகள் வானிலையில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன.

ஒரு நாளில் ஓர் இடத்தில் நடைபெறும் வளிமண்டல நிகழ்வு 'வானிலை எனப்படுகிறது' ஒரு பகுதியின் நீண்டகால வானிலையின் சராசரி 'காலநிலை' என்றழைக்கப்படும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**வெப்பநிலை:** புவி பெறுகின்ற அனைத்து ஆற்றல்களின் மூலம் சூரியன் ஆகும். புவி சூரியனிடமிருந்தும் பெறுகின்ற வெப்பத்தை வெயிற்தாய்வு (Insolation) என்றழைப்பர். அதாவது சூரியனிடமிருந்து வரும் சூரிய கதிர்வீச்சு என்பதாகும். வளிமண்டலத்தின் வெப்பநிலையை வெப்பமானி (Thermometer) கருவியின் மூலம் அளக்கலாம். சென்டிகிரேட் அல்லது ஃபாரன்ஹீட் வெப்ப அளவுகளால் வெப்பத்தை அளப்பார்கள். வளிமண்டலத்தில் வெப்ப மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகள் அட்சரேகை, ஓர் இடத்தின் உயரம், கடலிலிருந்து தூரம், காற்று , கடல் நீரோட்டங்கள், மேகமூட்டம், மழைபொழிவு போன்றவை ஆகும்.

**பொதுவான வெப்பத்தாழ்வு வீதம்:** உயரே செல்லச்செல்ல வாயுக்களின் அளவு குறைந்து, அதனால் அடர்த்தி குறைந்து வெப்பநிலையும் குறைகிறது. இதனை பொதுவான வெப்பத்தாழ்வு வீதம் என்பார்கள். இது ஒவ்வொரு ஆயிரம் மீட்டர் உயரத்திற்கு (1 கி.மீ.) $6.4^{o}C$ அல்லது 165 மீட்டருக்கு $1^{o}C$ வெப்பநிலை குறைவாகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

**வெப்பத் தலைகீழ் மாற்றம்:** சில சூழல்களில் வளிமண்டலத்தில் உயரே செல்லச்செல்ல வெப்பநிலை அதிகரிக்கிறது. இதனை ''வெப்பநிலை கீழ்மாற்றம்'' என்றழைப்பர். இது மலைப்பள்ளத்தாக்குகலில் காணப்படுகிறது. இதற்குக் காரணம் நீண்டகால இரவில் காணப் படும் தெளிந்த ஆகாயம், உலர் காற்று, காற்றில்லாத மற்றும் பனிமூட்டமுள்ள மலையின் மேற்பகுதி போன்றவை ஆகும்.



**வெப்பநிலை மண்டலங்கள்:** புவியின் பரப்பில் வெப்பநிலை பங்கீடு ஒரே சீராக இல்லை. சூரியக் கதிர்வீச்சின் அளவைப் பொறுத்து புவி மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப் படுகின்றன, அவையாவன:

**வெப்ப மண்டலம்** (Torrid Zone): இது அதிக வெப்பநிலை கொண்ட மண்டலம் ஆகும். இங்கு சூரியக் கதிர்வீச்சு செங்குத்தாக விழுகின்றது. இது $0^{o}$ அட்சம் நிலநடுக் கோட்டிலிருந்து கடகரேகை ($23^{0}.30'$ வடக்கு) மற்றும் மகர ரேகை ($23^{0}.30'$ தெற்கு) வரை பரவிக் காணப்படுகிறது.

**மிதவெப்ப மண்டலம் (Temperate Zone)**: இந்த மண்டலத்தில் வெப்பம் மிக அதிக அல்லது மிகக் குறைவாக இல்லாமல் மிதமாக காணப்படுகிறது. இது வட அரைக்கோளத்தில் $23^{0}.30'$ வடஅட்சம் முதல் $66^{0}.30'$ வட அட்சம் (ஆர்க்டிக் வட்டம்) வரை பரவியுள்ளது. அதேபோல் தென் அரைக்கோளத்தில் $23^{0}.30'$ தென் அட்சத்திலிருந்து $66^{0}.30'$ தென் அட்சம் (அண்டார்க்டிக் வட்டம்) வரை பரவியுள்ளது.

**உறைபனி மண்டலம் (Frigid Zone)**: இது மிக குளிர்ச்சியான மண்டலமாகும். இது வட அரைக்கோளத்தில் $66^{0}.30'$ வட அட்சத்திலிருந்து (ஆர்க்டிக் வட்டம்) $90^{o}$ வட துருவம் வரையிலும் மற்றும், தென் அரைக்கோளத்தில் $66^{0}.30'$ தென் அட்சத்திலிருந்து (அண்டார்க்டிக் வட்டம்) $90^{o}$ தென் அட்சம் தென் துருவம் வரையிலும் பரவியுள்ளது. இங்கு சூரியனின் கதிர்கள் மிகச் சாய்வாக விழுவதால் வெப்பநிலை மிகக் குறைவாக உள்ளது. கோடையில் சிறிது அதிகரிக்கும் மற்றும் குளிர்காலத்தில் குறைவாக இருக்கும்.

**சமவெப்ப நிலைக்கோடுகள் (Isotherm):** ஒரே அளவு வெப்பநிலையைப் பெற்றிருக்கும் இடங்களை இணைத்து வரையப்படுகிற கோடுகள் சமவெப்பநிலைக்கோடுகள் ஆகும். ஏதேனுமொரு பகுதியின் வெப்பநிலை பங்கீட்டைக் காண்பிப்பதற்கு புவிக்கோளம் அல்லது நிலவரைபடத்தின்மீது வரையப்படுகிறது.

@KTBS NOT TO BE REPUBLISHED

**உங்களுக்குத் தெரியுமா?**

**மிக அதிக மற்றும் மிகக் குறைந்த வெப்பநிலை இடங்கள்.**

1. ஆப்பிரிக்கா கண்டத்தின் லிபியா நாட்டிலுள்ள ஆல் அஜீஜியாவில் உலகிலேயே மிக அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது. (சராசரி +58$^{o}$C) ஆனால் ரஷ்யாவின் சைபீரியா பகுதியிலுள்ள வர்கோயன்ஸ்க் நிலப்பகுதியில் (மக்களிருப்பிடம்) மிகக்குறைந்தளவு வெப்பநிலை பதிவாகியுள்ளது. (சராசரி -24$^{o}$C)

2. இந்தியாவின் ராஜஸ்தானிலுள்ள கங்காநகரில் மிக அதிகபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது. (சராசரி +54$^{o}$C) மற்றும் ஜம்மு காஷ்மீரின் லேஹ் பகுதியில் மழைக்காலத்தில் மிகக் குறைந்த அளவு வெப்பநிலை பதிவாகியுள்ளது. (சராசரி -10$^{o}$C)

3. அண்டார்க்காவிலுள்ள வஸ்டோக் பகுதியில் உலகின் கடுங்குளிர் (சராசரி -89$^{o}$C) பகுதியாகக் கருதப்படுகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

**வளிமண்டல அழுத்தம்:**

காற்று எடையைப் பெற்றிருப்பதால் புவியின் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. இதனை வளிமண்டல அழுத்தம் என்பார்கள். காற்றழுத்தத்தை அளப்பதற்கு காற்றழுத்தமானி (Barometer) என்ற கருவியைப் பயன்படுத்துவார்கள். அழுத்தத்தை மில்லிபார் (mb) அலகுகளில் அளப்பார்கள். கடல்மட்டத்தில் வளிமண்டலத்தின் சராசரி அழுத்தம் 1013.25 மில்லி பார்கள் ஆகும். வெப்பநிலை, புவியின் சுழற்சி, கடல்மட்டத்திலிருந்து உயரம், நீராவி போன்ற காரணிகளால் வளிமண்டல அழுத்தம் பாதிக்கப்படுகிறது. இவற்றில் வெப்பநிலை மிகமுக்கியமானது. வெப்பநிலை அதிகமாக உள்ள பகுதிகளில் அழுத்தம் குறைவாக இருக்கும். வெப்பநிலை அதிகமாக உள்ள பகுதிகளில் காற்று விரிவடைந்து அழுத்தம் குறையக் காரணமாகும். இதற்கு நேர்மாறாக, வெப்பநிலை குறைவான பகுதியில் காற்று சுருங்குவதால் அழுத்தம் அதிகரிக்கிறது. இவ்வாறு வெப்பநிலை மற்றும் அழுத்தம் ஒன்றுக்கொன்று நேர்மாறான தொடர்பை உடையவையாகும். வளிமண்டலத்தின் அழுத்தம், புவியிலிருந்து உயரே செல்லச் செல்ல குறைந்து வருகிறது. இவ்வாறு தாழ்வு அழுத்தத்தின் அளவு ஒவ்வொரு 300 மீ.களுக்கு 34 மில்லிபார்களாகும்.

**உலகின் முக்கிய அழுத்த மண்டலங்கள்:**

1. நிலநடுக்கோடு தாழ்வழுத்த மண்டலம்
2. வடக்கு துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம்
3. தென் துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம்
4. வடக்கு துணை துருவ தாழ்வழுத்த மண்டலம்
5. தெற்கு துணை துருவ தாழ்வழுத்த மண்டலம்
6. வடதுருவ உயர் அழுத்த மண்டலம்
7. தென் துருவ உயர் அழுத்த மண்டலம்

**நிலநடுக்கோட்டு தாழ்வழுத்த மண்டலம்:** இது அதிக வெப்பம் மற்றும் தாழ்வழுத்தத்தைப் பெற்ற மண்டலமாகும். இது நிலநடுக்கோட்டிலிருந்து 5$^{o}$ வட தென் அட்சங்களுக்கிடையே காணப்படுகிறது. இப்பகுதி நேரடியாக சூரியன் கதிர்களை ஆண்டு முழுவதும் பெறுகிறது. இவ்வெப்பத்தினால் காற்று விரிவடைந்து தாழ்வழுத்தம் உருவாகின்றது. இந்த மண்டலம் அமைதியானது மற்றும் சிறிதளவு காற்று வீசும் பகுதியாதலால் இதனை 'அமைதி மண்டலம்' (Doldrum) என்றும் அழைப்பார்கள். இப்பகுதியை இடைவெப்ப குவிய மணடலம் (Iner Tropical Convergence Zone-ITCZ) என்ற பெயரிலும் அழைப்பார்கள். இது வியாபாரக்காற்றுக்கள் குவியும் மண்டலமாகும்.

**துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம்:** இது வெப்ப மண்டலத்திலிருந்து 35$^{o}$ வடக்கு மற்றும் தெற்கு அட்சம் வரை காணப்படும் மண்டலம் ஆகும். இங்கு இரண்டு துணை வெப்ப உயர் அழுத்த மண்டலங்கள் உள்ளன. அ) வடக்கு துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம். இந்த மண்டலம் 30$^{o}$ வடக்கிலிருந்து 35$^{o}$ வடக்கு அட்சம் வரை காணப்படுகிறது. இம்மண்டலம் குதிரை அட்சங்கள் என்றும் அழைக்கப்படுகிறது. ஆ) தெற்கு துணை வெப்ப உயர் அழுத்த மண்டலம். இது 35$^{o}$ அட்சம் வரை காணப்படுகிறது.

NOT TO BE REPUBLISHED @KTBS

**துணை துருவ தாழ்வழுத்த மண்டலம்:** இது $60^{o}$ முதல் $65^{o}$ வடக்கு மற்றும் தென் அட்சங்களின் இடையே காணப்படுகிறது. புவிக் கோளத்தில் இரண்டு துணை துருவ தாழ்வழுத்த மண்டலங்கள் உள்ளன. அவையாவன: அ) வட துணை துருவ தாழ்வழுத்த மண்டலம் ($60^{o}$ வடக்கிலிருந்து $65^{o}$ வடக்கு வரை) ஆ) தென் துணை துருவ தாழ்வழுத்த மண்டலம் ($60^{o}$ தெற்கிலிருந்து $65^{o}$ தெற்கு வரை) குளிர்காலத்தில் சூறாவளிகள் வீசுகின்றன.



உலகின் அழுத்த மண்டலங்கள்

**துருவ உயர் அழுத்த மண்டலம்:** இம்மண்டலம் இரண்டு அரைக்கோளங்களில் $80^{o}$ முதல் $90^{o}$ அட்சங்களுக்கு இடையே காணப்படுகிறது. கடுங்குளிர் பகுதியாதலால் அதிக அழுத்தம் நிலவுகிறது.

**சம அழுத்தக்கோடு (Isobars):** வரைபடத்தில் அழுத்தத்தின் பங்கீட்டைக் காண்பிக்கப் பயந்படுத்தப்படுகிற கோடு இதுவாகும். ஒரே மாதிரியான அளவு அழுத்தம் நிலவுகிற இடங்களை இணைக்க வரையப்படும் கோடு சம அழுத்தக் கோடாகும்.

**காற்றுகள்:** புவியின் மேற்பரப்பில் கிடைமட்டமாக நகரும் வாயுக்களே 'காற்று' எனப்படும். புவியின் அன்றாட சுழற்சி மற்றும் அழுத்தத்தின் வேறுபாடுகளால் காற்றுகள் உருவாகின்றன.

காற்றின் திசையை அறிய காற்றுதிசை காட்டியும் (Wind Vane), காற்றின் வேகத்தை அளக்க காற்று வேகமானியும் (Anemometer) கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**காற்றின் வகைகள்:** காற்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: கோள் காற்றுகள், பருவகாலக் காற்றுகள், தலக்காற்றுகள், சூறாவளிகள் மற்றும் எதிர்ச் சூறாவளிகள்.

@KTBS NOT TO BE REPUBLISHED




காற்று திசைமானி



காற்று வேகமானி

*1)* **கோள் காற்றுகள் (Planetary Winds):** இவற்றை ''நிலையான காற்று'' அல்லது ''நிலவும் காற்று''கள் என்று அழைப்பார்கள். வருடம் முழுவதும் நிலையாக ஒரே திசையை நோக்கி வீசுகின்றன. காலநிலை மாற்றம், பாலைவனம் உருவாகுதல், கடற்பயண வழிகாட்டுதல் போன்றவற்றின் மீது அதிக பாதிப்பை இக்காற்றுகள் ஏற்படுத்துகின்றன. கோள் காற்றுகள் மூன்று வகைப்படும். அவையாவன: வியாபாரக் காற்று, எதிர் வியாபாரக் காற்று மற்றும் துருவக் காற்றுகள் ஆகும்.

NOT TO BE REPUBLISHED ©KTBS




கோள்காற்றுகள்

• **வியாபாரக் காற்றுகள் (Trade Winds):** இவை துணை வெப்ப மண்டல உயர் அழுத்த மண்டலங்களிலிருந்து நிலநடுக்கோட்டு தாழ்வழுத்த மண்டலங்களை நோக்கி வீசுகின்றன. வட அரைக் கோளத்தில் இவை வடகிழக்கிலிருந்து தென் மேற்கை நோக்கியும், தென் அரைக்கோளத்தில் தென் கிழக்கிலிருந்து வடமேற்கு

நோக்கியும் வீசுகின்றன-இவற்றை முறையே வடகிழக்கு வியாபாரக் காற்றுகள் என்றும், தென்கிழக்கு வியாபாரக் காற்றுகள் என்றும் அழைப்பார்கள்.

- **எதிர் வியாபாரக் காற்றுகள் (Anti Trade Winds):** இவற்றை மேற்கு காற்றுகள் என்றும் அழைக்கிறார்கள். இவை துணை வெப்ப உயர் அழுத்த மண்டலத்திலிருந்து துணை துருவ தாழ்வழுத்த மண்டலங்களை நோக்கி வீசுகின்றன. இவற்றின் திசை வட அரைக்கோளத்தில் தென் மேற்கிலிருந்து வடகிழக்கிலும், தென் அரைக்கோளத்தில் வடமேற்கிலிருந்து தென் கிழக்கிலும் உள்ளது. இவை தென் அரைக்கோளத்தின் பெருங்கடல்களில் அதிக வலுவாக வீசுகின்றன. இவற்றை $40^{o}$ தென் அட்சங்களில் நாற்பதில் கர்ஜனை என்றும் $50^{o}$ தென் அட்சங்களில் ''ஐம்பதில் தீவிரக் காற்று'' என்றும் $60^{o}$ தென் அட்சங்களில் ''அறுபதில் கூச்சலிடும் காற்று'' என்று அழைக்கிறார்கள்.

- **துருவக் காற்றுகள் (Polar Winds):** இவற்றை மலைக் காற்றுகள் என்று அழைப்பார்கள். இவை துருவ உயர் அழுத்த மண்டலத்திலிருந்து துணை துருவ தாழ்வழுத்த மண்டலத்தை நோக்கி வீசுகின்றன. இவை வடஅரைக் கோளத்தில் வடகிழக்கிலிருந்து தென்மேற்கு நோக்கியும், தென் அரைக் கோளத்தில் தென் கிழக்கிலிருந்து வடமேற்கு நோக்கியும் வீசுகின்றன. குளிர்ந்த, வறண்ட இக்காற்றுகள் துருவ பனிக் கவகைப் பகுதிகளிலிருந்து வீசுகின்றன.

**2. பருவகாலக் காற்றுகள் (Seasonal Winds):** இவை காலமுறைக் காற்றுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இக்காற்று பருவத்திற் கேற்ப தன் திசையை மாற்றிக்கொள்கிறது. இந்தியாவில் வீசுகின்ற பருவக் காற்றுகள் காலமுறைக் காற்றுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்தியாவில் கோடையில் தென்மேற்கு பருவக்காற்று (மான்சூன்) தென்மேற்கிலிருந்து வடகிழக்கை நோக்கி வீசுகின்றன. இவை ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசுகின்றன. பிறகு வடகிழக்கு பருவக்காற்றுகள் செப்டம்பர் இறுதியிலிருந்து டிசம்பர் மாத இடைவரை வடகிழக்கிலிருந்து தென்மேற்கு திசை நோக்கி வீசுகின்றன.

**3. தலக்காற்றுகள் (Local Winds):** நிலையான காற்றுகள் உள்ளூர் வெப்பநிலை, அழுத்தம், ஈரப்பதங்களில் உண்டாகிற

மாற்றங்களின் விளைவாக தலக்காற்றுகள் உருவாகின்றன. இவை மலைத்தொடர்கள், பள்ளத்தாக்குகள் மற்றும் பிற உயரமான பகுதிகளைக் கடந்து செல்வதால் மாற்றங்கள் ஏற்பட்டு காற்றோட்டத்தை உருவாக்குகின்றன. முக்கியமாக, தலக்காற்றுடன் நிலக்காற்று, கடல்காற்று, மலைக்காற்று மற்றும் பிற காற்றுகளை இந்தியாவில் 'லூ' என்றும், அமெரிக்காவில் 'சினூக்' அல்லது 'பனிமுழுங்கி' என்றும், ஆல்ப்ஸ் மலையில் 'ஃபோஹ்ன்' என்றும், பிரான்சில் 'மிஸ்ட்ரல்' என்றும் சகாரா பாலைவனத்தில் 'சிராக்கொ' என்றும், ஆஸ்திரேலியாவில் அண்டார்க்டிகாவில் ப்ரிக் ஃபில்டர் என்றும் அண்டார்டிகாவில் பிளிஜர்ட் என்றும் அழைப்பார்கள்.

**4. சூறாவளிகள் மற்றும் எதிர்ச் சூறாவளிகள் (Cyclones and anti cyclones) :**

மிக அதிக அழுத்தங்களின் வேறுபாடுகளில் இவை வீசுகின்றன. இதன் கால அளவு சிறிதென்றாலும் இவை அபாயத்தையும் பேரழிவைம் ஏற்படுத்துகின்றன.

*அ) சூறாவளிகள் :* இதனை புயல்காற்று என்றும் அழைப்பார்கள். மிக அதிக தாழ்வழுத்தப் பகுதியைச் சூழ்ந்து உயர் அழுத்தமிருக்கும் நிலையிலுள்ளவை சூறாவளிகள் ஆகும்.

எனவே காற்றுகள் உயர் அழுத்த பகுதியிலிருந்து தாழ்வழுத்த பகுதியை நோக்கி சுழன்று வீசுகின்றன. இவை வட அரைக் கோளத்தில் தாழ்வழுத்தப் பகுதியைச் சுற்றி இடஞ்சுழியாக (கடிகார முள் சுற்றும் திசைக்கு எதிராக) வீசுகின்றன. இதற்கு நேர்மாறாக தென் அரைக்கோளத்தில் வலஞ்சுழியாக (கடிகார முள் இயங்கும் திசை) வீசுகின்றன. சூறாவளிகளில் இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன:

- **வெப்பமண்டல சூறாவளிகள்:** இவை வெப்ப மண்டலத்தில் மட்டுமே காணப்படுகின்றன. இவை மிக்க வலுவானவை மற்றும் பேரழிவை உண்டாக்குபவை ஆகும்.
- **மிதவெப்ப மண்டல சூறாவளிகள்:** இவை மிதவெப்ப மண்டலங்களில் காணப்படுகின்றன. வெப்பச் சூறாவளிகளோடு ஒப்பிட்டால், இவை வலுக்குறைவானவை மற்றும் இவற்றால் குறைந்தளவு சேதம் ஏற்படுகிறது.

© TNTBS NOT TO BE REPUBLISHED

சூறாவளி வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. எ.கா. சீனா மற்றும் ஜப்பானில்-டைஃபூன், அமெரிக்கா மற்றும் மெக்சிகோ - ஹரிகேன், ஆஸ்திரேலியா - வில்லி வில்லீஸ், இந்தியா - சைக்ளோன், ரஷ்யா-வேர்ல்பூல். சமீப காலங்களில் இந்தியாவையும் வலுவான சூறாவளிகள் தாக்கியுள்ளன. அவற்றுள் முக்கியமானவை: போலா, நர்கீஸ், நிஷா, ஐலா, லைலா, பிஜிலி, ஜல் தேஜ் பிபர்ஜாய், வோகா, தௌக்த, மிசாங் போன்றவை.

**ஆ) எதிர்ச் சூறாவளிகள்:** இவை சூறாவளிகளுக்கு, நேர் எதிர்மறையானவை. இவை உயர் காற்றழுத்த மண்டலங்களிலிருந்து தாழ்வழுத்த மண்டலத்தைச் சூழ்ந்த பகுதிகளை நோக்கி வீசுகின்றன. இதனை சூழ்ந்துள்ள பகுதிகளை நோக்கி மெதுவாக வீசுகின்றன. வடஅரைக் கோளத்தில் எதிர்ச் சூறாவளிகள் வலஞ்சுழியாக (கடிகார முள் சுற்றும் திசை) வீசுகின்றன. இதற்கு நேர்மாறாக தென் அரைக் கோளத்தில் இடஞ்சுழியாக (கடிகார முள் திசைக்கு எதிராக) வீசுகின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED




சூறாவளிகள் எதிர்ச்சூறாவளிகள்

**ஈரப்பதம்:** வளி மண்டலத்திலுள்ள நீராவியின் அளவே 'ஈரப்பதம்' ஆகும். ஈரப்பதத்தை அளப்பதற்கு ''ஈரப்பதமானி'' பயன்படுத்தப்படுகிறது. (Hygrometer or Psychrometer)

**வகைகள்:** வளிமண்டலத்திலுள்ள ஈரப்பத அளவை பல்வேறு முறைகளில் வெளிப்படுத்தலாம். அவற்றில் முக்கியமானவை: முழுமையான ஈரப்பதம், ஒப்பு ஈரப்பதம் குறிப்பிட்ட ஈரப்பதம்.



மேகங்களின் வகைகள்

• **முழுமையான ஈரப்பதம் (Absolute Humidity) :** வளிமண்டலத்திலுள்ள மொத்த நீராவியின் அளவு முழுமையான ஈரப்பதம் எனப்படும். இத்தகைய ஈரப்பத அளவினால் அதிகப் பலனில்லை. ஏனெனில் இது வெப்பத்தை காற்றில் தக்கவைத்துக் கொள்வதில்லை.

• **ஒப்பு ஈரப்பதம் (Relative Humidity) :** வளி மண்டலத்திலுள்ள ஈரப்பதம் அளவிற்கும் அதன் மொத்தக் கொள்ளளவிற்கும் உள்ள விகிதாச்சாரமே ஒப்பு ஈரப்பதம் எனப்படும்.

$$\text{ஒப்பு ஈரப்பதம்} = \frac{\text{காற்றிலுள்ள உண்மையான ஈரப்பதம்}}{\text{குறிப்பிட்ட வெப்ப நிலையில் காற்று தக்க வைத்துக்கொள்ளும் அதிகபட்ச ஈரப்பதம்}} \times 100$$

• **குறிப்பிட்ட ஈரப்பதம் (Specific Humidity):** குறிப்பிட்ட அளவு காற்றில் உள்ள உண்மையான நீராவியின் மொத்தம் ஆகும்.

**மேகங்கள் (Clouds):**

வளிமண்டலத்தில் வெப்பநிலை குறையும்போது, அதிலுள்ள நீர்க்கூறுகள் உறைந்து சிறு நீர்த்திவலைகள் அல்லது பனித்துகள் திரள்களாவதே 'மேகம்' எனப்படும். இவை புவியின் மேற்பரப்பிலிருந்து உயரத்தலிருக்கும்.

**மேகங்களின் வகைகள்:** மேகங்களின் வடிவம், உயரம் மற்றும் பிற இயல்புகள் அடிப்படையில் நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

NOT TO BE REPUBLISHED @KTBS

• **படை மேகங்கள் (Stratees):** இவை வளிமண்டலத்தின் கீழ்மட்டத்தில் இருக்கும். புவியின் மேற்பரப்பிலிருந்து 2 கி.மீ. உயரம் வரையில் காணப்படும். இவை மெலிதான தாள் அல்லது பரந்த படைகளாகக் காணப்படும். இவை சிறந்த வானிலைக்கு காரணியாக இருப்பதுடன் சிறிது மழைபொழிவைத் தரும்.

• **திரள் மேகங்கள் (Cumulus clouds):** இவை தட்டையான அடிபாகமும், வளைவுமாடம் போன்ற மேல்தோற்றமும் கொண்டு 'காலிபிளவர்' போன்ற வடிவத்துடன் காணப்படும். இது மழைபொழிவைத் தரும். கம்பளக் கற்றைகள் குவியலைப்போல் காட்சியளிப்பதால் இவை 'கம்பள கற்றை மேகங்கள்' என்றும் அழைக்கப்படுகிறது. இவை, கருமை, வெண்மை நிறங்களில் காணப்படும். இவை செறிவாகயிருக்கும்போது மழைபொழிவைத் தரும்.

• **கீற்று மேகங்கள் (Cirrus Clouds):** வளி மண்டலத்தில் 6 கி.மீ ஐ விட உயரத்தில் உள்ளன. இம்மேகங்கள் 'சுருள் முடியை' ஒத்திருக்கும். இறக்கை அல்லது இழையைப் போன்று தோற்றமளிக்கும். இம்மேகங்கள் பயனுள்ள வானிலை நிலவச் செய்கிறது. மேலும் இங்கு சூரியன் பிரகாசமாக ஒளி வீசுகிறான். இவை மெல்லிய வெண்ணிற இழைகளைப்போன்று திட்டுக்களாகக் காட்சியளிக்கும். 'குதிரை வால்' என்ற பிரபலமான பெயரைக் கொண்டது.

• **கார் திரள் மேகங்கள் (Nimbus Clouds):** இவை மழை தரும் மேகங்கள் மற்றும் கீழ்மட்டத்திலுள்ளன. இம்மேகங்கள் படை அல்லது திரள் மேகங்களைப் போன்ற வடிவிலிருக்கும். இவை கனமழையையும் அதிக பனிப் பொழிவையும் தருகின்றன. கார்திரள் மேகங்கள் அடர்த்தியாக இருப்பதால் கனமழை தரும் மேகங்களாக உள்ளன.

**மழை (Rainfall) :**

வளிமண்டலத்திலுள்ள நீர்க்கூறுகள் உறைந்து (சுருங்கி) புவியை வந்தடையும் நீர்த்துளிகளை 'மழை' என்று அழைப்பார்கள். மழையின் அளவை மழைமானி (Rain gauge) மூலம் அளப்பார்கள். மழையின் அளவை மிமீ அல்லது அங்குலங்களில் அறிவிப்பார்கள்.

NOT TO BE REPUBLISHED @KTBS

**மழையின் வகைகள்:** மழைப்பொழிவில் மூன்று வகைகள் உள்ளன. அவையாவன: வெப்பச்சலன மழைப்பொழிவு மலைத்தடுப்பு மழைப்பொழிவு, சூறாவளி மழைப்பொழிவு.

**வெப்பச்சலன மழைப்பொழிவு (Convectional Rainfall):** காற்று மேலெழும்பி காற்றோட்டம் உருவாகி மேலே சென்று பொழியும் மழை ''வெப்பச்சலன மழைப் பொழிவு'' எனப்படும். வெப்பநிலை அதிகமாக உள்ள இடங்களில் காற்று வெப்பமடைந்து மேல்நோக்கி வீசுகிறது. பிறகு மேலே சென்ற காற்று குளிர்ச்சியடைந்து, அதிலுள்ள நீர்க்கூறுகள் துளிகளாக விழுவதன் மூலம் மழைப்பொழிகிறது. இதுவே வெப்பச்சலன மழை ஆகும். நிலநடுக்கோட்டுப் பகுதிகளிலும் வெப்பமண்டலங்களிலும் வே காடைக்காலங்களில் இவ்வகையான மழை பொழிகிறது. நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் இதனை ''நண்பகல் மழை'' என்றும் அழைப்பார்கள். இது அதிக இடி மின்னல்களுடன் கூடியதாக நண்பகலுக்குப் பிறகு பொழிகின்றது.



வெப்பச்சலன மழைப்பொழிவு

**மலைத்தடுப்பு மழைபொழிவு (Orographic Rainfall):** இம்மழை ''மலை மழைப்பொழிவு'' என்றும் ''நிவாரண மலைப் பொழிவு'' என்றும் அழைக்கப்படுகிறது. ஈரப்பதம் மிகுந்த காற்று மலைச்சரிவால் தடுக்கப்பட்டு மேல்நோக்கி எழுகிறது. இவ்வாறு எழுந்த காற்று குளிர்விக்கப்பட்டு சுருங்கி மழைப்பொழிவைத் தருகின்றது.



மலை மழைப்பொழிவு

@KTBS NOT TO BE REPUBLISHED

இவ்வாறு பெறப்படுகின்றன மலைத்தடுப்பு மழைப்பொழிவு எனப்படும். காற்று வீசும் திசையை நோக்கி உள்ள மலைச்சரிவு அதிக மழைப்பொழிவைப் பெறுகிறது. பிறகு காற்று வீசும் திசைக்கு மறுபக்கம் உள்ள மலைச்சரிவில் காற்று கீழ்நோக்கி வீசுகிறது. இப்பகுதி மிகக் குறைந்த அளவே மழையைப் பெறுகிறது. இதனை ''மழை மறைவுப் பிரதேசம்'' (Rainshadow Region) என்று அழைப்பார்கள் எ.டு: மங்களூர்-காற்று மோதும் பக்கம், ஹாசன் - காற்றின் திசைக்கு மறுபக்கமான மழை மறைவுப் பிரதேசம்.

**சூறாவளி மழைப்பொழிவு (Cyclonic Rainfall):** வெப்ப மண்டல சூறாவளிகளில் காற்று சுழன்று மேல்நோக்கி வீசுகிறது. இதனால் காற்றிலுள்ள ஈரப்பதம் குளிர்ச்சியடைந்து கனமழை பொழிகிறது. மித வெப்பமண்டல மழைப்பொழிவு ''வளிமுக மழைப்பொழிவு'' என்றும் அழைப்பார்கள். வெப்பக்காற்றும் குளிர்க் காற்றும் சந்திக்கும் எல்லையில் நீராவி சுருங்கி மழைப்பொழிவை தருகின்றது. வெப்பம் மற்றும் குளிர் துகள்களின் இடையிலுள்ள மண்டலத்தை வளிமுகம் (Front) என்பர். இதனால் சமவெப்ப மண்டலத்தின் சூறாவளி மழையை வளிமுக மழை என்றும் அழைப்பர்.

NOT TO BE REPUBLISHED
© KTBS

**மழைப் பங்கீடு (Distribution) :** புவியின் மழைப்பொழிவு பங்கீடு ஒரு பகுதியின் நிலை மற்றும் காலநிலையைச் சார்ந்து அமைகிறது. உலகில் அதிக மழைப்பொழிவைப் பெறும் மிக முக்கியமாக பகுதிகள்; நிலநடுக்கோட்டுப் பகுதி, துணை வெப்ப மண்டலத்தின் கிழக்கு எல்லைப் பகுதிகள், மேற்கு எல்லையில் $40^{\circ}$ மற்றும் $60^{\circ}$ வடக்கு மற்றும் தெற்கு அட்சங்களுக்கு இடையேயுள்ள பகுதிகள் மற்றும் சிறிதளவு மழைப்பொழியும் பகுதிகள், துருவப் பகுதிகள், துணை வெப்ப மண்டலத்தின் மேற்குப் பகுதி மற்றும் வெப்ப மண்டல மற்றும் மிதவெப்ப மண்டலத்தின் பாலைவனங்கள் ஆகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1. இந்தியாவிலுள்ள மேகாலயா மாநிலத்தின் மௌசின்ராம் ஒரு ஆண்டில் 1140 செ.மீ. மழையை பதிவு செய்துள்ளது. இது புவியின் மிக அதிக ஈரப்பதமான இடமாகும்.
2. கர்நாடகாவிலுள்ள ஆகும்பே ‘‘தென்னிந்தியாவின் மௌசின்ராம்’’ என்றழைக்கப்படுகிறது.
3. இந்தியாவிலுள்ள ராஜஸ்தானின் ராய்லி வருடத்தில் 8 செ.மீ. மழையை மட்டுமே பெறுகிறது.
4. சித்ரதுர்கா மாவட்டத்திலுள்ள ‘‘நாயகனஹட்டி’’ யும் கர்நாடக மாநிலத்தின் மிக வறண்ட பகுதியாகும்.
5. புவியின் மீது கடந்த 200 ஆண்டுகளாகமழைப்பொழிவற்ற பகுதியென்றால் சிலி நாட்டின் வறண்ட பாலைவனமான அடகாமா ஆகும்.

## வானிலை மற்றும் காலநிலை (Weather and climate)

ஓர் இடத்தில் ஒரு நாளில் நடைபெறும் வளிமண்டல நிகழ்வுகள், அல்லது மாற்றங்கள் வானிலை எனப்படுகிறது. எ.கா. மேகமூட்டம், கடும்வெயில், தெளிவான வானிலை போன்றவை. அறிவியல் பூர்வமாக வானிலையைப் பற்றி பயில்வது ‘‘வானிலை ஆய்வியல்’’ **(Meteorology)** என்றழைக்கப்படுகிறது.

நீண்ட காலத்திற்கு மிகப்பரந்த நிலப்பரப்பில் ஏற்படும் வானிலையின் சராசரி காலநிலை என்று அழைக்கப்படுகிறது. எ.டு: நிலநடுக்கோட்டு காலநிலை, வெப்பமண்டல பருவக்காற்று காலநிலை, பாலைவனக் காலநிலை, மத்திய தரைக்கடல் காலநிலை, குண்ட்ரா (ஆர்க்டிக் பகுதியிலுள்ளது) கால நிலை போன்றவை. கால நிலையைப் பற்றி அறிவியல்பூர்வமாக பயில்வதை ‘‘காலநிலை இயல்’’ **(Climatology)** என்றழைப்பார்கள்.

ஒரு பகுதியின் காலநிலையில் மாற்றத்தை விளைவிக்கும் காரணிகளாவன: அட்சம், கடல்மட்டத்திலிருந்து உயரம், காற்றுகள், கடலிலிருந்து தூரம், நிலம் மற்றும் நீர்நிலைகளின் பங்கீடு, கடல் நீரோட்டங்கள் போன்றவை.

© KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள் :

**I. கோடிட்ட இடங்களை சரியான விடைகளால் நிரப்புக :**

1. வளிமண்டலத்திலுள்ள இரண்டு முக்கிய வாயுக்கள்..........மற்றும் ...........
2. வளி மண்டலத்தில் கீழாக உள்ள அடுக்கு .......... ஆகும்.
3. கடல் மட்டத்தில் வளி மண்டலத்தின் சராசரி அழுத்தம்.... ஆகும்.
4. மேலைக்காற்றை.............என்றும் அழைப்பார்கள்.
5. வானிலையைப் பற்றி அறிவியல்பூர்வமாக பயில்வது .......... எனப்படும்.

**II. கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிக்க :**

6. வளி மண்டலம் என்றால் என்ன?
7. வளிமண்டல அடுக்குகள் யாவை?
8. ஓசோன் அடுக்கின் முக்கியத்துவம் பற்றி வரைக.
9. அமைதி மண்டலம் என்றால் என்ன? அது எங்கு காணப்படுகிறது?
10. கோள் காற்றுகளின் வகைகளைக் குறிப்பிடுக.
11. உள்ளூர் காற்றுகள் என்றால் என்ன ? ஏதேனும் இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
12. மேகங்களின் வகைகளைக் குறிப்பிடுக.
13. வானிலை மற்றும் காலநிலையை வேறுபடுத்துக.

**III. கீழ்காண்பவற்றின் பொருளை எழுதுக :**

14. அயன் மண்டலம்
15. பொது வெப்பத் தாழ்வு வீதம்

NOT TO BE REPUBLISHED @KTBS

16. குளிர் மண்டலம்.

17. மலைத்தடுப்பு மழைப்பொழிவு

18. வானிலை ஆய்வியல்

**IV. நினைவில் கொள்ள வேண்டியவை :**

1. சூரிய கதிர் வீச்சு
2. வெப்பத் தலைகீழ் மாற்றம்
3. காற்று வேகமானி
4. நாற்பதில் கர்ஜனை
5. கார் திரள் மேகங்கள்
6. காற்று அறிவியல்

**V. செயல்பாடு :**

1. அட்ச ரேகைகளின் அடிப்படையிலான வெப்ப மண்டலங்களின் படத்தை வரைக.

* * * * *

©KTBS NOT TO BE REPUBLISHED

பொருளியல்

அத்தியாயம் 14

# பொருளியலின் பொருள் மற்றும் முக்கியத்துவம்

U7K5R2

*இந்த அத்தியாயத்தைக் கற்ற பிறகு நீங்கள் கீழ்காணும் அலகுகளை அறிந்துகொள்வீர்கள்*

- பொருளாதாரவியலின் வரையெல்லையில் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், தொழிலாளி போன்றவர்களின் முக்கியப் பங்கு
- பொருளியலினைப் பயில்வதின் முக்கியத்துவம்
- பொருளாதாரச் செயல்பாடுகளில் உற்பத்தி மற்றும் உற்பத்திக்கான காரணிகள் போன்றவற்றை வரையறுத்தல்.

NOT TO BE REPUBLISHED @KTBS

## பொருளியலின் பொருள் :

பொருளியல் ஒரு சமூக அறிவியலாகும். இது நபர்களின் பொருளாதார செயல்பாடாகும். வணிக அலகுகள், சமூக மற்றும் உலகளாவிய பொருளாதார பிரச்சனைகளைப் பற்றி விவரிக்கிறது. இவ்வுலகம் வாழ்வதற்கு ஒரு சிறந்த இடமாக அமைப்பதே பொருளியலின் அடிப்படை நோக்கமாகும். ஆகையால் பொருளியல் அறிவு அனைவருக்கும் தேவையாகும். எனில் பொருளியல் என்றால் என்ன? பொருளியலின் முக்கியத்துவம் என்ன? இவ்வனைத்து வினாக்களுக்கும் விடைகளைக் கண்டுகொள்ளுதல் மற்றும் பொருளியலின் அறிமுகம் பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பற்றி தெரிந்து கொள்வது இப்பாடத்தின் நோக்கமாகும்.

இந்தியர்கள் பழங்காலத்திலிருந்தே மனிதனின் பொருளாதாரச் செயல்பாடுகளைப் பயில்வதற்கு பெருமளவு முக்கியத்துவம் அளித்துள்ளார்கள். மனுஸ்மிருதியில் வேளாண்மை, கைத்தொழில், வரி, வருமானம் போன்ற பொருளாதாரச் செய்திகள் பற்றி விரிவான தகவல்கள்

கிடைக்கின்றன. மௌரியர்கள் காலகட்டத்தில் கௌடில்யன் பொருளியல் (அர்த்தசாஸ்திரம்) என்ற நூலை எழுதியுள்ளான். ஆட்சி நிர்வாக விவரங்களுடன் பொருளாதார நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் பொருளாதாரம் பற்றியும் விரிவான தகவல்களை இந்நூலில் காணலாம்.

பொருளியல் என்ற சொல் ஆங்கில மொழியின் 'எகனாமிக்ஸ் என்ற சொல்லிற்கு இணையாகப் பயன்படுத்தப் படுகிறது. எகனாமிக்ஸ் என்ற சொல் கிரேக்க மொழி சொற்கள் 'ஓகோஸ்' மற்றும் 'நொமொஸ்' என்ற சொற்களில் இருந்து வந்துள்ளன. கிரேக்க மொழியில் ஓகோஸ் என்றால் வீடு என்றும், நொமொஸ் என்றால் நிர்வாகம் என்றும் பொருள். எனவே, வளங்களை மிக நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் நலமாக வாழும் வகை செய்வதே எகனாமிக்ஸ் எனபதன் பொருள் ஆகும். காலவோட்டத்தில், பொருளியலின் வரையெல்லை தேச மற்றும் சர்வதேச எல்லைவரை பரவியுள்ளது.

பொருளியலின் கருப்பொருள் காலத்திற்கு காலம் மாறிக் கொண்டே வந்துள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் பொருளியலின் தந்தை 'ஆடம்ஸ்மித்' அவர்கள் பொருளியல் செல்வத்தை அடிப்படையாகக் கொண்டது என்று மொழிந்தார்.

@KTBS NOT TO BE REPUBLISHED

### பொருளியல் பயில்வதன் முக்கியத்துவம்!

மனிதனின் பெரும்பாலான செயல்பாடுகள் பொருளாதாரக் கருத்துக்களை கொண்டுள்ளன. பொருளியல் நமது வாழ்க்கைக்கு பல வகைகளில் துணைபுரிகிறது. ஒவ்வொரு குடிமகனும் பொருளியலைப் பற்றி அறிவைப் பெறவேண்டும். பொருளியல் பயிலுவதன் முக்கியத்துவத்தை கீழ்க்காணும் கருத்துகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

- பொருளியல், நமக்கு அருகாமையில் காணப்படும் ஏழ்மை, வேலைவாய்ப்பின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வு முதலிய பிரச்சனைகளை புரிந்து கொள்ளவும் அவற்றிற்கான தீர்வுகளைக் கண்டு கொள்ளவும் துணை புரிகிறது.

- நம்மிடமுள்ள குறிப்பிட்ட வருவாயைக் கொண்டு நமது எல்லையற்ற தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிக்கையில் தேர்ந்தெடுக்கும் பிரச்சனைகள் விளைகின்றன. இத்தகைய சூழல்களுக்கான தீர்வுகளைப் பொருளியல் அளிக்கிறது.

- உற்பத்தியாளர்கள் பொருட்கள் மற்றும் சேவை களை உற்பத்தி செய்ய முன்வருகையில், என்ன உற்பத்தி செய்ய வேண்டும்? எப்படி உற்பத்தி செய்ய வேண்டும்? யாருக்காக உற்பத்தி செய்ய வேண்டும்? என்ன விலையில் உற்பத்தி செய்ய வேண்டும்? போன்ற அடிப்படை சிக்கல்கள் எதிராகின்றன. இத்தகைய தருவாய்களில் பொருளியல் நமக்கு வழிகாட்டுகிறது.

- விலைகளின் ஏற்றத்தாழ்விற்கான காரணங்கள் மற்றும் விளைவுகளை அடையாளம் கண்டு அறிந்து நிலைத்தன்மையைப் பாதுகாக்கும் வழிமுறைகளைப் பொருளியல் வழங்குகிறது.

- புவி, நீர், காடு, கனிமம் போன்ற இயற்கை வளங்கள் குறிப்பிட்ட அளவில் உள்ளன. அவற்றை கவனமாகவும் திறமையுடனும் பயன்படுத்தவும், இவ்வளங்களை அடுத்த தலைமுறையினர் பெறுவதற்கான வழிவகை களைப் பொருளியல் அறிவுறுத்துகிறது.

இவ்வாறு பொருளியல் நமது அன்றாட வாழ்க்கைக்குத் துணை புரிகிறது. ஆகையால், பொருளியல் பயில்வது நமக்கு அறிவை அளிப்பதுடன் இலாபகரமான தாகவும் விளங்குகிறது.

> பொருளியல் பயில்வது அறிவைப் புகட்டு வதுடன் இலாபகரமான தாகவும் விளங்குகிறது.
>
> ஏ.சி. பிகு

**பொருளாதார செயல்பாடுகள் :**

மனிதனின் தேவைகள் அளவற்றது என்று நாம் அறிவோம். இத்தேவைகளை நிறைவேற்றுவது பொருள் மற்றும் சேவைகள் ஆகும். இதனைப் பயன்பாடு' என்கிறோம். எ.டு : நமக்குப்

NOT TO BE REPUBLISHED ©KTBS

> அனைத்து பொருளாதார செயல்பாடுகளுக்கும் அடிப்படை, தேவைகள் ஆகும்.

பசி எடுக்கும் போது உணவு உண்கிறோம். இத்தேவையை நிறைவேற்றும் ஆற்றல் உணவு ஆகும். தாகம் எடுத்தால் நீர் குடிக்க வேண்டிய தேவையுள்ளது. தாகத்தைத் தணிக்கும் ஆற்றல் நீருக்கு உள்ளது. நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளின் பற்றாக்குறையில் அவை நமக்கு இலவசமாக கிடைப்பதில்லை.

பணம் கொடுத்து வாங்கவேண்டும். இத்தகையை பொருள் சேவைகளைப் பொருளாதாரப் பொருட்கள் - சேவைகள் என்பார்கள். அவ்வாறெனில், நமக்குப் பணம் எவ்வாறு கிடைக்கிறது? நமக்குப் பணம் கிடைக்க நாம் ஏதேனும் பணி செய்ய வேண்டும். இவ்வாறு மனிதன் தனது உழைப்பு மற்றும் திறமையைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கிறான். அந்த பணத்தின் மூலம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கிறான். மனிதன் பணத்தையும் செல்வத்தையும் பெறுவதற்கு, அதன் மூலம் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் பல செயல்பாடுகளில் ஈடுபடுகிறான். இத்தகைய செயல்பாடுகளை பொருளாதார செயல்பாடுகள் என்பார்கள்.

பொருளாதார செயல்பாடுகளின் மிக முக்கிய நோக்கம் மனிதனின் தேவைகளை நிறைவேற்றுவது ஆகும். ஒவ்வொரு சமூகத்திலும் பொருளாதார செயல்பாடுகள் சில விதி மற்றும் மரபுகளின் கட்டமைப்பில் நடை பெறுகின்றன. மனிதனின் பொருளாதாரச் செயல்பாடுகளை நான்கு முக்கிய குழுக்களாக வகைப்படுத்தலாம். அவையாவன.

1. ***உற்பத்தி செயல்பாடுகள் :*** பொருள் - சேவைகளை உற்பத்தி செய்ய மேற்கோள்ளும் செயல்பாடுகளே உற்பத்தி செயல்பாடுகள் ஆகும். எ.டு. வேளாண்மை, பிராணி வளர்ப்பு, மீன்பிடித்தல், சுரங்கத்தொழில், காடு வளர்த்தல், பல்வேறு முறையான கைத்தொழில்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்றவை.

NOT TO BE REPUBLISHED @KTBS

2. **நுகர்வு செயல்பாடுகள் :** நுகர்தலுக்காக பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மனிதன் பொருள் - சேவைகள் மூலமாக தனது தேவை களை நிறைவேற்றிக் கொள்கிறான். இவையனைத்தும் நுகர்தல் செயல்பாடுகளைக் கொண்டுள்ளன.

3. **பரிமாற்றச் செயல்பாடுகள் :** உற்பத்தியாளர்கள் நுகர்வோர்களுக்காக பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்த பொருட்களை நுகர் வோர்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு விற்பனை முறை உள்ளது. இங்கு பொருட்களின் சேகரிப்பு, போக்குவரத்து, மற்றும் விற்பனை செய்யும் மற்றும் வாங்கும் செயல்பாடுகள் நடை பெறுகின்றன.

4. **விநியோக செயல்பாடுகள்:** உற்பத்தியிலிருந்து கிடைக்கும் வருவாயை உற்பத்திக்கு உதவிபுரிந்த உற்பத்தியின் காரணிகளுக்குப் பங்கீடு செய்ய வேண்டும். உற்பத்திக்கான காரணிகளின் விலையைத் தீர்மானிக்க மேற்கொள்ளும் செயல்பாடுகளை இது உள்ளடக்கி உள்ளது. வருவாயை அனைத்து மக்க ளுக்கும் நியாயமான முறையில் பங்கீடு செய்வதற்கான முறையை மேற்கொள்ள வேண்டும்.

மனிதன் அன்றாட வாழ்க்கையில் பொருளாதார செயல்பாடுகளில் மட்டுமே ஈடுபட்டுக் கொண்டிருப்பதில்லை. அவன் சமூக கலாச்சார, அரசியல், கல்வி மற்றும் மதம் போன்ற பல்வேறு பொருளாதாரமல்லாத செயல்பாடுகளிலும் ஈடுபடுகிறான், பொருளாதாரமில்லாத சில செயல்பாடுகள் சில நேரங்களில் பொருளாதார செயல்பாடாக இருக்கக்கூடும். எடுத்துக்காட்டாக ஆசிரியர் வீட்டில் இலவசமாக பாடம் கற்பித்தால், அது பொருளாதார செயல்பாடாகாது. ஆனால் அந்த ஆசிரியர் பணத்திற்காக வீட்டில் பாடத்தை நடத்தினால் அது பொருளாதார செயல்பாடாகிறது.

©KTBS NOT TO BE REPUBLISHED

## பயிற்சிகள்

**I. விடுப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களால் நிரப்புக.**

1. பொருளியலின் மூலச் சொல் கிரேக்க மொழியின் ________ மற்றும் ________ என்ற இரண்டு சொற்களால் ஆனது.
2. மௌரியரின் சபையிலிருந்த கௌடில்யர் எழுதிய நூல் ________
3. பொருள்-சேவைகள் மனிதனின் தேவையை நிறைவேற்றும் இயல்பை ________ என்பார்கள்.
4. பணத்திற்காக செய்யும் உடல் மற்றும் அறிவுசார் வேலையை ________ என்று அழைப்பார்கள்.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஒரு வாக்கியத்தில் விடையளிக்க:**

5. பொருளியல் என்றால் என்ன?
6. பொருளியல் தந்தை என்று குறிப்பிட்டப்படுபவர் யார்?
7. பொருளாதார செயல்பாடுகள் என்றால் என்ன?
8. ஒரு மாணவன் பேனாவை விலைக்கு வாங்கி எழுதப் பயன்படுத்துகிறான். இது எவ்வகையான செயல்பாடு?

**III. கீழ்க்காணும் வினாக்களுக்கு நான்கைந்து வாக்கியங்களில் விடையளிக்க:**

9. மனிதனின் பொருளாதார செயல்பாடுகள் யாவை?
10 பொருளியலை நாம் ஏன் பயில வேண்டும்?

@KTBS NOT TO BE REPUBLISHED

11. காலத்திற்கு காலம் பொருளியலின் பொருள் எவ்வாறு மாறியுள்ளது ?

## IV. செயல்பாடுகள்:

1. உங்கள் குடும்ப உறுப்பினர்கள் மேற்கொண்ட பொருளாதார செயல்பாடுகளை பட்டியல் செய்யவும்.

2. உங்களைச் சுற்றியுள்ள அல்லது உங்கள் கிராமத்தில் உள்ள மக்கள் ஈடுபட்டிருக்கும் பொருளாதார செயல்பாடுகளைக் குறிப்பிடவும்.

3. அன்றாடம் நீங்கள் நுகரும் பொருட்களைப் பட்டியல் செய்யவும்.

4. உழவர் தமது வயலில் என்ன பயிரை விளைவிக்க வேண்டுமென்று எவ்வாறு தீர்மானிப்பார்கள் என்பதைக் கவனிக்கவும்.

* * * * *

@KTBS NOT TO BE REPUBLISHED

வணிகவியல்

அத்தியாயம் 15

K8J7X9

# வணிகம் - பொருள் மற்றும் முக்கியத்துவம்.

*இந்த அத்தியாயத்தை படித்தபிறகு நீங்கள் கீழ்காணும் அலகுகளை அறிந்துகொள்வீர்கள்*

- வணிகத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுதல்.
- உள்நாட்டு வணிகம், அயல்நாட்டு வணிகம், நிறுவன வணிகங்களின்பொருள், வகைகள் மற்றும் முக்கியத்துவம்
- குடிசைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்கள் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் சிக்கல்கள்
- வணிக நெறிமுறை (அறநெறி)கள்

© KTBS NOT TO BE REPUBLISHED

வணிகம் ஒரு முக்கியமான பொருளாதாரச் செயல்பாடு ஆகும். இது முக்கியமாக பொருட்களின் உற்பத்தி மற்றும் நுகர்வோர்களுக்கு வழங்கும் சேவைகளை நிறைவேற்றுகிறது.

வணிகம் இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது அவையாவன:

(1) பொருளாதார நோக்கங்கள் (2) சமூக நோக்கங்கள்

**1. பொருளாதார நோக்கங்கள் :** வணிகத்தின் முக்கிய நோக்கம் இலாபம் அடைவதே என்று நாம் பொதுவாக எண்ணுகிறோம். நியாயமான இலாபம் அடைவது ஒரு நோக்கமாக இருந்தாலும், வணிகம் சமூகமாக நடைபெறுவதற்குத் தேவையான செலவைப் பூர்த்தி செய்து, வணிகன் வசதியான வாழ்க்கை நடத்துவதற்கு தேவையான அளவு இருக்க வேண்டும். வணிகம் பொருட்கள் மற்றும் சேவைகளை நூகர்வோரின் தேவைகளை நிறைவேற்றுகிறது மற்றும் நுகர்வோர்களை உருவாக்குகிறது. இது வளங்களைப் பயன்படுத்தி. பொருட்களை போதியளவு உற்பத்தி செய்கிறது. காலத்திற்கேற்ப நுகர்வோருக்குத் தேவையான புதிய மாற்றங்களுக்கேற்றவாறு பொருட்களை உற்பத்தி செய்கிறது. புதிய ஆராய்ச்சிகளின் மூலம் உற்பத்தியில் மாற்றங்களை கொண்டுவருகிறது. புதிய உற்பத்திப் பொருட்களைப் பற்றி விளம்பரங்களின் மூலம் நுகர்வோருக்கு அறிவிக்கிறது.

**2. சமூக நோக்கங்கள் :** வணிகம், நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து வழங்குகிறது. பல பொது மக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுக்கு ஊதியம் அல்லது கூலி மூலம் வருவாயை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதற்குத் துணைபுரிகிறது. விலை, தீர்வை மற்றும் வரிகளைச் செலுத்துவதன் மூலம் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கச் செய்து நாட்டின் வளர்ச்சிக்கு துணைபுரிகிறது. பள்ளி, கல்லூரிகள், மருத்துவமனைகள், சமூகக்கூடங்கள், போன்றவற்றைத் தொடங்கி, அவற்றின் மேலாண்மைப் பொறுப்பை பெற்றிருக்கிறது. பூங்காக்கள், விளையாட்டு அரங்கங்களின் மேலாண்மை மூலம் சமூக நலத்திற்காகப் பயன்படுகிறது.

**வியாபாரம் நிறுவனம் மற்றும் சேவைகள் :** வர்த்தகமும் வணிகத்தின் ஒரு பகுதியாகும். பொருட்களை வாங்குதல் மற்றும் நுகர்வோருக்கு விற்பனை செய்தலை வர்த்தகம் என்கிறோம்.

**இதனை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.**

அவையாவன (1) உள்துறை அல்லது உள் நாட்டு வியாபாரம் (2) வெளிநாட்டு அல்லது பன்னாட்டு வியாபாரம்

***1. உள்துறை அல்லது உள் நாட்டு வியாபாரம் :*** ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வியாபாரம் உள் நாட்டு வியாபாரம் எனப்படும். இந்த வியாபாரம் மொத்த வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளால் நடை பெறும் வணிகமாகும்.

**சில்லறை வியாபாரிகள் :** பொதுவாக இவர்கள் நுகர்வோர் வசிக்குமிடங்களில் தங்களது வியாபாரங்களை நடத்துவார்கள். இவர்கள் மொத்த வியாபாரிகளிடமிருந்து அதிகளவு பொருட்களை வாங்கி சிறிய அளவில் நுகர்வோருக்கு விற்பனை செய்யவார்கள். இதன் மூலம் நாம் மிகுந்த பயனடைகிறோம். சில்லறை வியாபாரிகள் வழங்குதலின் இறுதி நிலையில் இருப்பவர்கள். வெவ்வேறு உற்பத்தியாளர்களிடமிருந்து

NOT TO BE REPUBLISHED ©KTBS

பொருட்களை மொத்த வியாபாரிகளிடமிருந்து வாங்கி நுகர்வோருக்கு வழங்குவார்கள். பலமுறை வியாபாரத்தில் ஏற்படும் நட்டங்களை தாங்களே ஈடுகட்டிக் கொள்கிறார்கள். பொருட்களைத் தரவாரியாகப் பிரித்து நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப அவர்களுக்கு வழங்குகிறார்கள். நுகர்வோருக்கு கடன் வசதிகளை வழங்குகிறார்கள். சந்தைக்குப் புதிதாக வந்திருக்கும் பொருட்களைப் பற்றிய தகவலை வழங்குவார்கள். ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருள் கிடைக்கவில்லையெனில், அதற்கு மாற்றான பொருட்களைப் பற்றி தெரிவிப்பார்கள். இந்த சில்லறை வியாபாரம் வெவ்வேறு முறைகளில் நடைபெறுகிறது. இவற்றுள் முக்கியமானவை, நிலையான கடைகள் மற்றும் நடமாடும் வியாபாரிகள்.

**நிலையான கடைகள் :** ஒரு குறிப்பிட்ட இடத்தில் கடையைத் திறந்து பொருட்களை விற்பனை செய்வார்கள். (வியாபாரிகளை வர்த்தகர் என்றும் அழைப்பார்கள்)



நிலையான கடைகள்

NOT TO BE REPUBLISHED ©KTBS

**நடமாடும் வியாபாரிகள் :** இவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வியாபாரம் செய்வதில்லை. இவர்களில் முக்கியமானவர்கள், தலையில் சுமந்து விற்பவர்கள், தள்ளுவண்டியில் விற்பவர்கள், நடைபாதை வியாபாரிகள் மற்றும் சந்தை வியாபாரிகள் ஆகும்.

**தலையில் சுமந்து விற்பவர் :** இவர்கள் பொருட்களை தலைமீது சுமந்து கொண்டு தெருத் தெருவாகச் சுற்றி வீட்டு வாயிற்களுக்கு சென்று விற்பனை செய்வார்கள்.இவர்கள் பொதுவாக ஒரே மாதியான பொருட்களை விற்பார்கள். எ.டு: காய்கறி விற்பவர்கள், பூ வியாபாரிகள்.



தலையில்சுமந்து விற்பவர்கள்

@KTBS NOT TO BE REPUBLISHED



தள்ளுவண்டி வியாபாரி

**த ள் ளு வ ண் டி வியாபாரிகள்:** இவர்கள் பல பொருட்களை தள்ளு வண்டியில் நிரப்பி தெருத் தெருவாக அலைந்து வீட்டு வாயிற்களுக்கு சென்று பொருட்களை வி ற் ப னை செய்வார்கள்.

**நடைபாதை வியாபாரிகள் :** இவர்கள் மக்கள் மிகுதியாக வசிக்கும் தெருக்களின் மூ லை க ளி லே ா , ந டை பா தை யி லே ா பொருட்களைப் பரப்பி வைத்து வியாபாரம் செய்வார்கள்.



**நடைபாதை வியாபாரி**

**சந்தை வியாபாரிகள்** : சில ஊர்களில் வாரத்திற்கொரு முறை சந்தை கூடுகிறது. பல்வேறு பொருட்களை விற்பனை செய்பவர்கள் தங்களது பொருட்களைச் சந்தைக்கு கொண்டு சென்று, அங்கு வருகின்ற அண்டை அயலிலுள்ள கிராமத்து மக்களுக்குப் பொருட்களை விற்பனை செய்வார்கள். மற்றொரு சிறப்பு என்னவென்றால், கிராமத்து மக்கள் தாங்கள் விளைவித்தபொருட்கள் அல்லது உற்பத்தி செய்த பொருட்களை இங்கு எடுத்து வந்து விற்பனை செய்வார்கள். எ.டு: காய்கறி, முட்டை, வெண்ணெய், நெய், இரும்புப் பொருட்கள், கூடைகள், கம்பளி போன்றவை. இவர்கள் விற்பனை செய்து ஈட்டிய பணத்தைக் கொடுத்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள். இதுமட்டுமல்லாது, சில ஊர்களில் ஆண்டுக்கொரு முறை திருவிழாக்கள் நடைபெறுகின்றன. விபாயாரிகள் அவ்விடங்களுக்கும் சென்று தங்களது பொருட்களை நுகர்வோருக்கு விற்பனை செய்கிறார்கள்.



© KTBS NOT TO BE REPUBLISHED

**சந்தை வியாபாரிகள்**

**மொத்த வியாபாரம் (Whole sale trade)** : இந்த வியாபாரத்தில் வியாபாரிகள் பொருட்களை அதிகளவில் உற்பத்தியாளர்களிடமிருந்து வாங்கி, சிறிய அளவில் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். மொத்த வியாபாரிகள் ஒன்று அல்லது இரண்டு வகைப் பொருட்களை விற்பனை செய்கிறார்கள்.

1) இவர்கள் சில்லறை வியாபாரிகளுக்கு பல வகைகளில் உதவுகிறார்கள்.

2) காலத்திற்கேற்ப சிறிய அளவில் பொருட்களை அளித்துதவி, அவர்களுக்கு கடன் வசதிகளையும் அளிப்பார்கள்.

3) அவர்களுக்காக விளம்பரம் செய்வார்கள்.

4) சந்தைகளின் தகவல்களையும் வழங்குவார்கள்.

5) அதிகளவு இலாபம் வைத்திருப்பதில்லை.

6) உற்பத்தியாளர்களும் சந்தை நிலவரங்களையும், விலை ஏற்றத் தாழ்வுகளையும், நுகர்வோரின் விருப்பங்களையும் தெரிவிப்பார்கள்.

7) உற்பத்தியாளர்கள் சார்பாக விளம்பரம் செய்வார்கள்.

8) உற்பத்திப் பொருட்களை சேகரித்து வைத்துக் கொள்ள உதவி செய்வார்கள்.

**வெளிநாட்டு வியாபாரம் :** இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெறும் வியாபாரத்தை வெளியாட்டு வியாபாரம் என்றழைக்கிறோம். வெளிநாட்டு வியாபாரத்தை மூன்று வகை களாகப் பிரிக்கலாம். அவையாவன: ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மறு ஏற்றுமதி வியாபாரம்.

அ) **ஏற்றமதி :** உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை வெளி நாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

ஆ) **இறக்குமதி :** உள்நாட்டுத் தேவைக்காக வெளிநாட்டில் இருந்து பொருட்களை வாங்குவதே இறக்குமதி வியாபாரம் ஆகும்.

இ) **மறு ஏற்றுமதி :** ஒரு நாட்டிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும். எ.டு: சிங்கப்பூர், சில மத்திய ஆசிய நாடுகள். சமீபகாலமாக உலகின் பல நாடுகள் இவ்வகையான வியாபாரம் செய்கின்றன.

©KTBS NOT TO BE REPUBLISHED

**வெளிநாட்டு வியாபாரத்தின் அவசியம் :**

உலகின் எந்தவொரு நாட்டிலும் அனைத்து வளங்களும் நிறைவாக இருப்பதில்லை. சில நாடுகளில் சில வளங்கள் ஏராளமாக கிடைக்கின்றன. இவ்வளங்களைப் பயன்படுத்தி சில பொருட்களை மிகுதியாக உற்பத்தி செய்கிறார்கள். நாட்டின் தேவை நிறைவுற்ற பிறகு, மீதமுள்ள பொருட்களை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அவ்வாறே எந்த நாடு களில் வளங்களின் பற்றாக்குறை உள்ளதோ, அந்நாடுகள் பற்றாக்குறையுள்ள பொருட்களை வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கிறார்கள். இதனால், ஒவ்வொரு நாட்டிற்கும் வெளிநாட்டு வியாபாரத்தின் தேவை உள்ளது. இது நாள்தோறும் அதிகரித்துக் கொண்டேயுள்ளது. இது நாடு களுக்கிடையே நட்புறவை வளர்க்கிறது.

**தொழில் நிறுவனங்கள் :** இவை ஒரு பொருளாதாரச் செயல்பாடு ஆகும். தொழில் நிறுவனங்கள், பொருட்களின் உற்பத்தி, கனிமங்களைத் தோண்டி எடுத்தல், சில சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளைக் கொண்டுள்ளன. இவை முதன்மை நிறுவனங்கள் மற்றும் இரண்டாம் நிலை நிறுவனங்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. (இவற்றை தொழில்கள் என்றும் அழைப்பார்)

NOT TO BE REPUBLISHED @KTBS

**தொழிற்சாலைகள்**

- முதன்மைத் தொழில்ககள்
  - மரபு (இன) அறிவியல் தொழில்கள் (Genetic)
  - சுரங்கத் தொழில் (Extractive)
- இரண்டாம் நிலைதொழில்கள்
  - உற்பத்தித் தொழிற் சாலைகள் (Manufacturing)
  - நிர்மானத் தொழிற் சாலைகள் Constructive)

**முதன்மை தொழில் நிறுவனங்கள் :** இயற்கை வளங்கள் மூலம் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இதுவாகும். எ.டு: வேளாண்மை, மீன்பிடித்தல், பால் பண்ணைத் தொழில், சுரங்கத் தொழில் போன்றவை. இவை மரபு அறிவியல்

நிறுவனங்கள் மற்றும் சுரங்கத் தொழில் நிறுவனங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**(அ) மரபு அறிவியல் தொழில் நிறுவனங்கள் :** இத் தொழிலகங்கள் பல வகையான தானியங்கள், தாவரங்கள் மற்றும் விலங்குகளின் மறு உற்பத்தியில் ஈடுபடுகின்றன. இவை விற்பனையின் மூலம் பெறும் இலாபத்தைக் கொண்டு செல்வத்தைப் பெருக்குகின்றன. எ.கா: தோட்டவேலை, பால்பண்ணை அமைத்தல், கோழி வளர்ப்பு போன்றவை.

**(ஆ)சுரங்கத் தொழில் நிறுவனங்கள் :** இந்நிறுவனங்கள் புவியின் அடித்தளத்திலிருந்து பல்வேறு வடிவ மூலப் பொருட்களை (கச்சாப்பொருட்கள்) தோண்டியெடுப்பதில் ஈடுபடுகின்றன. (இது புதுப்பிக்கயியலாத தொழில் என்று அழைப்பார்கள்). எ.கா: பல்வேறு தாதுப்பொருட்களை தோண்டி எடுத்தல், எண்ணெய் கிணறுகளைத் துளையிடுதல் போன்றவை.

**இரண்டாம் நிலை தொழில் நிறுவனங்கள் :** இங்கு உழைப்பு தான் முக்கியமானது. (உழைப்பு சார் நிறுவனம்) இங்கு மனிதனின் பங்கு முக்கியமானது. இவை உற்பத்தித் தொழில் நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்பு (நிர்மாண) தொழில் நிறுவனங்களாக பிரிக்கப்படுகின்றன.

**(அ) உற்பத்தி தொழில் நிறுவனங்கள்:** இவை கச்சாப் பொருட்களை அல்லது பொருட்களை முடிவுப் (நிறைவுப்) பொருளாக மாற்றுகின்றன. இந்நிறுவனங்கள் மனித உழைப்பை மிகுதியாகப் பயன்படுத்துகின்றன. நுகர்வோரின் பெரும்பாலான தேவைகளை நிறைவேற்றுகின்றன. எ.கா: இரும்பு தாதுவை எஃகு ஆக மாற்றுதல், கரும்பிலிருந்து சர்க்கரை எடுத்தல்.

**(ஆ)கட்டமைப்பு (நிர்மாண) தொழில் நிறுவனங்கள் :** இவை, சாலை, கணவாய், பாலங்கள் முதலிய அடிப்படை வசதிகளைக் கட்டமைக்க உழைக்கின்றன. இதன் மூலம் முதன்மையான பொருளாதாரச் செயல்பாடுகளான போக்குவரத்து, மற்றும் தொலைத்தொடர்பு போன்றவை அதிக விரைவாக வளர்ச்சியடைகின்றன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

**குடிசைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில்களின் நிறுவனங்கள் :** குடிசைத் தொழில் வீட்டுத் தொழில் என்றும் அழைக்கப்படுகிறது. இவற்றைக் கைத்தொழில் செய்பவர்கள் தமது வீட்டிலேயே செய்கிறார்கள். இவர்களுக்கு அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பணி பயிற்சி பெறுபவர்கள் (Apprentice) துணை புரிவார்கள். இத்தொழில் கிராமங்களை மையமாகக் கொண்டவை. இவை உள்ளூர் சந்தைகளுக்காக பொருட்களை உற்பத்தி செய்கின்றன. மூங்கில் கூடை கள், மரப்பொருட்கள். பாய்கள், கற்சிலைகள், பானைகள், செய்யுதல், இரும்புருக்குதல் போன்றவை இத்தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டவை.

**சிறுதொழில் நிறுவனங்கள் :** ஒரு குறிப்பிட்ட இடத்தில் (கட்டடத்தில்) நிறுவப்படுகின்றன. கூலித் தொழிலாளர்களை நியமிக்கின்றன. கச்சாப் பொருட்களை சேகரித்து சிறிய அளவில் பொருட்களை உற்பத்தி செய்கின்றன. சிறு இயந்திரங்களையும் மின்னாற்றலையும் பயன் படுத்துகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உள்ளூர் சந்தை அல்லது வெளி நாட்டு சந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் எடுத்துக் காட்டுகள்: வேதியியல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், காலணிகள், மிதிவண்டிகள், வானொலி, தையல் இயந்திரங்கள் போன்றவை.

©KTBS NOT TO BE REPUBLISHED



குடிசைத் தொழில்கள்

**வணிகத்தையும் வியாபாரத்தையும் சீராக நடத்துவதற்கான சேவைகள் :** வணிகத்தை சீராக நடத்துவதற்கு வியாபாரம் தொடர்பான சேவைகள் வழக்கத்தில் வந்துள்ளன. இவை வணிகத் துணைக்கருவி அல்லது வணிகச் சேவைகள் என்று அழைப்பார்கள் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலிருந்து நுகர்வோருக்குக் கொண்டு செல்ல சில தடங்கல்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவை; இடங்களில் தடங்கல். நட்டமடையக்கூடிய அச்சம், நேரத்தடங்கல், பொருளாதார பற்றாக்குறை, அறிவுக் குறைபாடு போன்றவை முக்கியமான தடங்கல்களாகும். இத்தடங்கல்களைக் களைவதற்கு சில சேவைகள் வசதி செய்கின்றன. இவை வியாபாரத் தொடர்புகள் எனப்படும்.

***1) இடத்தடங்கல் - போக்குவரத்து :*** இடத்தடங்கலைப் போக்குவதற்கு போக்குவரவு அமைப்பான போக்குவரத்துச் சேவைகள் பயன்படுத்தப்படுகின்றன. சாலைப் போக்குவரத்து, இரயில் போக்குவரத்து, நீர்ப்போக்குவரத்து மற்றும் ஆகாயப் போக்குவரத்து போன்றவை மேலும் வெவ்வேறு ஊடகங்களும் உள்ளன. இவை உற்பத்தியாளர்களிடமிருந்து வியாபாரிகளுக்கும், வியாபாரிகளிடமிருந்து நுகர்வோருக்கு உற்பத்திப் பொருட்களை வழங்குவதற்கு துணை புரிகின்றன.

***2) பொருளாதாரச் சேவைகள் - வங்கிகள் :*** உற்பத்தியாளர்களிடம் இருந்து நுகர்வோருக்குப் பொருட்களை வழங்கும் போது பொருளாதாரச் சிக்கல்கள் உண்டாகின்றன. பொருளாதாரம் அனைத்து படிநிலைகளிலும் மிகத் தேவையானது ஆகும். பொருட்களை பரிமாறிக் கொள்வதற்குக் கூட பொருளாதார ஊடகம் தேவைப்படுகிறது. இச்சிக்கல்களை வங்கிகள் மற்றும் பிற பொருளாதார நிறுவனங்கள் தீர்த்து வைக்கின்றன. வங்கிகள் வியாபாரிகளுக்குப் போதியளவு பொருளாதார வசதி செய்து கொடுக்கிறது. மேலும் வியாபாரம் சீராக நடைபெற சேவை புரிகிறது.

NOT TO BE REPUBLISHED @TBS

***3) நட்டமடையக் கூடிய அச்சம் காப்பீடு நிறுவனங்கள் :*** பொருட்களை உற்பத்தியாளர்களிட மிருந்து நுகர்வோருக்கு எடுத்துச் செல்லும்போது அல்லது அவற்றை கிடங்குகளில் சேகரித்து வைக்கும்போது சேதமடையலாம் அல்லது நாசமாகலாம். இதனால் தரக் குறைபாடுகள் ஏற்படலாம். எனவே அபயாங்களால் (இடர்பாடுகள்) உண்டாகும் நட்டத்தை ஈடுகட்டுவதற்கு காப்பீட்டு வசதிகள் உள்ளன. இவற்றில் தீக்காப்பீடு மற்றும் நீர்சார் காப்பீடு முக்கியமானவை. இவ்வகையில் காப்பீட்டு நிறுவனங்கள் வியாபாரம் சீரான முறையில் நடைபெற சேவை புரிகின்றன.

***4) நேரத்தடங்கள் - சேகரிப்பு :*** பொருட்களின் உற்பத்தி மற்றும் நுகர்தல் வெவ்வேறு நேரங்களில் நடைபெறுகின்றன. ஆனால் இவற்றை நுகர்வோரின் தேவைக்கேற்ற நேரங்களில் வழங்குவதற்கு பொருட்களைச் சேகரித்து வைக்க வேண்டும் இதற்காக பண்டக சாலை (கிடங்கு) கள் உள்ளன. இக்கிடங்குகள் அறிவியல் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல குளிர்பதன கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

NOT TO BE REPUBLISHED ©KTBS

***5) அறிவுக் குறைபாடு - விளம்பரம்:*** உற்பத்தியாளர்களிடமிருந்து நுகர்வோருக்கு பொருட்களை வழங்கும்போது பல நேரங்களில் பொருட்கள் பற்றிய அறிவு அல்லது தெளிவு வழங்க வேண்டியிருக்கும். புதிய பொருட்களின் உற்பத்தியில் அல்லது மாற்றுப் பொருட்களை பயன்படுத்தும் போது விளம்பர சேவை அறிவைக் கொடுத்து வியாரபாரம் செய்ய துணை புரிகிறது.

**வணிக நெறிமுறைகள் (business Ethics):** பொதுவாக வியாபாரம் மற்றும் வணிகத்தின் முக்கிய நோக்கம் இலாபமடைதல் என்று தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அது சரியான புரிதல் அல்ல. வணிகத்தின் முக்கிய நோக்கம் வியாபார தர்மம் மற்றும் நியாமான இலாபம் அடைதலாக இருக்க வேண்டும். இவை பழங்காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்ற தொழில்கள் ஆகும். இவை நுகர்வோருக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்றன. வியாபாரிகள் தங்களது வணித்தை நடத்துவதற்கு போதியளவு இலாபத்தை

ஈட்டுவதை இலக்காகக் கொள்ள வேண்டும். இதன் மூலம் வியாபாரிகள் தொழில் தர்மத்தைக் கடைப்பிடிப்பது மற்றும் சமூகத்திற்கு சேவை புரிவதாகக் கொள்ளலாம். ஆனால் பணத் திற்காக பேராசை மற்றும் கொள்ளை இலாபம் பெறுவது வணிகத்திற்குள் நுழைந்துள்ளன. சில வியாபாரிகள் சமூக விரோத முறையில் வியாபாரம் செய்கிறார்கள். அவற்றில் கலப்படம், அதிக இலாபம், எடை மற்றும் அளவுகளில் முறைகேடு செயற்கை பற்றாக்குறை, கருப்புச் சந்தை (Black Market) வியாபாரம் போன்ற சமூக விரோத முறைகள் ஆகும். இம்முறைகளால் நுகர்வோர் மிகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர். வியாபாரத்தில் இவ்வகையான நன்னெறியற்ற முறைகளைத் தவிர்த்து வியாபார நன்னெறி முறைகளைப் பின்பற்ற வேண்டும். சமூக நன்மையே தங்களது நன்மை என்றுணர வேண்டும்.

இத்தகைய அற்நெறியற்ற முறைகளைத் தவிர்ப்பதற்கு, நமது நாட்டில் அரசாங்கம் பொதுமக்கள் விநியோக முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. தேவையான பொருட்களின் விநியோகத்திற்காக சட்டங்களை இயற்றியுள்ளது. ஒவ்வொரு தொழில் நிறுவனமும் பொருட்களின் மூடிய உரையின் மீது உற்பத்தியான தேதி, காலபயன்பாட்டு நாள், (Date of expiry கால முடிவு நாள்) எடை அல்லது அளவு மற்றும் அதிகபட்ச விலை ஆகியவற்றை அச்சடிக்க வேண்டும். பொருட்களின் தர நிலையின் மதிப்பை ஒழுங்குபடுத்த இந்திய தர நிர்ணய அமைவனம் (பணியகம்) (Bureau of Indian Standards) நிறுவப்பட்டுள்ளது. இந்நிறுவனம் பொருட்களின் தரமதிப்பை சோதித்து, தரமதிப்பு நன்றாக உள்ள பொருட்களின் மீது ISI முத்திரையை அச்சடிக்கிறது. வேளாண்மை உற்பத்தி பொருட்களின் தரமதிப்பை அறிய அக்மார்க் முத்திரை அச்சடிப்பதைக் கட்டாயப்படுத்தியுள்ளது. அரசாங்கம், நுகர்வோருக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கு நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், ஜனதா பஜார்கள், ஆகியவற்றை நிறுவியுள்ளது. அனைத்து முறைகளையும் கையாண்டாலும், வியாபாரிகள் சமூக நன்மைக்காக தொழில் தர்மத்தைப் பின்பற்றவில்லையெனில் மோசடி அல்லது ஏமாற்று

NOT TO BE REPUBLISHED @KTBS

வியாபாரமாகிறது. கட்டாயத்தின் பேரில் இதனை அமல்படுத்த இயலாது. தன்னம்பிக்கை உணர்வு வரவேண்டும். வியாபாரம், பொதுமக்களின் நலனைக் கருதி நடைபெறவேண்டும்.

### பயிற்சிகள்

**I. விடுப்பட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை நிரப்புக.**

1. மறு ஏற்றுமதி வியாபாரத்திற்கு ஒரு மிகச்சிறந்த எடுத்துக் காட்டு ____________ நகரம் ஆகும்.
2. பொதுவாக குடிசைத் தொழில்கள் ____________களை மையமாகக் கொண்டுள்ளன.
3. வேதியியல் பொருட்கள் ____________ தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.
4. வியாபாரத்தின் முக்கிய நோக்கம் ____________ இலாபம் அடைவதாக இருக்க வேண்டும்.
5. பொருட்களின் தரமதிப்பை ஒழுங்குபடுத்த ____________ நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு இரண்டு முதல் நான்கு வாக்கியங்களில் விடையளிக்க:**

6. நடமாடும் கடைகளின் வகைகள் யாவை?
7. மொத்த வியாபாரிகள் யார்?
8. வெளிநாட்டு வியாபாரத்தின் மூன்று வகைகளைக் குறிப்பிடுக.
9. குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை குறிப்பிடுக.
10. இடமின்மை மற்ற நட்டமடையும் அச்சத்தை தவிர்க்க நிறுவப்பட்டுள்ள சேவை நிறுவனங்கள் யாவை?

NOT TO BE REPUBLISHED @KTBS

11. இலாபம் அடைவதற்காக சில வியாபாரிகள் சில சமூக விரோத முறைகளைப் பின்பற்றுகிறார்கள். அவையாவை?

12. இலாபம் அடைவதற்கு சில வியாபாரிகள் சமூக விரோத முறைகளை பின்பற்றுகிறார்கள். இவற்றை கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

## III. கீழ்க்காணும் வினாக்களுக்கு எட்டு அல்லது பத்து வாக்கியங்களில் விடையளிக்க:

13. வணிகத்தின் பொருளாதார நோக்கங்கள் யாவை?

14. வணிகத்தின் சமூக நோக்கங்கள் யாவை?

15. சில்லறை வியாபாரிகளின் சேவைகளைக் குறிப்பிடுக.

16. பல்வேறு நிறை சில்லறை வியாபாரிகளைப் பட்டியல் செய்து ஒவ்வொன்றையும் குறித்து இரண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.

17. இரண்டு வகை தொழில் நிறுவனங்களைப் பற்றி சுருக்கி வரைக.

18. ஒரு நாட்டிற்கு வெளிநாட்டு வியாபாரத்தின் தேவை உள்ளதைப் பற்றி விவரிக்க.

## IV. செயல்பாடு:

19. நீங்கள் வசிக்கும் இடத்தின் அருகில் உள்ள ஏதேனும் சந்தை அல்லது திருவிழாவிற்கு சென்று, அங்கு நடைபெறும். வணிகத்தைப் பற்றி புரிந்து கொண்டு ஒரு கட்டுரை வரைக.

* * * * *

© KTBS NOT TO BE REPUBLISHED